# குத்புஜ்ஜமான்
# காஜா பஷீர் அஹ்மத்
(ரஹ்)

## வரலாறும் வழிமுறையும்

Assistant Registrar of Books
Public ... Department
Madras ...

தொகுப்பு :
...ஹு ஜமாலுத்தீன்

Q7:458wN24
N79
107761

# குத்புஜ்ஜமான்
# காஜா பஷீர் அஹ்மத் (ரஹ்)

வரலாறும் வழிமுறையும்

தொகுப்பு:
**இபுனு ஜமாலுத்தீன்**

வெளியீடு:
**ஜமால் பதிப்பகம்**
1-81, புதுத்தெரு, இரவாஞ்சேரி
தஞ்சை மாவட்டம், 609 501.

முதல் பதிப்பு ; ஜூன் 1979

**விலை ரூ. 3-50**

கிடைக்கும் இடம் :

**நூர் பதிப்பகம்**
**190, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.**

**ரசூல் நியூஸ் ஏஜன்ஸி**
**சிங்காரத் தோப்புத் தெரு,**
**பாலக்கரை, திருச்சி—8**

மவ்லானா முஹம்மத் கமாலுத்தீன் சாகிப்
**பேன்ஸி ஹால்**
ஆரணி PO. N. A. Dt

---

*மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014*

# பதிப்புரை

புகழனைத்தும் றப்புல் ஆலமீனாகிய அல்லாஹ் (ஜல்) வுக்கே உரியன. ஸலவாத்தும் ஸலாமும் எம்பெருமான் றசூலே அக்ரம் (ஸல்) அவர்கள் மீது என்றென்றும் பொழியுமாக.

புதுக்கோட்டை முன்ஷி, ஹக்கீம் முஹம்மத் அப்துஸ் ஸத்தார் அவர்களால் எழுதப்பட்ட குத்து புஜ்ஜமான் காஜா பஷீர் அஹ்மத் (ரஹ்) அவர்களின் வரலாற்றுக் குறிப்பின் கையெழுத்துப் பிரதியை அச்சிடுமாறு எனது குருநாதர் ஹக்கீம் குலாம் முஹம்மத் கசூரி அவர்கள் ஆணை பிறப்பித்தனர். அத்துடன் ஹஜ்ரத் குத்துபுல் அஃலம் மௌலானா ஹுஸைன் அஹ்மத் மதனி (ரஹ்) அவர்களின் இரு நூற்களாகிய "பைஅத் என்றால் என்ன?" என்பதின் தமிழாக்கத்தையும் "ஸலாஸிலே தய்யிபா" என்பதில் உள்ள ஞானவழி நடப்போரின் அனுஷ்டானங்கள் என்ற பகுதியின் சுருக்கத்தையும் சேர்ப்பின் பைஅத் பெற்றோருக்கு உதவியாகவும், பைஅத் பற்றி சரிவர உணராத மற்றையோருக்கும் விளக்கம் தருவ தாகவும் அமையலாம் என்ற என் விருப்பத்துக்கு குருநாதர் இசைவு தந்தனர்.

மேற்குறிப்பிட்ட இரு நூற்களைத் தமிழாக்கம் செய்த பெரியார்களாகிய திருச்சி டவுன் காஜி மௌலானா மௌலவி சையத் அப்துல் கனி ஹஜ்ரத், ஆரணி மௌலானா மௌலவி கமாலுத்தீன் ஹஜ்ரத் இருவரும் அன்புடன் அனுமதி வழங்கினர்.

இறை நேசச் செல்வர்களாகிய ஷைகுமார்களை வஸீலாவாகக் கொண்டு இறைஞ்சப்படும் துஆக்கள் விரைவில் கபூல் செய்யப்படுகின்றன. குருநாதர் அவர்கள் பணித்தவாறு புனித ஷஜரா வஸீலா பாமாலை இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

கருணை பொழியும் அல்லாஹ் (ஜல்) நம்மனை வருக்கும் நல்லருள் பாலித்து ஈருலக நல்வாழ்வை நசீபாக்கி யருள்வானாக. ஆமீன்.

மிஸ்கீன், மஆஸி

10-5-79. "இபுனு ஜமாலுத்தீன்"

ஹஜ்ரத் காஜா சாகிப் (ரஹ்) அவர்களின் கலீபாவும்
திருச்சி டவுன் காஜியுமான மௌலானா மௌலவி

**சையத் அப்துல்கனி சாகிப் பாஜில் பாகவி**
**அவர்களின்**

# மதிப்புரை

அல்ஹம்துலில்லாஹ். மதிப்புரைக்காக என் கைக்கு வந்த இந்த நூல் இணையில்லாத பரவசமளித்தது. எமது ஆத்மீக குரு குதுபுஜ் ஜமான், கவுகபுல் ஹிந்த், ஹஜ்ரத் ஷைகு காஜா பஷீர் அஹ்மத் (ரஹ்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள் நூலுருவில் வருவது இதுவே முதல் முறை. இவை பூர்த்தி யானவையல்ல. இவை போன்ற அற்புத நிகழ்ச்சிகள் நூற்றுக் கணக்கில் உள்ளன. இறை நேசர்களாகிய வலிமார்கள் வாழ்வில் அற்புதம் நிகழ்வது அதிசயிக்கத் தக்க தன்று. வலிமார்களின் அந்தஸ்து அற்புதங்களைக் கொண்டு மதிக்கப் படுவதன்று. எனினும் பொது மக்கள் ஹஜ்ரத் (ரஹ்) அவர்களின் மாண்பினை அறிந்துணர இவை எடுத்துக் காட்டாக அமையும்.

ஹஜ்ரத் காஜா (ரஹ்) தம் வாழ்நாளில் தம் நிலையை மறைத்து சாதாரண மனிதர் போன்றே காட்சியளித்தனர். எனவே பெரும்பாலோர் அவர்களைச் சரிவர புரிந்துகொள்ள வில்லை. அவர்களின் மறைவுக்குப் பிறகு அவர்களின் மாட்சியை யறிந்து அவர்கள் மூலம் பயன்பெறாது போனதை எண்ணி வருந்தியோர் ஆயிரம் ஆயிரம் பேர்.

பதிப்பாளர், ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களின் வரலாற் றுடன் அமையாது ஷைகுல் இஸ்லாம் ஹுசைன் அஹ்மத் மதனி (ரஹ்) அவர்களின் "பைஅத் என்றால் என்ன?" என்ற நூலின் தமிழாக்கத்தையும் ஸலாஸிலதுத் தய்யிபா என்ற

நூலில் உள்ள ஞானநெறி செய்வோர்க்குரிய அனுஷ்டானங்கள் பற்றிய பகுதியின் சுருக்கத்தையும் சேர்த்திருப்பதுடன் ஷைகுமார்களின் பொருட்டு இறையருள் வேண்டும் புனித ஷஜரா—வஸீலா பாமாலையையும் இணைத்திருப்பது முரீதீன்களுக்கு பெரும் பயன் தரும் எனலாம். எல்லாம் வல்ல ரஹ்மான் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களுக்குத் தன் கருணைமாரியை அதிகம் அதிகம் பொழிந்தருள்வதுடன் அவர்களின் முரீதுகள், அன்பர்கள் மற்றும் இஸ்லாமிய மக்கள் அனைவருக்கும் ஈருலக நற்பாக்கியங்களை தந்து நல்லருள் பாலிப்பானாக. ஆமீன்.

இஸ்லாமிய ஊழியன்,

திருச்சி
7-4-79

**சையத் அப்துல் கனி**

# உள்ளே

1. குத்துபுஜ் ஜமான் காஜா பஷீர் அஹமத் (ரஹ்)
   முன்ஷி ஹக்கீம் அப்துஸ்ஸத்தார் அவர்கள்
   புதுக்கோட்டை.

2. பைஅத் என்றால் என்ன?
   ஷைகுல் இஸ்லாம் ஹஜ்ரத் ஹுசைன் அஹ்மத் மதனி (ரஹ்)

   தமிழாக்கம்:

   மௌலானா மௌலவி சையத் அப்துல்கனி, டவுன் காஜி, திருச்சி.

3. காலை மாலை அனுஷ்டானங்கள், வழிமுறைகள்.
   ஷைகுல் இஸ்லாம் ஹஜ்ரத் மதனி (ரஹ்) அவர்களின் சலாஸிலதுத் தய்யிபாவிலிருந்து எடுத்தவை. ஆரணி மௌலானா மௌலவி கமாலுத்தீன் ஹஜ்ரத் அவர்களின் தமிழாக்கத்தின் தழுவல்.

4. ஷஜரா-வஸீலாப் பாமாலை.
   "இபுனு ஜமாலுத்தீன்"

بسم الله الرحمن الرحيم

# குத்புஜ்ஜமான் காஜா பஷீர் அஹ்மத் (ரஹ்)

*அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன். வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா சையிதினா முஹம்மதின் றஹ்மதுல் லில்லாலமீன் வஅலா ஆலிஹித் தாஹிரீன் வ அஸ் ஹாபிஹில் முத்தஹ்ஹிரீன்.*

## ஜனனமும் மூதாதையரும்

ஷைகுல் மஷாயிகு, ஆரிபுபில்லாஹ், கவுகபுல் ஹிந்த், குத்துபுஜ் ஜமான், அல்ஹாஜ், ஹஜ்ரத் காஜா பஷீர் அஹ்மத் (ரஹ்) அவர்கள், தமிழகத்தில் வடஆற்காடு மாவட்டம் பேரணம்பட்டில் 1924 ஏப்ரல் திங்கள் ஏழாம் திகதி காலை ஆறு மணி அளவில் அவதாரம் புரிந்தார்கள். தந்தையாரின் பெயர் அல்ஹாஜ் முஹம்மத் இஸ்மாயில் சாகிப். அன்னையின் நாமம் ஜுலைஹா பீபி.

தந்தையாரின் மூதாதையர் பக்தாதிலிருந்து வந்தோராவர். பிக்ஹ் என்ற இஸ்லாமிய சட்டக்கலையில் தேர்ச்சி பெற்றோர். எனவே ஸல்த்தனத்தே குதாதாத் என்ற மைசூர் அரசின் மார்க்க சட்ட நிபுணர்களாகச் சிறப்புடன் பணியாற்றினர். ஷேரே ஹிந்த் ஹஜ்ரத் திப்பு சுல்தான் (ரஹ்) அவர்களுக்குப் பின்னர் நிகழ்ந்த அரசு மாற்றம் காரணமாக மைசூரைத் துறந்து தஞ்சைத் தரணி வந்தடைந்தனர். அவ்வமயம் தஞ்சை மன்னனின் யானை ஒன்று மதங்கொண்டு கட்டுக் கடங்காது தொல்லையளித்து வந்தது. இதைக் கண்ணுற்ற ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களின் மூதாதையரில் ஒருவர் தம் வன்மையினால் அம்மத கரியை அடக்கிப் பிடித்துக் கட்டினார்.

இவ்வருஞ் செயலைப் பாராட்டிய மன்னர் தஞ்சையை அடுத்துள்ள ராஜகிரியில் மானியம் வழங்கி யானையையும் அன்பளிப்புச் செய்தார். சித்தானையைப் பரிசாகப் பெற்ற அக் குடும்பத்தினர் அதே பெயரால் அழைக்கப்படலாயினர். இக் குடும்பத்தினரிலிருந்து பேரணம் பேட்டைக்குக் குடிபெயர்ந்து

வந்தவர்கள்தாம் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களின் மூதாதையினர்.

தாயாரின் மூதாதையரும் தமிழகத்துக்கு ஹிஜ்ரத் செய்து வந்தவர்தாம். புதுக் கோட்டை மாவட்டம் திருமயத்தை அடுத்துள்ள பள்ளிவாசல் என்றழைக்கப்படும் சிற்றூரில் சமாதி கொண்டுள்ள குத்புநாயகம் ஹஜ்ரத் சையித் பாபா பக்ருத்தீன் (ரஹ்) அவர்களின் வம்சா வழியில் தோன்றியவரே ஹஜ்ரத் அவர்களின் அன்னையார். காட்டு பாவா சாகிப் என்று அழைக்கப்படும் ஹஜ்ரத் பாபா பக்ருத்தீன் சாகிப் (ரஹ்) அவர்கள் நாகூர் குத்புல் அக்தாப் ஷாகுல் ஹமீது நாயகம் (ரஹ்) அவர்களின் அபிமானபுத்திரர் சையித் யூசுப்சாகிப் (ரஹ் அவர்களின் தலைமகனார். எனவே தாய் வழி மூதாதையரின் தனிச்சிறப்பு நன்கு விளங்கும். ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர் களின் அன்னையாரின் சகோதரி ஒருவர் மஜ்தூபாக இருக் கின்றனர். இவர்களிடமிருந்து அவ்வப்போது கஷ்பு கரா மாத்துக்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

## மூதாதையரின் சீலம்

ஹஜ்ரத் அவர்களின் பாட்டனார் எருமைகளின்மீது சரக்கு களை ஏற்றி வெளியூர்களுக்குச் சென்று வியாபாரம் செய்து வருவர். பாட்டியார் மார்க்க பக்தி மிகுந்தவர். எருமைகளை மேய்த்து வரும் வேலையாள் மாலையில் மாடுகளை கொல்லைப் புறத்தில் விட்டுச் செல்வான். பாட்டியார் மாடுகளுக்குத் தீனி முதலியன கொடுத்து பராமரித்துக் கொள்வார். ஒரு நாள் வேலையாள் போய் விட்டான் என்ற எண்ணத்தில் கொல்லைப் புறம் சென்ற போது அவன் அங்கு நிற்பதைக் கண்டனர். பரபரப்புடன் தங்கள் உடல் முழுவதும் சேலையால் மூடிக் கொண்டனர். முதுகுப் பக்கம் சரிவர மூடப்பட்டதா என்ற ஐயம் எழுந்ததும், அன்னியன் பார்க்கும்படி திறந்திருந்த உடலின் பகுதியை சுட்டுப் பொசுக்க வேண்டும் என்று சொல்லியவராய் அடுப்பில் எரிந்து கொண்டிருந்த கொள்ளிக் கட்டையை எடுத்து சந்தேகப்பட்ட பகுதியில் வைத்துக் சுட்டுக் காயப்படுத்திக் கொண்டனர்.

## தந்தையாரின் சிறப்பு

ஹஜ்ரத் காஜா அவர்களின் தந்தையார் ஷரகு முறைப்படி ஹலாலாகப் பொருளீட்டிய பெருஞ் செல்வர். அவர்கள் மதீனு முனவ்வராவில் இருந்த சமயம் ஹஜ்ரத் ஷைகுல் மஷாயிகு, ஹக்கீமுல் உம்மத், மௌலானு அஷ்ரப் அலி தானவீ (ரஹ்) அவர்களின் சிபாரிஸினுல் ஒரு பெரியாரிடமிருந்து "தலாயிலுல் கைராத்" ஓதிவர இஜாஜத் பெற்ருர்கள். கல்கத்தா நகரில் வைத்து ஷைகுல் இஸ்லாம் சையித் ஹுஸைன் அஹமத் மதனீ (ரஹ்) அவர்களிடம் சூரேபாதிஹாவின் இஜாஜத் பெற்ருர்கள். தொழுகையை கலாச் செய்தறியாதவர்கள். கடும்பிணியில் சிரமமடையும் போதுகூட உலுவை நல்ல முறையில் செய்து தொழுவார்கள். தயம்மம் செய்துகொண்டு தொழும்படி சொல்லப்பட்டால் தண்ணீர் படுவதால் வியாதி அதிகமாகிவிடும் என்ற ஐயம் ஏற்படும்போதுதான் தயம்மம் செய்யலாம், எனக்கு இத்தகைய நோய் இல்லை என்று சொல்லிவிடுவர்.

மூச்சுத் திணறல் ஏற்படும்போது டாக்டர்களை அழைத்து வர யாரும் முயன்ருல் தடுத்து விடுவார்கள். மூச்சை வாங்குவதிலும் விடுவதிலும் பல முறைகள் இருக்கின்றன. இந்த மூச்சுத் திணறல் எனக்குப் பல நற்பயன்களை அளிக்கிறது என்று கூறுவார்கள்.

விஜய நகரத்தில் இருந்த அவர்களின் தோல் மண்டியில் பெரும் நட்டமேற்பட்டது. ஏஜண்டாயிருந்து பணி புரிந்த அப்துல் ஷுக்கூர் பதினேழாயிரம் ரூபாய் அதிகமாகப் பற்றுவழி செய்திருந்தார். அவரைப் பார்த்து, நீர் பெரும் தொகையைப் பற்று வழி செய்து விட்டீர்.

பின்பொருகால் நீர் சொந்தமாகத் தொழில் புரிந்து நல்ல லாபம் கிடைத்தால் எனக்குரிய தொகையைத் திரும்பத் தந்துவிடுவதாக வாக்குறுதி தருவீராக என்று கேட்டனர். இறைவன் கிருபையால் அப்படியொரு செல்வநிலை ஏற்பட்டாலும் திருப்பிக் கொடுக்குமளவுக்கு எனக்கு மனப் பக்குவம் ஏற்படும் என்ற உறுதி இல்லாத நிலையில் எப்படி வாக்குறுதி அளிப்பது என்று அப்துல் ஷுக்கூர் மறுமொழி கூறினார்.

இதுகேட்ட முஹம்மத் இஸ்மாயில் அவர்கள், "நீர் உண்மை உரைத்தீர், எனவே தொகை முழுவதையும் மன்னித்து விட்டேன், திரும்பத் தர வேண்டாம்" என்று பெருந்தன்மையுடன் கூறினர்.

பிறகு அப்துல் ஷுக்கூர் தனியாகத் தொழில் செய்து செல்வந்தரானார். ஒரு சமயம் அவர் கடும் பிணியில் சிக்கினார். சொந்த ஊரான பேரணாம்பட் திரும்பினார். படுத்த படுக்கையில் இருந்து சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த அவர் ஓரிரவு தன்னந்தனியாய் தனது பழைய முதலாளி வீட்டுக்கு வந்து கதவைத் தட்டினார். படுத்த படுக்கையில் இருந்த தமது பழைய ஏஜண்ட் வாசலில் நிற்பதைக் கண்ட முஹம்மத் இஸ்மாயில் அவர்கள் வந்த காரணத்தை வினவ, தமக்கு இறைவன் பெருஞ் செல்வத்தைத் தந்திருப்பதால் பழைய பாக்கிக்காக தமது செல்வத்திலிருந்து எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்று பணிவுடன் வேண்டினார். இதற்காக இந்த நள்ளிரவில் சிரமத்துடன் வந்திருக்க வேண்டியதில்லை, காலையில் பேசிக் கொள்ளலாம் என்று அவரை அழைத்துப் போய் அவரது வீட்டில் விட்டு வந்தனர் அன்றிரவே அப்துல் ஷுக்கூர் மௌத்தாகி விட்டார் இதனை அறிந்த பொது மக்கள் இருவரது சிறந்த பண்புகளையும் பாராட்டிப் பேசுவாராயினர்.

முகம்மத் இஸ்மாயில் சாகிப் அவர்கள் வியாபாரத்தில் பெருஞ் செல்வம் ஈட்டினர்.

ஆண்டு இறுதியில் இத்துணை இலட்சம் ஆதாயம் என்று கணக்கர்கள் சொல்லும்போது இது ஒரு ஆதாயமா என்று அலட்சியமாய் பதில் கூறுவார்கள். ஏன் இப்படிச் சொல்கிறீர்கள் என்று கேட்கும் சமயம் இலாபத்தை பெரிதாக நினைத்தால் மனத்தில் பெருமை குடி கொள்ளும் எதையும் பெரிதுபடுத்தாமல் இருப்பது நல்லது. பெருமைக்கு இடங் கொடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறுவார்கள். எந்த நேரத் தொழுகை யையும் கலாச் செய்வதறியாத இப்பெரியார் இறுதியில் இஷாத் தொழுதுவிட்டுப் படுத்தார்கள். பஜ்ருக்கு பாங்கு சொல்லு முன்பே மரணமடைந்தார்கள்.

## பிறப்பின் சிறப்பு

ஹஜ்ரத் காஜா (ரஹ்) தம் தாய் வயிற்றில் கருவா யிருந்த சமயம் வயிற்றில் எந்த அசைவும் இல்லாதிருந்த தால் கவலை கொண்டு தம் மனைவியை சிகிச்சைக்காக வேலூர் அழைத்துச் சென்றனர் தந்தையார். குத்துபே வேலூரி மகிகானுக்குச் சென்று ஜியாரத் செய்தபின் அங்கு எழுந்தருளியிருந்த ஹஜ்ரத் அப்துல் லத்தீப் (ரஹ்) அவர் களை (முஹாஜிரே மக்கா) தரிசித்து விவரம் கூறினர். அப்பெரியார் "கர்ப்பம் தரித்திருப்பது உண்மை. சிகிச்சை வேண்டாம்" என்றருளினர். எனவே முஹம்மது இஸ்மாயில் சாகிப் அவர்கள் மனைவியுடன் ஊர் திரும்பினர்.

ஹஜ்ரத் அவர்களின் தாயார் மூன்று நாட்கள்வரை பிரசவ வேதனையால் சிரமமுற்றுக் கொண்டிருந்தனர். அது சமயம் பேரணம்பேட் விஜயம் செய்திருந்த ஷைகுல் இஸ்லாம் ஹுசைன் அஹ்மத் மதனீ (ரஹ்) அவர்களிடம் தண்ணீர் ஓதிக்கொண்டு வந்து அம்மையார் அவர்களிடம்

உறவினர் கொடுத்தனர். அதை அருந்திய சிறிது நேரத்தில் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களை தமது ஐந்தாவது தவக்குழந்தையாக அன்னையார் ஈன்று மகிழ்ந்தனர்.

எனினும் பிறந்து மூன்று நாட்கள் வரை குழந்தை அசைவும் சப்தமும் அற்றிருந்தது. சிகிச்சைகளால் பயனேற்படவில்லை. மீண்டும் ஹஜ்ரத் மதனீ (ரஹ்) அவர்களிடம் விவரம் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் ஓதிக் கொடுத்த பாலைக் கொண்டு வந்து குழந்தையின் வாயைத் திறந்து சிறிது சிறிதாகப் புகட்டினர். இதற்குப் பின் குழந்தைக்கு இயற்கையான உணர்வும் அசைவும் ஏற்பட்டது. இவ்வாறு எந்தப் பெரியாரின் உமிழ்நீர் பழக்கத்தால் உணர்வு பெற்றார்களோ அதே பெரியார் ஷைகுல் இஸ்லாம் அவர்களை பின்னர் தங்களது ஞான குருவாக ஹஜ்ரத் (ரஹ்) அடையப் பெற்றனர்.

## இளமைப்பருவம்

ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்கள், பேர்ணும்பட்டு சவுக் மஸ்ஜிதில் பேஷ் இமாமாக இருந்த மௌலானா மௌலவி, ஹஜ்ரத் பஷீர் அகமத் (ரஹ்) அவர்களிடம் ஆரம்ப மார்க்கக் கல்வியை பயின்றார்கள்.

"நபிமார்கள் ஆடு மேய்த்திருக்கிறார்கள். எனக்கும் சில ஆடுகள் வாங்கிக் கொடுத்தால், பள்ளி நேரங்கள்போக மற்ற நேரங்களில் மேய்த்து வருவேன்" என்று காஜா(ரஹ்) அவர்கள் தம் தந்தையாரிடம் கூற, அதற்கு அவர்கள் ஆடுகளை வாங்கிக்கொடுத்தார்கள். ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்கள் அவைகளை ஓய்வு நேரங்களில் மேய்த்துவந்தார்கள். நாளடைவில் பள்ளிக்குப் போகாமல், ஆடுகளை மேய்ப்பதிலேயே நாள் முழுவதும் கவனம் செலுத்தலா

ஞர்கள். இதையறிந்த தந்தையார் ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்களுக்குத் தெரியாமலே அவ்வாடுகளை விற்று,விட்டு "சுன்னத் நிறைவேறிவிட்டது. இனி பாடங்களில் கவனத்தைச் செலுத்துங்கள்" என்று சொல்லிவிட்டார்கள்.

சென்னை, திருவல்லிக்கேணி மஹ்மடன் ஹைஸ்கூலில் படிக்க, ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்களை சேர்ப்பித்தார்கள். அந்த ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் அவர்கள், தமக்கோ அல்லது தம் குடும்பத்தினருக்கோ சுகவீன மேற்பட்டால், ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்களை அழைத்து ஓதிக்கொள்வார். மேலும் ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்களை "பீர் சாஹிப்" என அழைப்பார். ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்களுக்கு ஆங்கிலப் பாடங்களில் நாட்டமிருக்கவில்லை. அதனால் ஆங்கிலப் பாடம் நடக்கும் போது, ஆசிரியருக்குத் தெரியாமல் "மதீனா" என்னும் உருது செய்தித்தாளை வாசிக்கத் தொடங்குவார்கள். ஒரு நாள் ஆசிரியருக்கு இவ் விஷயம் தெரிந்து செய்தித்தாளுடன் ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்களை தலைமை ஆசிரியரிடம் அழைத்துச் சென்று விஷயத்தைச் சொன்னார். அதைக்கேட்ட தலைமை ஆசிரியர், "இவரை அவர் போக்கில் விட்டு விடுங்கள். இவர் பீர் சாப்" என்று சொல்லி விட்டார்.

## ஞானக் கல்விக்கு பெரியாரின் நற்சான்று

ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்கள் ஹஜ்ரத் மதனீ(ரஹ்) அவர்களிடம் மூன்று முறை புகாரி ஷரீப் முழுவதும் பயின்றிருக்கிறார்கள்.

ஹக்கீமுல் உம்மத், ஹஜ்ரத், அஷ்ரப் அலி தான்வி (ரஹ்) அவர்களின் கலீபாவான ஹஜ்ரத் மௌலானா முஹம்மத் ஸயீத் கீரனூரி (ரஹ்) அவர்கள் திண்டுக்கல்

தப்லீக் இஜ்திமாவின் போது ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்களின் இல்மின் தகுதியைப் பற்றி சர்ச்சை நடந்த சமயத்தில் "சாஜா காஹிப் தம்முடைய ஷைகளவில் ஃபனு ஆனவர்கள். எனவே தம் ஷைகிடமிருந்ததையெல்லாம் பெற்றவர் ஆவார்கள்" என்று சொன்னார்கள்.

ஷைக்குல் இஸ்லாம், ஹஜ்ரத் மதனீ(ரஹ்) அவர்கள் தம் கடைசி ரம்லானில் தம் கலீபாக்களையெல்லாம் அழைத்து ஒன்று சேர்த்து தர்க்கா உடைய வேலையை செய்யும்படி வஸீயத் செய்தார்கள். அந்த சமயம் ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்கள் "ஆலிம் அல்லாத நான் என்ன செய்ய முடியும்," என்று சொன்னார்கள். அதற்கு "நீங்கள் எதனைச் சொல்வீர்களோ அதுவே அவர்களுக்குப் போதுமானது. வேலையைத் தொடங்குங்கள்" என்று ஹஜ்ரத் ஷைக்குல் இஸ்லாம் அவர்கள் பதிலுரைத்தார்கள்.

## இளம் பிராயத்தில் நேர்மையான சம்பாத்தியம்

ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்களின் தகப்பனார் ஹலாலான வருமானம் உணவு, உடை முதலியவைபற்றி அடிக்கடி சொல்லி வந்தமையால், அவர்களின் உள்ளத்தில் ஹலாலான வழியில் சம்பாதிக்க வேண்டும், என்கிற ஆசை தீவிரமாக உணர்த்திக் கொண்டிருந்தது. அதனால் அவர்கள் தம் 12, 13 வயதிலேயே வீட்டில் எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வீட்டைவிட்டு வெளியேறி, திருச்சி ஜங்ஷனில் பிராயாணிகளின் சாமான்களைத் தூக்கும் கூலியாளாக வேலைசெய்யலானார்கள். அவர்கள் சம்பாதித்தது, அன்றாட செலவிற்கே சரியாக இருந்து வந்தது.

பெரும் சிரமத்துடன் சுமார் 4, 5 ரூபாய் வரை சேர்த்து வைத்திருந்த சமயத்தில், வேலூர் பிரபல வாயிஜ் மௌலானா கமாலுத்தீன் ஹஜ்ரத் அவர்களின் பயான்

திருச்சி பாலக்கரையில் நடக்கப் போவதைக் கேள்வியுற்று, பயான் கேட்கச் சென்றார்கள். தற்செயலாக ஹஜ்ரத் கமாலுத்தீன் சாஹிப் அவர்கள் ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்களைக் கூட்டத்தில் கண்டறிந்து, கையைப்பிடித்து "நீங்கள் பேர்ணாம்பட்டு முஹம்மது இஸ்மாயில் அவர்களின் மகனல்லவா? இந்தக் கோலத்தில் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்" என்றுவினவ தாம் வந்த நோக்கமும்,வேலையின் விவரத்தையும் ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்கள் எடுத்துரைத்தார்கள். விவரத்தையறிந்த ஹஜ்ரத் கமாலுத்தீன் அவர்கள் கண்ணீர் விட்டார்கள். அந்தக் கூட்டத்தில் ந. மு. என்ற திருச்சி பிரபல தோல் வர்த்தகருமிருந்தார்கள். அவர்களுக்கு வியாபாரத் தொடர்பில் ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்களின் தகப்பனார் அறிமுகமானவர். ஹஜ்ரத் கமாலுத்தீன் அவர்கள் மூலம் ந. மு. அவர்கள், ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்கள் சொன்னதையறிந்து, ஜனாப் மாவன்னா, காவன்னா என்ற தோல் வியாபாரியுடன், ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்களை அனுப்பி அவர்களை தகப்பனாரிடம் ஒப்படைக்கச் செய்தார்கள். தம் மைந்தன் ஹலாலான வருமானத்திற்காக இவ்வளவு தூரம் சென்று சிரமப்பட்டதையறிந்து, வருந்தி "மகனே! என் சொத்தெல்லாம் ஹலாலான வழியில் வந்ததேயாகும். நீங்கள் இதை எதுவும் செய்யலாம்," என்று சொன்னார்கள். ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்கள் கூலி வேலை செய்து மிச்சப் படுத்தி வைத்திருந்த பணத்தை வாங்கி தனியாக மிகவும் பத்திரமாக வைத்தார்கள். தம் அந்திம நேரத்தில், தம் மகன் உழைத்து ஹலாலாக சேர்த்து வைத்திருக்கும், அச்சிறு தொகையைக் கொண்டு தனக்கு கபன்துணி வாங்கும்படி வஸீயத்து செய்தார்கள்.

அதற்குப்பின்பும் ஒருமுறை ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்கள் சென்னைக்குச் சென்று சென்னை சென்ட்ரல்

ஸ்டேஷனில் போர்ட்டர் வேலே செய்திருக்கிறார்கள். புதல்வர் சென்னையில் போர்ட்டர் வேலை செய்து கொண்டிருப்பதைக் கேள்வியுற்ற ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்களின் தாயார் மிகவும் வேதனையடைந்து மைந்தனை அழைத்துக் கொண்டார்கள்.

கூலி வேலை செய்து சம்பாதித்ததில் கொஞ்சம் தன் வசமிருப்பதாகவும் அத்துடன் தேவையுள்ள பணத்தைச் சேர்த்து தான் மௌத்தான பின்பு கபன் துணி வாங்கும்படியும் ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்களின் கலீபாக்களில் ஒருவரான, கரூர் மௌலானா ஹக்கீம் சாஹிப்பிடம் கூறியிருக்கிறார்கள்.

## பள்ளிப் படிப்பின் போது கண்டதோற்றம்

ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்கள் சென்னை திருவல்லிக் கேணி, மஹமடன் ஹைஸ்கூலில் படித்து வரும் சமயத்தில், ஆற்காடு நவாபின் ஜாமியா பள்ளியின் வடபுறத்தில் அடக்கமாகியிருக்கும், பஹ்ருல் உலூம் ஹஜ்ரத் ஷைக்குல் மஷாயிக், மௌலானா, மௌலவி முஹம்மது(ரஹ்) அவர்களின் மக்பராவின் பக்கத்தில், பள்ளி நேரம் முடிந்ததும் போய், பல மணி நேரம் இருந்துவருவது வழக்கம். இவ்விதமிருக்கும் போது ஒரு நாள் அவர்களின் உள்ளத்தில் திடீரென ஒரு சந்தேக மேற்பட்டது. அதாவது "ஆண்டவன் இருக்கிறானா?" என்பதாகும். பின்னர் தாம் தங்கியிருக்கும் சிந்தாதிரிப் பேட்டையிலுள்ள வீட்டிற்குத் திரும்பும் போது வழியிலுள்ள பாலத்தில், இரண்டு குருவிகள் இருந்தன. அதில் ஒரு குருவி "ஹூ" என்றது. மற்றொன்று "அல்லாஹூ" என்றது. பிறகு ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களைப் பார்த்து "நீ எங்கே போகிறாய்?" என்றது. ஹஜ்ரத் காஜா(ரஹ்) அவர்கள் பின்புறம் பார்க்க ஒரு பெரிய பாம்பு படுத்திருப்பதைக் கண்டார்கள்.

அச்சம்பவத்திலிருந்து வீடு திரும்பும்போது நடுநிசியாகி விட்டது. அதன் பின் மனதிலேற்பட்ட சந்தேகம் நீங்கிப் போயிற்று.

ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் ஒரு சமயம் கனவில் நல்ல அழகான தாடியுடைய பெரிய மனிதர்கள் பலர் வரிசை வரிசையாக எதிர் எதிராக நிற்பதைக் கண்டார்கள். அவர்களை நெருங்கி ஏன் அவ்விதம் நிற்கிறீர்கள் என்று கேட்க, அல்லாஹ் இப்பொழுது தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் போகிறான். அவனை தரிசிக்க தாங்கள் நிற்ப தாகச் சொன்னார்கள். அதைக் கேட்டு, அவர்கள் மத்தி யில் நின்று கொண்டார்கள். அதன் பிறகு விழித்துக் கொண்டார்கள். அப்போது அவர்கள் படுத்திருந்த அறைக்குள் பூரண சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருப் பதைக் கண்டார்கள். அதைப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணமேற்பட்டது. உடனே படுக்கையிலிருந்து எழுந்து அதைப் பிடிக்கச் செல்கையில், சந்திரன் அறையை விட்டு வெளியேறிச் செல்ல, அதைத் தொடர்ந்து தாமும் செல்ல, கடைசியில் பேர்ணம்பட்டுக்கு ஐந்து மைல் தூரத்திலுள்ள காட்டுக்குள் சந்திரனைத் தொடர்ந்து சென்று விட்டார்கள். பிறகு அந்த சந்திரன் ஓர் ஓடையின் அருகில் மறைந்து விட்டது. கற்களினாலும் முட்களினாலும் உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டுக் களைப்படைந்திருந்த ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் சந்திரன் மறைந்த உடன், கீழே படுத்து உறங்கிவிட்டார்கள். பிறகு ஒரு பெரியார், ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களை எழுப்பி கையைப் பிடித்து அழைத்து வந்து ஊர் அருகில் விட்டுச் சென்றார்கள். அதன்பின் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் வீட்டையடைந்தார்கள்.

இச்சம்பவம் நடந்த பல ஆண்டுகளுக்குப் பின் ஹஜ்ரத் ஷைக் மதனீ (ரஹ்) அவர்களிடத்தில் அக்கனவைப் பற்றி சொல்ல புன்னகை புரிந்த வண்ணம், அழைத்து

வந்த பெரியார் "ஹில்ரு அலைஹிவஸ்ஸலாம்" என்று ஹஜ்ரத் மதனீ (ரஹ்) அவர்கள் சொன்னார்கள்.

## வாலிப வயதில் வாணிபம்

ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் வாலிபப் பருவத்தில் பெங்களூரில் வியாபாரம் நடத்தினார்கள். தக்வா வியாபார அபிவிருத்திக்குத் தடையாக இருந்தது. கடனும் ஏற்பட்டு விட்டது. குடியிருந்த வீட்டுச் சொந்தக் காரரான குத்தூஸ்பாய் என்பவர் பலமுறை வாடகைப் பாக்கியைக் கேட்டும் பெற முடியாத காரணத்தால் மிகவும் சினத்துடன், பாக்கியைக் கொடுக்காமல் அங்கிருக்கும் சாமான்கள் எதையும் எடுத்துச் செல்லக் கூடாது என்று எச்சரித்தார். ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் ஜும்மா வன்று "சூரயே கஹப்" ஓதுவது வழக்கம்.

மறுநாள் ஜும்மாவன்று "சூரயே கஹப்" ஓதிக்கொண் டிருக்கும்போது, ஜனாப் குத்தூஸ்பாய் வந்தார். "உங்கள் சாமான்களை எடுத்துக் கொண்டு ஊர்போய் சாவகாசமாக எனக்குப் பணத்தை அனுப்புங்கள். மேலும் ஹோட்டல் கணக்கு முதலிய இதர கடன் பாக்கி கொடுக்க வேண் டிருந்தால் சொல்லுங்கள், நான் கொடுத்து விடுகிறேன், நீங்கள் ஊர் போய் என் பணத்தை அனுப்பும்போது சேர்த்து அனுப்பி விடுங்கள்" என்று மிகவும் மரியாதை யுடனும் அமைதியாகவும் சொன்னார். பின்பு, "நான் இன்றிரவு கனவில் ஹஜ்ரத் அமீருல் மூமினீன், அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களைக் கண்டு முசாபஹா செய்யக் கைகளை நீட்டும்போது, நம்மைச் சேர்ந்த ஒருவரின் மனம் புண் படும்படி நடந்து கொண்ட உன்னுடன் முஸாபஹா செய்ய முடியாதென்று மறுத்துவிட்டார்கள்" என்று சொன்னார்.

# ஞான குருவை அடைதல்

ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களின் மனம் முன்பை விட அதிகமாக அல்லாஹ்வின்பால் செல்லலாயிற்று. ஷைகைத் தேடி கேரளா சென்றார்கள். இவர்களுக்கு பெட்ரோல் புகை வாசனை பிடிக்காது. உடனே குமட்டல் தலைச் சுற்றல் ஏற்பட்டு விடும் எனவே பஸ்ஸில் போகும் போது குமட்டல், மயக்கம் ஏற்பட்டவுடன், டிரைவரிடம் சொல்லி பஸ்ஸை விட்டு இறங்கி ரோடு ஓரத்தில் உட்கார்ந் திருந்தார்கள். அது சமயம் ஒருவர் வந்தார். ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் ஒலுவுச் செய்யத் தண்ணீர் கேட் டார்கள். "உம்முடைய பங்கு இங்கு கேரளாவில் இல்லை. வேறு இடத்தில் இருக்கிறது" என்று அப்பெரியார் சொல்லி மறைந்தார்கள். சில நாட்களுக்குப் பின் ஹஜ்ரத் ஷைக்குல் இஸ்லாம் மதனீ (ரஹ்) அவர்களிடம் கடிதமூலம் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் பைஅத் ஆனார்கள். சில நாட்களுக்குப் பிறகு ஹஜ்ரத் ஷைக் மதனீ (ரஹ்) அவர்கள் பெங்களூர் விஜயம் செய்தபோது, அங்கு முதன் முதலில் தம்முடைய ஷைக்கை நேரில் சந்தித்தார்கள். அப்பொழுது தம்முடைய வாழ்க்கைச் சுருக்கத்தையும், கேரளா பிரயாணத்தின் போது ஒரு பெரியவரைச் சந்தித் ததையும், அவர் சொன்னதையும் எடுத்துரைத்தார்கள். அதற்கு ஷைக் (ரஹ்) அவர்கள் "அப் பெரியார் ஹில்ரு (அலை) ஆவர்" என மொழிந்தனர்.

அதன் பின்பு ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் பன்முறை தேவ் பந்த் சென்று தம்முடைய ஷைக் ஹஜ்ரத் மதனீ (ரஹ்) அவர்களின் சுஹ்பத்திலிருந்திருக்கிறார்கள். ஷைக்கின் பார்வையில் சில்லாவும் இருந்திருக்கிறார்கள். ஒரு சமயம் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களின் இம்மை வாழ்வு செம்மையாக நடந்தேற ஷைக் மதனீ (ரஹ்)

அவர்கள் அவ்ராது ஒன்று கற்றுக் கொடுத்தார்கள். ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் ஓரிரு நாட்கள் ஓதி நிறுத்தி விட்டார்கள். சில நாட்களுக்குப் பின் ஹஜ்ரத் மதனீ (ரஹ்) அவர்கள் அவ்ராது ஓதி வரும் விஷயத்தைப் பற்றி வினவ, ஓரிரு நாட்கள் ஓதி நிறுத்தி விட்டதாகவும் அல்லாஹ் நாடியபடி நடந்தேறட்டும், தாம் தம் நாட்டப் படி கேட்க விரும்பவில்லையென்றும் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் விடையளித்தனர். வாலிப வயதினரான தமது சீடரின் வயதை மீறிய இத்தகைய பெருங் குணத்தை யறிந்து ஷைகு அவர்கள் மனம் பூரித்தனர்.

ஹஜ்ரத் ஷைக்குல் இஸ்லாம் மதனீ (ரஹ்) அவர்கள் வெளியில் செல்லும்போது ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களையும் தன்னுடன் அழைத்துச் செல்வார்கள். தேவ்பந்தில், ஹஜ்ரத் மதனீ (ரஹ்) அவர்கள் வழக்கமாக ஒரு டாங்காவில் சவாரி செய்வது வழக்கம். அவ்விதம் போகும்போது ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களையும் தம் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு, வண்டியை மெதுவாக ஓட்டும்படி சொல்வார்கள். வழியில் தென்படும் இடங்களைச் சுட்டிக்காட்டி இந்திந்த இடத்தில் இன்னின்னார் இருந்தார்கள் என்றும், அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் எடுத்துரைப்பார்கள். மேலும் இன்னின்ன இடத்தில் இன்னின்ன சம்பவங்கள் நடந்தனவென்றும் இடத்தைச் சுட்டிக் காட்டி எடுத்துரைப்பார்கள்.

ஒரு சமயம் அந்த டாங்காகாரர், ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களை நோக்கி, "தம் அனுபவத்தில் ஹஜ்ரத் மதனீ (ரஹ்) அவர்கள் தங்களைத் தவிர வேறு யாரையும் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டும் இடங்களைச் சுட்டிக் காட்டிக் கொண்டும் பேசிக் கொண்டு இருந்த தில்லை" என்றுக் கூறி, மிகவும் மரியாதையுடன் நடந்து கொண்டார்,

ஹஜ்ரத் ஷைக்குல் மஷாயிக் மதனீ (ரஹ்) அவர்களின் மூத்த குமாரரான ஆலி ஜனுப் சாஹிப் ஜாதா அஸ்அத் மதனீ அவர்களும் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களும் வயதில் ஒத்தவர்களாகயிருந்ததால் சகஜமாகப் பேசிக் கொள்வார்கள். அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை ஒரு சமயம் கேட்ட ஹஜ்ரத் மதனீ (ரஹ்) அவர்கள் தம் மைந்தனை நோக்கி, "காஜா (ரஹ்) அவர்களை நீ யார் என்று நினைத்து வேடிக்கையாகவும் சகஜமாகவும் நடந்து கொள்கிறாய்?" என்று கண்டித்தார்கள். அதுமுதல் ஹஜ்ரத் சாஹிப் ஜாதா அவர்கள் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களிடம் மிகவும் மரியாதையுடன் நடந்து கொண்டார்கள். இதையறிந்த ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் வருந்தி, சாஹிப் ஜாதாவிடம் தம்மோடு முன்போலவே சகஜமாகவே நடந்து வரவேண்டும் என்று கேட்டு உறுதி வாங்கினார்கள். இதை ஹஜ்ரத் மதனீ (ரஹ்) அவர்களிடம் சாஹிப்ஜாதா அவர்கள் கூற, நீங்கள் இருவரும் உங்கள் விருப்பம் போல் நடந்து கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார்கள்.

### காஜா (ரஹ்) அவர்களின் மாண்பு

ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் தப்லீகில் வெளியூர் செல்வார்கள். ஒரு சமயம் தப்லீக் ஜமாஅத் வெளியூர் போகும் போது, ஹஜ்ரத் ஷைக்குல் இஸ்லாம் மதனீ (ரஹ்) அவர்களின் கலீபாக்களின் ஒருவரான முன்ஷி அல்லாஹ் தத்தா சாஹிப் அவர்கள் ஜமாஅத்தில் அமீராகயிருந்தார்கள். ஒரு ஊரில் ஜமாஅத் தங்கியிருந்த நடு நிசியில் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் பாரா தஸ்பீஹ் ஓதிக் கொண்டிருந்ததை முன்ஷி சாஹிப் அவர்கள் கண்டு, "காஜா சாஹிப் விரைவில் பிரகாசிப்பார்" எனக் கூறினார்கள். பல வருடங்களுக்குப் பின்னர் இதே முன்ஷி தத்தா அவர்களை

காஜா பஷீர் (ரஹ்) அவர்கள் சந்தித்தார்கள். தன்னைப் போலவே காஜா அவர்களும் ஷைக்குல் இஸ்லாம் அவர்களின் கலீபாக்களில் ஒருவராகி உன்னத நிலையில் விளங்குதல் கண்டு உணர்ச்சி பரவசத்தில் விம்மி விம்மி அழுததை அநேகர் நேரில் கண்டனர்.

ஒரு சமயம் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் தேவ்பந்து போக ஸஹரான்பூர் இரயில்வே ஸ்டேஷனில் நின்று கொண்டிருக்கும்போது ஒரு யோகி ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்ததையறிந்து "என்ன மஹராஜ் கூர்ந்து பார்த்த வண்ணமாகவேயிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். "உமது ஷைக் மிகவும் சக்தியுடையவர்கள்" என்று அந்த யோகி சொல்ல, "என் ஷைக்கின் பெயரென்ன" என்று ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் வினவ "உமது ஷைக்கின் பெயர் ஹஜ்ரத் ஷைக்குல் மஷாயிக் ஹுஸைன் அஹ்மத் மதனீ (ரஹ்) அவர்கள்" என்று அந்த யோகி விடையளித்து "உமது ஷைக் உம்மைக் காப்பாற்றிவிட்டார்" என்று விடையளித்தார்.

மற்றொரு சமயம் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் ஒரு இரயில்வே பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருக்கும் போது, ஒரு யோகி நிஷ்டையிலிருக்க, அவர் பக்கத்தில் அந்த யோகியின் சீடன் நின்று கொண்டிருப்பதையும், இரயிலை விட்டிறங்கும் பிரயாணிகள் யோகியின் பக்கம் நெருங்காமல் விலகிச் செல்வதையும் கண்டார்கள். பிறகு ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள், அந்த யோகியைப் பார்த்த வண்ணமாக, அவரின் முன்பாக நடந்து சென்றார்கள். கண்களை மூடிக்கொண்டு நிஷ்டையிலிருந்த அவர் கண் விழித்து, ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களைப் பார்த்தார். உடனே அவரின் சிஷ்யன், ஒரு முஸ்லீம் தம் குருவின் முன்பக்கம் போனதால், குருவின் நிஷ்டை கலைந்து

விட்டது என்று கோபித்துக் கொண்டான். அங்கிருந்தவர்கள் கண்ணைத் திறக்காமலிருந்தவர் கண்ணைத் திறந்து பார்ப்பதென்றால், உன்னுடைய குருவை விட இவரைப் பெரியவராகக் கருத வேண்டியதாகயிருக்கிறது, என்று சொல்ல, சிஷ்யன் வாயடைத்து நின்றுவிட்டான்.

## திப்பு சுல்தான் (ரஹ்) தரிசனம்

ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் ஆந்திரப்பிரதேசத்தில் இரண்டு வார காலம் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு மைசூர் விஜயம் செய்தார்கள். அவர்களுடன் ஹஜ்ரத் கரூர்ஹக்கீம் சாஹிப் அவர்களும் காஷிக்க ஹல்லி ஜனுப் சையத் நஸ்ருத்தீன் சாஹிப் அவர்களுமிருந்தார்கள், ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் ஸ்ரீரங்கப்பட்டிணத்தில் ஹஜ்ரத் ஷேரே ஹிந்த் திப்பு சுல்தான் ஷஹீத் (ரஹ்) அவர்களின் மஜார் காம்பௌண்டிற்குள் நுழைந்ததும் தம்முடைய காலணியைக் கழற்றி விட்டார்கள். முதலில் ஹைதர்அலி சுல்தான் அவர்களின் மஜார் சமீபம் சென்று 3, 4 நிமிடங்கள் வரை இருந்தார்கள். பின்பு ஹஜ்ரத் திப்பு சுல்தான் ஷஹீத் (ரஹ்) அவர்களின் மஜார் சமீபம் சென்று வெகுநேரம் நின்றிருந்தார்கள். பிறகு "ஹஜ்ரத் மதனீ (ரஹ்) அவர்கள் ஒரு வாலிபனைப் போல் நின்றிருக்கிறார்கள். அவர்களின் உடல் கோபாவேசத்தில் பதறிக் கொண்டிருந்தது" என்று ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் எங்கு விழுந்து விடுவார்களோ என்று சையத் நஸ்ருத்தீன் பின்புறம் தாங்கிக் கொள்வதற்குத் தயாராக நின்றிருந்தார். பிறகு ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களிடத்தில் ஹஜ்ரத் திப்பு ஷஹீத் (ரஹ்) அவர்கள் தாடி வைத்திருக்கவில்லையென்று அங்கிருந்தோர் சொல்கிறார்கள். மேலும் ஹஜ்ரத் திப்பு ஷஹீத் (ரஹ்) அவர்களின் படத்திலும் தாடியில்லாமல்தான்

யிருக்கிறது என்று சையத் சாஹிப் அவர்களும் வலியுறுத்துகிறார்கள். அதற்கு, "யார் சொன்னது? திப்புசுல்தான் அவர்களுக்கு ஒன்றரைப்பிடி தாடியிருக்கிறது. அவர்கள் இப்பொழுதும் மாமன்னரராகவேயிருந்து வருகிறார்கள்" என்று ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் மறுமொழி கூறினார்கள்.

## ஜின்னால் பிடிக்கப்பட்டவர் குணமுறல்

வட ஆர்க்காடு மாவட்டம் ஆரணியில் சிராஜ் என்னும் வாலிபர் தமது 13, 14 வயதில் பராத் இரவில், கபரஸ்தான் ஜியாரத்திற்குப் போய் வந்த மறு நாள் சுரம் கண்டு பேச்சு மூச்சில்லாமல் இருப்பதை, அவர் பெற்றோர்கள் பலரிடம் காட்டி ஓதிப் பார்த்து கயிறு கட்டினார்கள். அதன் பின்பு தாமாகவே, யாசீன் சூரா மற்றும் குர்ஆன் ஷரீபிலுள்ள சூராக்களை சிராஜ் ஓத ஆரம்பித்தார். சில நாட்களுக்குப்பின் தமக்கு ஒரு ஜின் பிடித்திருப்பதாகவும் அது நேர்வழியைக் காட்டுமேயல்லாது வழி கெடுப்பதல்லவென்றும், சில காலமிருந்து விலகி விடுமென்றும், அதன் பெயர் அபுல் ஹஸன் அலவி ஷாதல்வி பக்தாதி என்றும் சிராஜ் தெரிவித்தார். சிராஜியிடம் யார் எந்தக் கேள்விக் கேட்டாலும் பதில் அளிப்பார். டாக்டர்கள், வைத்தியர்கள் கைவிட்ட சில நோயாளிகளை சிராஜ் சுகப்படுத்தியிருக்கிறார். அவரிடம் எந்த பாஷையில் பேசினாலும் பதில் சொல்வார். ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களின் கலீபாக்களில் ஒருவரான மௌலானா மௌலவி அல்ஹாஜ், ஹஜ்ரத், முஹம்மத் கமாலுத்தீன் சாஹிப் அவர்கள், சிராஜிடம் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களிடம் அல்லது ஹஜ்ரத் ஷைக் ஹசன் சாஹிப் மலபாரி வேலூரி இடம் பையத் செய்து கொள்ளும்படி சொன்னார்கள். அதற்கு ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களிடம் சென்று பையத்

செய்து கொள்ளும்படியாகவும், அதன் பின் நாம் அதிக மாக வரமாட்டேன் என்று ஜின் சொன்னதாக சிராஜ் சொல்லி ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களிடம், பையத் செய்து கொண்டார். ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் பையத் செய்த பின்பு ஜின்னுடைய தொடர்பு அகன்றது.

திருச்சியில் ஒருவருக்கு ஜின் பிடித்து நீண்ட நாட்களாகத் தொல்லே அனுபவித்துக் கொண்டிருந்தார். அவர் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு ஜின்னின் இன்னல் ஒழிந்தது.

## அஸ்ஸாம் மாநிலத்தில்

'ஹஜ்ரத் ஷைக் மதனீ (ரஹ்) அவர்களுடன் நமது காஜா (ரஹ்) அவர்கள் அஸ்ஸாமில் திக் விஜயம் செய்து கொண்டிருந்தார்கள். தங்களின் மாமூலாதுகளைத் தனிமையில் செய்து முடிக்க நகருக்கு வெளியே மூன்று மைல் தூரத்திலிருந்த ஒரு மஸ்ஜிதுக்குச் சென்றார்கள். மஸ்ஜிதின் கதவுகளை உள் தாழ்ப்பாளிட்டு தனிமையில் அமர்ந்து திக்ருகளை ஆரம்பித்தார்கள். அது சமயம் மர்ம மனிதர் ஒருவர் உள்ளிருந்தபடி அவர்களின் ஊர், பெயர், முதலியவற்றை வினவலுற்றார். ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களின் தக்க மறுமொழிகளைக் கேட்ட அவர் ஹஜ்ரத் மதனி (ரஹ்) அவர்களின் பயிற்சி யிலிருப்பது பெரும் பாக்கியம் என்றார். இப்பாக்கியத்தை யருளிய அல்லாஹ்வுக்கு ஷுக்ரு செய்தவனுயிருக்கிறேன் என்று காஜா (ரஹ்) அவர்கள் சொன்னார்கள்.

பலநாட்கள் வரை அதே மஸ்ஜிதில் தங்கள் மாமூலாதுகளை நிறைவேற்றிவந்தனர். மீண்டுமொரு முறை அந்த மர்ம மனிதர் அங்கு பிரசன்னமானார். பள்ளியின் கதவுகளை தாழிட்டுக் கொண்டு உள்ளே இருக்கும் போது தங்களால் எப்படி வரமுடிகிறது என்று காஜா (ரஹ்)

அவரிடம் வினவினர். இது கேட்ட அம் மர்ம மனிதர் புன் முறுவல் பூத்தவராய் மறைந்து விட்டார். காஜா (ரஹ்) அவர்கள் திடுக்குற்று பள்ளியை விட்டு வெளியேறி ஹஜ்ரத் மதனி (ரஹ்) அவர்களின் திருச்சமுகம் சென்று விவரத்தைக் கூறினர். அம்மனிதரிடம் பைஅத் வாங்கிக் கொள்ளும்படிச் சொல்லியிருக்கலாமே என மொழிந்த ஹஜ்ரத் மதனி (ரஹ்) அச்சமின்றி அதே பள்ளிக்குச் சென்று மாமூலாதுகளை நிறை வேற்றும்படிக் கூறினர். ஹஜ்ரத் காஜா (ரஹ் அவர்களும் அதன்படியே செய்து வந்தனர்.

## கிலாபத் பெறுதல்

காஜா (ரஹ்) அவர்களின் பரிபக்குவ நிலையை ஹஜ்ரத் ஷைக் மதனி (ரஹ்) அவர்கள் அறிந்தனர். கிலாபத்தை அளித்திட முடிவு செய்தனர். அஸ்ஸாமின் அழகு நகர் சில்ஹெட்டில் ஆயிரக்கணக்கான ஆலிம்கள், பெரியார்கள் சூழ்ந்திருந்த பெரும் சபையில் வைத்து தமது அன்புக்குரிய சீடர் காஜா (ரஹ்) அவர்களுக்கு கிலாபத்தை அருளினர். முப்பத்தைந்து வயதுக்குள்ளேயே நமது காஜா (ரஹ்) அவர்கள் கிலாபத் பெற்றுர்கள் என்றால் அவர்களின் ஞான முதிர்ச்சியை என்னென்றுரைப்பது! இதிலிருந்து காஜா (ரஹ்) அவர்களின் ஆன்மிகப் படித்தரம் உன்னத நிலையை நோக்கிச் செல்வதாயிற்று.

## இதயத்திரை யகலல்

ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் திக்ரிலிருக்கும்போது இதயத்தின் திரைகள் விலக ஆரம்பித்தன. உட்கார்ந் திருக்குமிடத்திலிருந்தே தேவ்பந்து தபால் நிலையம் தெரியலானது. அந்நிலையத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் நன்கு தெரிந்தது. பிறகு உட்கார்ந்திருந்த வகையிலேயே, மத்ரஸா மாணவர் விடுதிக்குள் நுழைந்து, அங்கிருந்த

புத்தகத்தை எடுத்தார்கள். இவைகளை எண்ணிப் பார்த்த சமயத்தில் தாம் எந்த மஸ்ஜிதில் எந்தவிதம் உட்கார்ந்து திக்ரு செய்துகொண்டிருந்தார்களோ அவ்விதமேயிருந்து திக்ரு செய்வதையும் கண்டார்கள். மறுநாள் அந்த விடுதி மாணவர்கள் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களிடம் "நேற்று இரவு எங்கள் அறையில் ஒரு புது நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அதாவது படித்துமேஜை மேல் வைத்திருந்த புத்தகம் காலையில் பார்த்தால் கீழே விழுந்திருக்கிறது. பேனு மெதுவாக ஆடிக்கொண்டிருக்கிறது. அறையில் ஜின்னு டைய நடமாட்டமிருக்குமோவென்று சந்தேகமிருக் கிறது," என்றார்கள். இந்த விஷயத்தை ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் ஷைக் மதனீ (ரஹ்) அவர்களிடம் எடுத்துரைக்க அவர்கள் இச்சம்பவங்களின் காரணங்களை எடுத்து விளக்கினார்கள்.

தேவ்பந்தில் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் திக்ரி லிருக்கும்போது ஒரு மௌலவி சாஹிபுடைய அறைக்குள் சென்று திரும்பிவிட்டார்கள். ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் திக்ரிலிருந்த இடத்திற்கும் அந்த மௌலவி சாஹிப் அவர்களின் அறைக்கும் சுமார் ஒரு பர்லாங்கிற்கு மேல் தூரமிருக்கும். மறுநாள் அந்த மௌலவி சாஹிப் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களை சந்தித்து, "நேற்று இரவு என் அறை கதவைத் திறந்து உள்ளே வந்த நீங்கள், ஒன்றும் சொல்லாமல் திரும்பி விட்டீர்களே, வந்த விஷய மென்ன?" என்று கேட்டார்கள். இதையும் ஷைக் மதனீ (ரஹ்) அவர்களிடம் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர் கள் தெரிவிக்க அதற்கு அவர்கள் விளக்கம் தந்தார்கள்.

## ஃபைஜுபிஷ் ஷைகு

ஒரு நாள் ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் பேரணும் பட்டு, தம் இல்லத்தில் படுத்திருக்கும் போது, தம்மை

ஷைக் மதனி (ரஹ்) அவர்களைப் போலக் கண்டு, சந்தேக முற்று எழுந்து, கண்ணாடியில் பார்க்க, தாம் ஹஜ்ரத் ஷைக் மதனீ (ரஹ்) அவர்களைப் போல் தோற்றமளிக்க, ஒன்றும் புரியாமல் மறுபடி படுத்துக் கொண்டார்கள். சிறிது நேரத்தில் அவர்களின் மனைவியார் வந்து பார்த்ததில் தம் கணவரின் படுக்கையில் ஷைக் மதனீ (ரஹ்) அவர்கள் படுத்திருப்பதைக் கண்டு, ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களின் தாயார் அவர்களிடம் "தம் கணவரின் படுக்கையில் ஹஜ்ரத் ஷைக் மதனீ (ரஹ்) அவர்கள் வந்து படுத்திருக்கிறார்கள். ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் அங்கில்லை", என்று சொன்னார்கள். அதற்கு அவர்கள் "ஹஜ்ரத் ஷைக் மதனீ (ரஹ்) அவர்கள் இப்பொழுது எங்கிருந்து திடீரென வந்திருக்கப் போகிறார்கள். காஜா (ரஹ்) அவர்கள் தான் படுத்திருப்பார்கள்" என்று சொல்லிக்கொண்டு ஹஜ்ரத் அவர்களின் படுக்கை அறைக்குச் சென்று பார்த்ததில் ஹஜ்ரத் ஷைக் மதனீ (ரஹ்) அவர்களே படுத்திருப்பதைக் கண்டு வீட்டிற்குள் வந்து பேசிக்கொண்டிருந்து பிறகு மறுமுறை மெல்ல எட்டிப் பார்க்க, தம் மகனாரான ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் படுத்திருப்பதைக் கண்டார்கள். மறுநாள் காலையில் இந்த நிகழ்ச்சியை ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களின் தாயாரும், மனைவியாரும் ஹஜ்ரத்திடம் சொன்னார்கள். இந்த சம்பவத்தை விவரமாக ஹஜ்ரத் ஷைக் மதனீ (ரஹ்) அவர்களுக்கு ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் எழுத, அதற்கு ஷைக் மதனீ (ரஹ்) அவர்கள் நீங்கள் பனுபிஷ் ஷைக்கில் காமிலாகவும், முக்கம்மிலாகவும் திகழ்கிறீர்கள்", என்று பதில் எழுதினார்கள்.

### திரு மக்கமா நகரில்

ஹரம் ஷரீபில் தலாயிலுல் கைராத் ஓதுவது தடை செய்யப்பட்டுள்ளது. ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் தங்கள் ஹஜ்ஜின் போது தாலாயிலுல் கைராத் ஓதியபடி

தவாபு செய்துகொண்டிருந்தனர். இது கண்ட போலீஸார் அவர்களைக் கைது செய்ய முனைந்தனர், தவாபு செய்ப வரைக் கைது செய்வது குற்றம் என்பதை ஹஜ்ரத் அவர்கள் உணர்த்தினர். தவாபு முடிந்ததும் மீண்டும் அவர்களைக் கைது செய்ய போலீஸார் முயன்றனர். ஹரம் ஷரீபில் எவரையும் கைது செய்யலாகாது என்ற சட்டத்தை ஹஜ்ரத் அவர்கள் எடுத்துக் கூறினர். வேறு வழியின்றி போலீஸார் ஹஜ்ரத் அவர்கள் தங்கியிருக்கும் முகவரியைக் கேட்டறிந்து வழக்குப் போட்டு விட்டார்கள். குறிப்பிட்ட தேதியில் ஆஜராகும்படி கோர்ட்டிலிருந்து சம்மன் வந்தது. முஅல்லிமுடன் காஜா (ரஹ்) அவர்கள் கோர்ட்டில் ஆஜரானார்கள். தலாயிலுல் கைராத்தையும் புர்தா ஷரீபையும் தாம் ஓதுவதை ஒருபோதும் நிறுத்தப் போவதில்லை என்று ஆணித்தரமாக எடுத்துக் கூறினார்கள்.

அரசாங்க சட்டத்தை மீறுவோர்களை கைது செய்து சிறையில் வைத்து ஹஜ்ஜு முடிந்த பிறகுதான் விடுதலை செய்வது வழக்கம் என்பதைக் குறிப்பிட்டு இதன் காரணமாய் ஹஜ்ரத் அவர்களின் ஹஜ்ஜு நிறைவேறாமல் போய் விடும் என்பதை மேஜிஸ்ட்ரேட் எடுத்துக் காட்டினார். அல்லாஹ்வுக்கு அவ்வாறு விருப்பம் இருக்குமாயின் அப்படியே நடந்தேறட்டும். ஓதுவதை தாம் நிறுத்தப் போவதில்லை என்று ஹஜ்ரத் அவர்கள் அழுத்தந் திருத்தமாக மறுமொழி புகன்றனர். உறுதி வாய்ந்த இந்த பதிலைக் கேட்ட மேஜிஸ்ட்ரேட் பிறர் காதில் படா வண்ணம் மெதுவாக ஓதிக் கொள்ளும்படி ஆலோசனை கூறி வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்.

## திருமதீனா மஸ்ஜிதுந் நபவியில்

நபிகள் கோமான் (ஸல்) அவர்களின் புனித ரவுலா ஷரீபுக்கு எதிரே நின்று பயபக்தியுடன் ஸலாமுரைக்

கின்றார்கள், நம் காஜா (ரஹ்) அவர்கள். அவ்வமயம் பெருமானார் (ஸல்) அவர்களின் ஜியாரத் கிடைக்கிறது. அவர்களை நெருங்கி மொஹரே நுபுவ்வத்—நபித்துவ முத்திரை என்ற இலாஞ்சனையை பரவசத்துடன் முத்தமிடுகிறார்கள். மெய் சிலிர்க்க உளம் பூரிக்க உணர்விழந்த நிலையில் தள்ளாடுகிறார்கள். காவலுக்கு நின்ற போலீஸ் காரர் அவர்களைத் தாங்கிப் பிடிக்க முன் வருகிறார். இந் நிலையில் காஜா (ரஹ்) அவர்கள் சுய உணர்வு பெற்று விடுகிறார்கள். இச்செய்தியை காஜா (ரஹ்) அவர்கள் கரூர் ஹக்கீம் அவர்களிடமும் பேரணாம்பேட்டை பக்கர் பாய் அவர்களிடமும் தெரிவித்தனர். இதனை பிறருக்கு வெளிப்படுத்த வேண்டாம் என்று பக்கர் பாயை நோக்கிச் சொல்லியிருக்கிறார்கள். தமக்குத் தடை விதிக்கவில்லை என்ற காரணத்தால் கரூர் ஹக்கீம் அவர்கள், அவர்களின் விஸாலுக்குப் பின்னர் இம்மகத்தான சம்பவத்தை வெளிப் படுத்தினர்.

மதீனா முனவ்வராவில் தங்கியிருந்த சமயம் தாம் கண்ட ஒரு கனவுக்கு இந்தியப் பெரியார் ஒருவரிடம் விளக்கம் கேட்டதற்கு அப்பெரியார் "உங்கள் ஜனாஸாவில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கலந்து கொள்வார்கள்" என்று காஜா (ரஹ்) அவர்களுக்கு மறுமொழி பகர்ந்தனர்.

### காஜா (ரஹ்) அவர்களின் நல்லுபதேசம்

திருச்சி காஜா நகரில் ஜனாப் சாப் அவர்களின் இல்லத்தில் ஒரு நாள் பஜ்ருக்குப் பின் ஹஜ்ரத் அவர்கள் சாலிக்கீன்கள் புடைசூழ அமர்ந்திருந்தனர். அது சமயம் ஜமால் முகம்மது கல்லூரியின் முன்னாள் பிரின்ஸிபால் அல்ஹாஜ் ஸயீத் அஹ்மத் (மர்ஹூம்) அவர்களின் மனைவியார் உள்ளிருந்தபடி ஹஜ்ரத் அவர்களுக்கு சலாமுரைத்து

ஹஜ்ரத் ஷைகுல் இஸ்லாம் ஹுசைன் அஹ்மத் மதனீ (ரஹ்) அவர்கள் மூலம் கேட்டறிந்த ஹதீத் ஒன்றைக் கூறுமாறு வேண்டிக்கொண்டார். ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்கள் கூறலாயினர். ஹஜ்ரத் மதனீ (ரஹ்) திரு மக்கமாநகரில் ஹரம் ஷரீபில் அமர்ந்திருக் கின்றனர். காட்டரபி ஒருவர் அவர்களை அணுகி வாழ்நாள் முழுதும் கடைபிடித் தொழுகத் தக்க நஸீஹத்தை தமக்கு கூறி யருளுமாறு வேண்டுகிறார். ஹஜ்ரத் அவர்கள் கருணை ததும்ப அவரை நோக்கிக் கூறுகின்றார்கள்.

"வேலை வருமுன் ஓய்வு நேரத்தையும் வறுமை வருமுன் செல்வத்தையும், நோய் வந்தணுகு முன் உடல் நலத்தையும், முதுமை நெருங்கு முன் வாலிப பருவத்தையும், மரணம் தழுவு முன் ஆயுட் காலத்தை யும் பயன் தரும் வகையில் செலவு செய்யுங்கள்"

என்ற கருத்துள்ள ஐந்து விஷயங்களை நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளனர். மேலும் நான்கு செய்திகளை நானும் உமக்குக் கூறுகிறேன். கடைபிடித்து வாழ்வீராக. அவை யாதெனில், "இவ்வுல கில் ஷைத்தானையன்றி வேறு எவரையும் பகைவராகக் கருதாதீர். நன்மையும் தீமையும் அல்லாஹ்வின் புறத்தி லிருந்து வருவதாக எண்ணுவீராக. இதனால் பிறர்மீது விரோதமும் குரோதமும் ஏற்படாது. கிடைத்திருக்கும் அருமையான காலத்தை விரயம் செய்யாமல் அல்லாஹ் வின் திக்ரில் சிந்தனையில் கழிப்பீராக. நமது நாயகம் (ஸல்) அவர்களின் இணையற்ற சுன்னத்துகளை பரிபூரண மாய் பின்பற்றி பேணுதலுடன் வாழ்வீராக;

ஹஜ்ரத் ஷைக் மதனீ (ரஹ்) அவர்களின் இவ்வரிய உபதேச மொழிகளை காஜா (ரஹ்) அவர்கள் கூறக் கேட்ட அம்மையாரும் மற்றையோரும் பரவசமுற்றனர்.

## ஸாலிக்கீன்களின் பண்புகள்

ஹஜ்ரத் காஜா (ரஹ்) கூறுகிறுர்கள்:-

தாத்தளவில் மூழ்கியிருக்கும் ஸாலிக்கானவன் அண்ட சராசரங்களேயும் பார்க்கிருன். அதே சமயம் தாத்தே வஹ்தத்திலும் மூழ்கி விடுகிருன். அவன் உலகத்தைப் பார்ப்பதாக மற்றவர்களுக்குத் தோற்ற மளித்தாலும் உண்மையில் அவன் தாத்தே வாஹிதைக் காண்பவனுகவே இருக்கிருன், ஓரிடத்தில் பல விளக்குகள் எரிந்து கொண்டிருந்தாலும் வெளிச்சம் என்பது ஒன்றேயாகும்.

ஷரீஅத்தைப் பேணி நடப்பதில்தான், ஸாலிக் தரஜாவை அந்தஸ்தைப் பெறுகிருன். தொழுகை, நோன்பு, ஜகாத். ஹஜ், திலாவத் முதலியன ஷரீஅத்தின் பொதுவான செயல் முறைகளாகும். இவை மட்டுமே ஷரீஅத் என்று மக்கள் கருதுகின்றனர். உண்மை யாதெனில் நமது நாயகம் (ஸல்) அவர்கள் அன்ருடம் தாங்கள் கடைபிடித்துவந்த, கடைபிடிக்குமாறு ஏவிய செயல் முறைகள் அனைத்தையும் நாம் மேற்கொண்டு வாழ்வதுதான் ஷரீஅத் என்பதாகும்.

உண்பது, பருகுவது, உறங்குதல், அமருதல், எழுதல், உரையாடல், உறவாடல், திருமணம் புரிதல், குடும்பம் நடத்துதல், விவசாயம், வியாபாரம், உத்தியோகம் ஆகிய தொழில் புரிதல், விருந்தினரை உபசரித்தல், ஏழைகளே அரவணைத்தல், பெரியோர்—அறிஞர்களுக்கு கண்ணியம் அளித்தல், சிறியோரிடம் அன்பு காட்டல், நடை, உடை, பாவனே, மற்றும் இவை போன்ற வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் நமது நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் காட்டிய நடைமுறைகளே மனமுவந்து ஏற்று பரிபூரணமாகக் கடை பிடித்து வாழ்வதே ஷரீஅத் ஆகும்.

**ஈமான், எக்கீன்**

ஈமானில் எக்கீன்-உறுதி இல்லையெனில் பயன் இல்லை. எதை எதை நம்ப வேண்டும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்களோ அவையனைத்தையும் பரிபூரண மாய் நம்பி செயல்பட வேண்டும்.

ஒரு முறை நமதருமை அன்னையார் கதீஜா (ரஹ்) அழுது கொண்டிருந்தனர். அருமை மனைவியாரது அழு கையின் காரணத்தை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வின வினர். "நமது அருமைக் குமாரர்கள் தங்களுக்கு நபிப் பட்டம் வருவதற்கு முன்பே இறந்துவிட்டனர். ஈமான், இஸ்லாம் என்பதை அறியாமல் இறந்து போன அவர் களின் கதி ஆகிரத்தில் யாதாகுமோ என்று நினைத்து அழு கிறேன்" என்று அன்னை கதீஜா (ரலி) மறுமொழி கூறினர்.

நம் குழந்தைகள் இதர குழந்தைகளுடன் சுவனபதி யில் விளையாடி மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள் விரும் பினால் உமக்குக் காட்டுகிறேன் என்று பெருமானார் (ஸல்) கூறியருளினார். இது கேட்ட நமது பரிசுத்த அன்னையார் முன்னிலும் அதிக துயரத்துடன் அழுது புலம்பினர். மங்களமான நற்செய்தி கேட்டு மகிழ்ச்சி அடைவதற்கு மாற்றமாய் துயருறுவது ஏன் என அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டனர். தங்களின் வாக்கில் எனக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் அல்லவா சுவர்க்கக் காட்சியை தாங்கள் எனக்குக் காட்ட வேண்டும்? சாட்சிப் பிரமாணம் காட்டு மளவுக்கு என் ஈமானின் எக்கீன் குறைந்து போய் விட்டதா என்று நினைக்க துயரம் தாங்கவில்லை என்று அன்னை கதீஜா (ரலி) அவர்கள் மொழிந்தனர். இதுதான் உண்மையான ஈமான் எகீன் என்பதாகும். நமது நாயகம் (ஸல்) அவர்களின் சகாபாப் பெருமக்கள் அனைவரிடமும் இத்தகைய பண்புகள் பூரணம் பெற்றிருந்தன. இந்த

அளவுக்கு எக்கீன் இருந்தால் சாலிக்கீன்களின் அஞ்ஞானத் திரைகள் தாமாகவே அறுந்து விழத் தொடங்கும்.

## இக்லாஸ், இஹ்ஸான்

முகலாயப் பேரரசர் ஹஜ்ரத் அவுரங்கஸீப், ஆலங்கீர், (ரஹ்) அவர்கள் முஸ்லிம்கள் யாவரும் ஐங்காலமும் இமாம் ஜமாஅத்துடன் தொழ வேண்டும் என்றும், தவறுவோர், மரணதண்டனை விதிக்கப்படுவர் என்றும் ஆணை பிறப்பித்தனர்.

மரண தண்டனைக்கஞ்சி அனைவரும் ஜமாஅத்துடன் தொழுதனர். ஜமாஅத் நடக்கும் போது மஸ்ஜிது நடுங்குவது போன்ற காட்சியை பேரரசர் கண்டனர். எனவே டில்லி ஜாமிஆ மஸ்ஜிதில் இரண்டிரண்டு பேர்களாக வந்து தொழுதுச் செல்ல வேண்டுமென்று உத்தரவிட்டனர். ஒரு புறம் அமர்ந்து பாதுஷா அவர்கள் தொழுபவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தனர். இருவர் தொழுது கொண்டிருக்கின்றனர். அவ்விருவரில் ஒருவர் ஸுஜூது செய்யமுற்படும் போது மஸ்ஜிதும் ஸுஜூது செய்யக் குனிவது போன்ற காட்சியை உணர்ந்த பாதுஷா அவர்கள், "அவர் ஸுஜூது செய்வதை விட்டும் தடுத்து தனிமையில்வைத்து விசாரித்தனர். அவர் கூறுவார்:—நான் பெரும்பாவி, வழிப்பறி செய்வோரின் தலைவன், பஞ்சமாபாதகங்கள் புரிந்தவன் பன்முறை சிறை சென்றவன், தொழுதறியாதவன், பேரரசரின் தண்டனைக்கு அஞ்சியே தொழ வந்தேன். பள்ளியில் நுழையும் போது, யாஅல்லாஹ்! ஆயுள் முழுவதையும் உன்னை வணங்காது கழித்து விட்டேன். பாவத்தை யன்றி நன்மை எதுவும் செய்தேனில்லை. குற்றங்கள் புரிந்தாலும் உன்னுடைய அன்பிலும் கருணையிலும் பூரணமான ஆதரவு கொண்டவனாகவே இருந்தேன். ரஹீம், ரஹ்மான், கரீம், நீ என்பதில் எனக்கு எந்த வித ஐயமும் ஏற்பட்டதில்லை.

எல்லை கடந்த உனது அருளன்பில் முழுமையான எக்கீன் கொண்ட நிலைமையிலேயே இதுகாறும் பாவச் செயல்களை புரிந்து வந்தேன். ஆலங்கிர் பாதுஷாவின் கட்டளைக்கு பயந்துதான் உன் திரு வீட்டுக்கு வந்தேன். பாதுஷா மனிதர்தான். தமது எண்ணம், செயல் முறைகளை அடிக்கடி மாற்றிக் கொள்ளும் தன்மையுடையவர் தான்.

நீயோ மாறுத கருணையுடையவன், மன்னிப்பருள்பவன் என்ற எண்ணம் நெஞ்சில் மேலோங்கியது. இந்த நிலைமையில் நுழைந்து தக்பீர் கட்டினேன். நீயே மஃபூது! (வணக்கத்திற்குரியவன்) நீயே மஸ்ஜூது (ஸுஜூதுக்கு உரியன்) என்ற உறுதியுடன் தொழ ஆரம்பித்தேன். நீயே ஜப்பார்! நீயே கஹ்ஹார் என்ற எண்ணம் நெஞ்சில் மிகைத்தெழவே அச்சம் ஏற்பட்டு பயந்து நடுநடுங்கினேன். இந்நிலையில் ஸுஜூதுக்குச் செல்ல முனையும் போது தாங்கள் என்னைத் தடுத்து விட்டீர்கள்.

இச்செய்தி கேட்ட பேரரசர் அவுரங்கஸீப் (ரஹ்) அவர்கள் கண்ணீர் உகுத்தனர். உண்மையான இஹ்ஸானுக்கும், இக்லாஸுக்கும் இது சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும்.

## இமாமுல் அஃலம் நபிபெருமான் (ஸல்) அவர்கள்மீது கொண்டிருந்த அன்பு

இமாமுல் அஃலம் ஹஜ்ரத் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் திருமதீனா நகருக்கு விஜயம் செய்தனர். மூன்று தினங்களுக்குப் பிறகு அப்புனித நகரை விட்டுப் புறப்படலாயினர். அவர்கள் மீது அழுக்காறு கொண்டிருந்தவர்களுக்கு நல்லதோர் வாய்ப்பு ஏற்பட்டது. "வாழ்நாள் முழுவதும் மதீனாநகரில் கழிப்பதையும் மரணமுற்று அடக்கம் பெறுவதையும் பெரும்பாக்கியமாய் கருதி நல்லோர்கள் இறைவனிடம் இறைஞ்சிக்கொண்டிருக்க பெரும்

இமாம் என்று கூறப்படும் ஒருவர் மூன்று தினங்களில் புனித நகர் விட்டு ஓடுகிறார்" என ஏளனம் செய்யலானார்கள். இமாம் அவர்களின் அன்பர்கள் இதனை அவர்களுக்கு எடுத்துக் கூறி மேலும் சில நாட்கள் தங்கிப் போகுமாறு வேண்டினார்கள். கண்ணீர் மல்க இமாம் அவர்கள் விளக்கினார்கள். "இந்தப் புனிதத் திருநகரில் நமதருமை நாயகம் (ஸல்) அவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களின் தூயதிருப்பாதங்கள் பட்டு இந்நகரின் புழுதியெல்லாம் புனிதம் பெற்றன. இத்திரு நகரிலேயே இன்றும் நமதாருயிர் நாயகம் (ஸல்) இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலைமையில் இத்திரு நகரில் மல ஜலம் கழிக்க என் மனம் எவ்வாறு இசையும்! அன்பர்களே! மூன்று தினங்களாக நான் உண்ணவும் பருகவும் இல்லை. மலஜலம் கழிக்கவுமில்லை. பசி தாகத்தைப் பொறுத்துக் கொள்ளலாம். சிறு நீர் வெளியாவதைத்தடுக்க இனி எனக்கு சக்தியில்லை புறப்படுகிறேன்."

இமாம் அவர்களின் மறுமொழி கேட்டு அன்பர்கள் கண்ணீர் விட்டுக் கலங்கி அழுதனர்.

## கல்வி கற்பதின் அவசியம்

மார்க்கக் கல்வி கற்பது இஸ்லாமிய ஆண் பெண் இருபாலார் மீதும் கடமையாக்கப் பட்டிருக்கிறது. அல்லாஹ்வின் மீது அச்சமும் அவனருள் மீது நாட்டமும் ஏற்பட கற்ற கல்வி உதவியாயில்லாவிடில் அக்கல்வியே அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையே பெரும் திரையாகி விடுகிறது.

நமது நபிபெருமான் (ஸல்) அவர்கள் கல்வி பயிலாதவர்கள். ஜிபுரயீல் (அலை) அவர்கள் இக்ராஃ—ஓதுவீராக என்று கூறிய போது நான் கல்வி கற்காதவன் என்று பெருமானார் (ஸல்) மறுமொழி கூறினார்கள். உடனே ஜிபுரயீல் (அலை) பெருமானார் (ஸல்) அவர்களை இறுக அணைத்து

மார்புறத் தழுவினார்கள். அக்கணமே நம் பெருமானார் (ஸல்) அவர்களின் இதய கமலத்தில் அண்ட சராசரங்களின் தத்துவ ஞானம் சுடர் வீசலாயிற்று. அதே பாரம் பாரியம் இன்று வரை மெய் ஞானிகளின் தொடர்பில் ஜொலித்துக் கொண்டிருக்கிறது.

## கலீபாக்கள் கண்ட காட்சி

பங்களூர் ஆலிஜனுப், அல்ஹாஜ், சலீம் சேட் அவர்களும், பங்களூர் லால் மஸ்ஜித்பேஷ் இமாம் மௌலானா மௌலவி, யஹ்யா சாகிப் அவர்களும் ஹஜ்ரத் மதனீ (ரஹ்) அவர்களின் மறைவுக்குப் பிறகு யாரைப் பின்தொடர்வது என்ற கவலை கொண்டிருந்தார்கள். ஒரு இரவு சலீம் சேட் கனவொன்று கண்டார்கள். ஹஜ்ரத் ஷைகு மதனீ (ரஹ்) அவர்கள் தங்கள் கலீபாவான ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களின் முதுகைப் பிடித்து விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். சலீம் சேட்ஷைகு அவர்களின் முன் சென்று அவர்கள் செய்யும் வேலையைத் தாம் செய்வதாய் வேண்டுகின்றார்கள். ஷைகு மதனீ (ரஹ்) அவர்கள் எனக்குப் பின் இந்த வேலையைகாஜா சாகிபுக்கு நீர் செய்வீராக என்று உத்தரவிட்டு தனி அறைக்குள் சென்று தாழிட்டுக் கொள்கிறார்கள். இக் கனவுக்குப் பிறகு சில நாட்களில் ஷைகுல் இஸ்லாம் மதனீ (ரஹ்) மௌத்தானார்கள். இதன்பிறகு ஒரு ஷைகின் முரீது கள் என்ற முறையில் தாம் சகஜமாகப் பழகி வந்த காஜா பஷீர் (ரஹ்) அவர்கள் சமூகம் வந்து பயிற்சி பெற்று அவர்களின் முதல் கலீபாஎன்ற தகுதியை சலீம் சேட் அவர்கள் பெற்றார்கள்.

மௌலானா மௌலவி யஹ்யா அவர்கள் புதிய ஷைகாக யாரை அடைவது என்ற கவலையில் திக்ரு செய்து கொண்டிருந்த சமயம் "பஷீர் பஷீர்" என்று பொறிக்கப் பட்ட

நட்சத்திரங்கள் காட்சி வழங்கின. அதன் பின் பேரணும் பட்டிற்கு வந்து காஜா பஷீர் அஹமது (ரஹ்) அவர்களின் தொடர்பில் பக்குவம் பெற்று இரண்டாவது கலீபா வானுர்கள்.

## காஜா (ரஹ) அவர்களின் குடும்பம்

ஹஜ்ரத் அவர்களின் தமக்கையார் உம்முஸ் ஸல்மா என்பவர்கள். தமையனர் அப்துல் ஹக்கீம் காலம் சென்ற பிறகு அவர்களின் குடும்பப் பொறுப்பையும் ஹஜ்ரத் அவர்கள் ஏற்று நன்கு பராமரித்து வந்தனர். இரு சகோதரர்களுக்கும் ஆண் சந்ததி இல்லை. இரண்டிரண்டு பெண்மக்களே இருக்கின்றனர்.

1972 ஆகஸ்ட் மாதத்தில் தம்முடைய மூத்த மகளாரை தமது பெரிய தந்தை ஜனப் அப்துல் வஹாப் அவர்களின் பேரரும் ஜனப் அப்துஸ்ஸமத் அவர்களின் குமாரருமான ஆலிஜனப் ஹாபீஸ் அஷ்பாக்குர் ரஹ்மான் அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள்.

உடல் நலிவுற்றிருந்த காஜா (ரஹ்) அவர்கள் விரைவில் உலகை விட்டுச் செல்லப் போவதை அறிந்திருந்தார்கள் போலும். திருமணத்துக்கு வந்து சேருமாறு முரீதுகள் அனைவருக்கும் தங்கள் கலீபாக்கள் மூலம் அழைப்பு விடுத்திருந்தார்கள். பன்னூற்றுக்கான முரீதுகளும் அன்பர்களும் இரண்டு தினங்கள் பேரணும் பட்டில் குழுமியிருந்து திருமணத்தில் கலந்து கொண்டனர். எதிர் வீட்டில் பலஹீன நிலையில் படுத்திருந்தபடி தங்கள் முரீதுகளுக்குத் தனித் தனியே பேட்டி யளித்து அவரவர்களின் ஐயம் தீர்த்து விளக்கம் தந்து வழிகாட்டியருளினுர்கள்,

## வியாபாரம்

ஹஜ்ரத் அவர்கள் விலையுயர்ந்த பசுக்களை பிரியருடன் வளர்த்து வந்தார்கள். நாளாக நாளாக முரீதுகள்

அதிகரித்துக் கொண்டிருந்தனர். அவர்களை கவனிக்க வேண்டிய அவசியம் காரணமாய், பசுக்கள் வளர்ப்பதை நிறுத்தி விட்டு தமது தோல் மண்டியை மட்டும் நடத்தி வந்தார்கள், செல்வச் சீமானின் திருமகனுகப் பிறந்த அவர்கள் செல்வ நிலையை விருத்தி செய்ய வாய்ப்பும் வசதியும் இருந்தும் முரீதுகளுக்குப் பயிற்சியளிப்பதில் இடையூறு ஏற்படாதவாறு சிறிய அளவில் தொழில் செய்தனர். தமது கான்காஹ்வுக்கு தம்மை நாடி வரும் அன்பர்கள், முரீதுகள் ஆகியோருக்கு தங்கள் செலவிலேயே உணவு விருந்துபசாரம் செய்து வந்தனர்.

## காஜா (ரஹ்) அவர்களின் குணச்சிறப்பு

ஆத்மீக படித்தரத்தில் உச்ச நிலையடைந்திருந்த ஹஜ்ரத் அவர்கள் வெளித்தோற்றத்தில் மிகவும் அடக்க முடன் காட்சியளித்தார்கள். தங்கள் முரீதுகளிடம் மிகவும் அன்புடன் பழகுவார்கள். ஒவ்வொருவரின் பெயரும் அவர்களுக்கு நன்கு ஞாபக மிருக்கும். பெயருடன் மரியா தைக் குரிய அடைமொழியாகிய பாய் என்ற வார்த்தை யும் சேர்த்து அன்பொழுக அழைப்பார்கள். தங்கள் கலீபாக்களிடம் பேசும் போது யார் கலீபா, யார் ஷைகு என்று புதிதாக வந்தவர்களுக்குத் தெரியாது. அத்துணை மரியாதையுடன் தங்களது கலீபாக்களிடம் நடந்து கொள்வார்கள், அவர்களது திருக்கரத்தை முத்தமிட யாரும் முயன்ருல், நான் உங்களை விட சிறந்தவனல்ல இத்தகைய மரியாதையை தயவு செய்து எனக்கு கொடுக்க வேண்டாம் என்று வருத்தமான குரலில் கூறுவார்கள்.

இறுதி ஆண்டுகளில் வருட மொரு முறை அவர்களின் கான்காஹ்வில் மூன்று தினம் திக்ரின் இஜ்திமா நடை பெற்றன. ஆயிரக்கணக்கில் முரீதுகளும் முஹிப்புகளும் வந்து கூடுவர்: ஹஜ்ரத் அவர்களின் குரல் கம்பீரமும்

இனிமையும் கலந்து திக்ரை ஒலிக்கும், மற்றவர்கள் ஊனுருக உளமுருக திக்ரைத் தொடர்வர். இஷாவுக்குப் பிறகு புர்தா ஷரீப் ஓதப்படும்.

உணவு, உறக்கம், ஓய்வு நேரம் நீங்கிய மற்ற நேரங்களில் வஃழு, தஃலீம், நடைபெறும்.

காஜா (ரஹ்) அவர்களும் அவர்களின் கலீபாக்களும் மிகவும் அருமையான பயான்கள் நஸீஹத்துகளை வழங்குவார்கள்.

காஜா (ரஹ்) அவர்கள் தங்கள் முரீதுகளுடன் ஒரே பந்தியில் அமர்ந்து உணவருந்துவார்கள்.'

நல்ல உயரம். பொது நிறம். ஞான ஒளி வீசும் அமைதி தவழும் திருமுகம், கருணை பொழியும் கண்கள், எடுப்பான நாசி, பிடரி வரை தவழும் தலை முடி, நெஞ்சுவரை நீண்ட மருதாணிச் சாய மேற்றிய அழகிய தாடி, கம்பீர நடை ஆகிய அம்சங்களுடன் காட்சியளிக்கும் ஹஜரத் காஜா (ரஹ்) அவர்கள் காண்போர் உள்ளங்களில் முதற் பார்வையிலேயே பதிந்து விடுவார்கள். மணம் பூசுவது, விழிகளுக்கு சுர்மா இடுவது ஆகிய சுன்னத்தைப் பேணுவதில்—கவனமாயிருப்பார்கள்.

ஹஜ்ரத் அவர்கள் மூலம் வெளியான கஷ்பு கராமாத்துக்கள் அதிகம். அவர்களிடம் நெருங்கிப் பழகி பயன் பெற்ற பாக்கியசாலிகள் அவைகளை நன்கறிவார்கள். ஹஜ்ரத் அவர்கள் அவைகளை வெளியாகுவதில் பிரியமற்றவர்களாய் இருந்தமையால் நாமும் இங்கு அவைகளை விவரிக்காமல் விடுத்தோம்.

## ஹஜ்ரத் அவர்களின் பிரிவு

1970-ம் ஆண்டிலிருந்து அவர்களின் உடல் நலம் குன்ற ஆரம்பித்தது. தங்களது நிலைமையை நன்குணர்ந்து

கொண்ட போதிலும் முஹிப்பீன்களுடைய வற்புறுத்தலுக்காகவும் மன ஆறுதலுக்காகவும் வைத்திய சிகிச்சைக்கு இசைந்தார்கள். ஹஜ்ரத் அவர்களின் வாழ்நாளின் ஒவ்வொரு வினாடியும் எத்துணைப் பலன் செறிந்தது என்பதை யுணர்ந்த முஹிப்பீன்களுடைய பிரயாசை பலனளிக்க வில்லை. அவர்கள் நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும் என்ற அபிலாஷை நிறைவேறவில்லை. ஹஜ்ரத் மதனீ (ரஹ்) அவர்களால் கவ்கபுல் ஹிந்த்—இந்தியாவின் நட்சத்திரம்—என்று அழைக்கப்பட்ட ஒளி சிந்தும் அத்தாரகை உலகை விட்டு மறைந்தது. ஆம், ஹஜ்ரத் காஜா பஷீர் அஹ்மத் (ரஹ்) அவர்கள் ஐம்பது வயது பூர்த்தியாகாத நிலையில் 1973 செப்டம்பர் 25ம் தேதி ஹிஜ்ரி 1392 ஷஃபான் பிறை 27ல் ழுஹருக்குப் பின் விசாலானார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். அவர்களின் வஸிய்யத்தின்படி திக்ரு, பன்னிரு தஸ்பீஹ் மஜ்லிஸுக்குப் பிறகு அவர்களின் மூதாதையர் அடங்கியிருக்கிற பேரணாம்பேட் சவுக் பள்ளி பொது கப்ருஸ்தானில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

குத்புஜ் ஜமான், ஷைகுல் மஷாயிகு, கவ்கபுல் ஹிந்த், அல்ஹாஜ், ஹஜ்ரத் காஜா பஷீர் அஹ்மத் சாகிப் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்களின் கலீபாக்களில் முக்கியமானவர்கள்:—

1. அல்ஹாஜ் மௌலானா ஹஜ்ரத் ஸலீம் சேட், பங்களூர்.

2, மௌலானா மௌலவி ஹஜ்ரத் யஹ்யா சாகிப், லால் மஸ்ஜித் பங்களூர்.

3. மௌலானா ஹக்கீம் ஹஜ்ரத் குலாம் முஹம்மது சாகிப், கரூர்.

4. மௌலானா மௌலவி ஹஜ்ரத் சையித் அப்துல் கனீசாகிப், அரசாங்க காஜி, திருச்சி.

5. மௌலானா மௌலவி அல்ஹாஜ் ஹஜ்ரத் முஹம் மத் கமாலுத்தீன் சாகிப், ஆரணி.

6. மௌலானா மௌலவி ஹஜ்ரத் சையித் ஸிப்கதுல் லா சாகிப், முதர்ரிஸ், பாக்கியாதுஸ்ஸாலிஹாத், வேலூர்.

7. மௌலானா மௌலவி ஹஜ்ரத் மீரான் முஹையி தீன் சாகிப், முதர்ரிஸ், ஷபீலுர் ரஷாத் அரபிக் கல்லூரி, பங்களூர்.

8. மௌலானா மௌலவி ஹஜ்ரத் முஹம்மது இப் ராகீம் சாகிப், விருஞ்சிபுரம்.

## பைஅத் என்றால் என்ன?

என் கண்ணியமிக்க சகோதரர்களே! பெரியோர் களே!! "பைஅத்," "ஸுலூக்" இன்னும் "தரீகத்" சம்பந்த மாக சிலவற்றைக் கூற உத்தரவிடப் பட்டிருக்கிறேன். இவைகள், ஷரீஅத்திற்கு முரண்பட்டவை என்றும், அருமை நாயகம் (ஸல்அம்)அவர்கள் இவைகளைப் போதிக்க வில்லை என்றும், தற்காலத்தில் சிலர் அபிப்பிராயப்படுகின்ற னர். "தஸவ்வுப்" புக்கும். "தரீகத்" திற்கும் பொறுப்புள்ள வர்கள் சிலரின் ஷரீஅத்திற்கு முரண்பட்ட சில காரியங் களையும், செயல்களையும் கண்டு சிலர் "தஸவ்வுபும், தரீகத் தும்" நாயகம் (ஸல்அம்) அவர்களின் வழிபாட்டிற்கு முரண்பட்டவைகளல்லவா?"எனச் சந்தேகம் கொள்கின்ற னர். ஆனால், உண்மையில் இவ்வாறு கிடையாது.

"பைஅத்" என்றால், ஷரீஅத் (மார்க்கத்)தின் ஏதே னும் ஒரு விஷயத்தை "அல்லாஹ்வின் உத்தரவுப்படி,

அதை நிறைவேற்றுவேன்'' என்று வாக்குறுதி வாங்குவதன் பெயராகும். அல்லது ''ஏதேனும் ஒரு குறிப்பிட்ட மார்க்க விஷயத்தில் செயல்படுவேன்'' என்றும் வாக்குறுதி செய்வதாகும்.

நபிகள் நாயகம் (ஸல்அம்) அவர்கள், பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு வாக்குறுதி வாங்கியுள்ளார்கள். ஹுதைபிய்யா யுத்தத்தின்போது, ''நாம் விரோதிகளோடு யுத்தம் செய்ய நேரிடும்போது ஓடமாட்டோம்; உயிருள்ள வரையில் எதிரிகளை எதிர்த்துப்போராடுவோம்; இன்னும், மரிக்க நேரிட்டால், அதனையும் ஏற்றுக்கொள்வோம்; இஸ்லாத்தின் உயர்வுக்காக எங்கள் உயிரையே அர்ப்பணம் செய்துவிடுவோம்'' என்று வாக்குறுதி வாங்கினார்கள். அல்லாஹுதஆலா சூரதுல் ''பத்ஹ்'' வில் கூறியுள்ளான்:

''அந்த மரத்தினடியில் உம்மிடம் கை கொடுத்து வாக்குறுதி செய்த விசுவாசிகளைப் பற்றி நிச்சயமாக அல்லாஹ் திருப்தி அடைந்தான். அவர்களின் இருதயங்களிலிருந்த (உண்மையான தியாகத்)தை நன்கறிந்து சாந்தியையும், ஆறுதலையும் அவர்களின்மீது சொரிந்தான்: உடனடியாக ஒரு வெற்றியையும் (கைபர் என்னும் இடத்தில்) அவர்களுக்கு வெகுமதியாகக் கொடுத்தான்.''

(26ஆம் பாகம்—48ஆம் அத்தியாயம் 18ஆம் ஆயத்து) இவ்வாறே சூரத்துல் ''மும்தஹினா'' வில், பெண்களிடத்தில் வாக்குறுதி வாங்குவதைப் பற்றி அல்லாஹுதஆலா கூறியுள்ளான்:

''நபியே! விசுவாசங் கொண்ட பெண்கள் உம்மிடம் வந்து, அல்லாஹ்வுக்கு யாதொன்றையும் இணை வைப்பதில்லை யென்றும், திருடுவதில்லை யென்றும், விபசாரம் செய்வதில்லை யென்றும், தங்கள் சந்ததிகளை

கொலை செய்வதில்லை யென்றும் கை கால்கள் அறிய (அதாவது பொய்யெனத் தெரிந்தே) கற்பனையாக அவதூறு கூறுவதில்லை என்றும், நன்மையான காரியங்களில் உமக்கு மாறு செய்வதில்லை என்றும், உம்மிடம் (பைஅத்—வலக்கை கொடுத்து) வாக்குறுதி செய்தால் அவர்களிடம் வாக்குறுதி பெற்றுக் கொண்டு, நீர், அவர்களுக்காக (முன்னர் அவர்கள் செய்துவிட்ட குற்றங்களுக்கு) அல்லாஹ்விடத்தில் மன்னிப்பைக் கோரும், நிச்சயமாக, அல்லாஹ், மிக்க மன்னிப்போனும், கிருபையுடையோனுமாயிருக்கின்றான்.

**(28ஆம்-பாகம்—61ஆம் அத்தியாயம்—12ஆம் ஆயத்து)**

அறியாமையின் காலத்தில் தம் பிள்ளைகளைத் தாய் தந்தைகள் பஞ்சத்தின் காரணமாக கொலை செய்து விடுவது வழக்கமாக இருந்தது. "ஆகவே, தரித்திரத்திற்கு பயந்து உங்கள் குழந்தைகளைக் கொலைசெய்து விடாதீர்கள்" என அல்லாஹுதஆலா கூறியுள்ளான்.

இவ்வாறு ஜனங்கள் பலவிதமான தீய செயல்களில் ஈடுபட்டிருந்தார்கள்; இவைகளை விட்டு நீங்கி நாயகம் (ஸல்அம்) அவர்களைப் பின்பற்றி நடப்போம் என்று வாக்குறுதி வாங்கப்பட்டது. இந்த ஆயத்துகளில் அல்லாஹுதஆலா, "பெண்களிடத்தில் வாக்குறுதி வாங்குங்கள்: அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோருங்கள்" என்று நாயகம் (ஸல்அம்) அவர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறான். ஆகவே, வாக்குறுதி வாங்குவது (பைஅத்) அல்லாஹ்வின் உத்தரவுப்படி நடந்தது என்று தெரியவருகிறது.

ஹஜ்ரத் உபாதா பின் சாமித் (ரலி) அவர்கள், பைஅத்தே உக்பாவில் கலந்துகொண்ட பன்னிரண்டு நபர்களில் ஒருவர்; இவர், இஸ்லாமிய (முபல்லிக்) பிரசாரகராக அனுப்பப்பட்டவர்: இவைகளைத் தவிர. இவர் உலகத்தி

லேயே மன்னிக்கப்பட்ட பத்ர் யுத்த வீரர்களில் ஒருவர். இதே உபாதா பின் சாமித் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். "ஒருநாள் நாயகம் (ஸல்அம்) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். ஸஹாபாக்களின் ஒரு கூட்டம் அவர்களைச் சூழ்ந்திருந்தது. ஹஜ்ரத் நபிகள் நாயகம் (ஸல்அம்) ஸஹாபாக்களை நோக்கிக் கூறினார்கள்:—

"அல்லாஹ்வுக்கு யாதொரு இணை வைப்பதில்லை; திருடுவதில்லை; விபசாரம் செய்வதில்லை; தங்களுடைய பிள்ளைகளைக் கொலை செய்வதில்லை; பழி சுமத்துவதில்லை; எந்த நல்ல காரியத்திலும் உத்தரவு மீறி நடப்பதில்லை என்று என்னிடம் வாக்குறுதி செய்யுங்கள். எவனொருவன் இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவானோ அவனுக்கு அதன் நற்கூலியைக் கொடுப்பது அல்லாஹ்வின் பொறுப்பாகும். எவனொருவன் இவைகளினின்றும் எந்த ஒரு பாவத்திற்கும் ஆளாவானோ அவனுக்கு இவ்வுலகத்திலேயே தண்டனை கிடைத்துவிட்டால் அதற்குப் பகரமாகிவிடும். இவ்வுலகத்தில் அல்லாஹ் அந்த குற்றத்திற்குத் தண்டனை கொடுக்காமல் மறைத்து விடுவானேயாகில், அதை மன்னிப்பதும் மன்னிக்காமல் அதற்குத் தண்டனை கொடுப்பதும் அல்லாஹ்வின் பொறுப்பாகும்."

இவ்வாறு கூறியபின், "நாம், இந்த விஷயங்கள் மீது பைஅத் செய்து கொண்டோம்" என்று ஹஜ்ரத் உபாதா பின் சாமித் (ரலி) கூறுகிறார்கள். (புகாரி ஷரீப்—கிதாபுல் ஈமான்)

"நாயகம் (ஸல்அம்) பலபேர்களிடம் பல விஷயங்களுக்காக பைஅத் வாங்கியுள்ளார்கள். எல்லா முஸ்லிம்களின் நலனை நாடவும், அவர்களைப் பாதுகாக்கவும், மேலும் தடுக்கப்பட்டவைகளினின்றும் விலகி இருக்கவும் நாயகம்

(ஸல்அம்) அவர்கள் என்னிடம் பைஅத் வாங்கினார்கள்" என்பதாக ஹஜ்ரத் ஜுபைர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

"ஹுதைபிய்யாவில் எந்த விஷயத்துக்காக பைஅத் வாங்கப்பட்டது?" என்று ஹஜ்ரத் ஸல்மா பின் அக்வ இடத்தில் கேட்டபோது, "மரணத்தின் மீது" என்று அவர்கள் பதிலளித்தார்கள். அதாவது, "யுத்தத்தில் இறந்து விடுவோம்; ஓடமாட்டோம்" என்பதற்காக பைஅத் வாங்கப்பட்டது.

சில சந்தர்ப்பங்களில் விசேஷமான காரியங்களுக்காக வும், சில சந்தர்ப்பங்களில் ஷரீஅத் பூராவிற்காகவும் • சிலருக்கு யாரிடத்திலும் எதையும் கேட்டு வாங்க மாட் டோம் என்றும் பைஅத் வாங்கப்பட்டது. இதன் காரண மாக ஸஹாபாக்கள் கீழே விழுந்த சாட்டையைக் கூட தாமே ஒட்டகத்திலிருந்து கீழே இறங்கி எடுத்துக் கொள் வார்கள். ஒருக்கால் இதுவும் ஒரு கேள்வியாகி விடுமோ என்ற பயத்தால், பிறருக்கு எடுத்துக் கொடுக்கும்படிகூடக் கூறமாட்டார்கள். நாயகம் (ஸல்அம்) அவர்கள் சில சமயங் களில் சில விஷயங்களுக்காகவும், சில சமயங்களில் ஷரீஅத் பூராவுக்காகவும் பைஅத் வாங்கியதாக பல இடங்களிலும், பல விதங்களில் குர்ஆன் ஷரீபிலும், ஹதீஸ் ஷரீபிலும் கூறப்பட்டிருக்கிறது.

பைஅத் என்பது ஒரு புதிய வஸ்துவல்ல. குர்ஆன், ஹதீஸில் கூறப்பட்டுள்ள அநேக நிகழ்ச்சிகளிலிருந்து இதற்கு ஆதாரம் கிடைக்கிறது. நாயகம் (ஸல்அம்) அவர் களின் காலத்திலிருந்து இந்தத் தொடர்ச்சி இன்று வரை நடந்துவருகிறது. தற்சமயம், ஷரீஅத் சட்டங்களை அனு சரித்து நடப்போம்; அல்லாஹ்வின் தியானம் (திக்ரு) செய்வோம் என்பதன்மீதுதான் பைஅத் செய்யப்படு

கிறது. இதற்கே "தரீகத்தின் பைஅத்" என்றும் சொல்லப் படுகிறது. பைஅத்தின் முறைகள் எல்லாக் காலங்களிலும் நடைபெற்று வந்திருக்கிறன. அல்லாஹ்வின் நல்லடியார் களும் முஸ்லிம்களிடத்தில் இது சம்பந்தமாக பைஅத் வாங்கியுள்ளார்கள்.

## பைஅத் வாங்கத் தகுதியுள்ளவர் யார்?

பைஅத் வாங்க எல்லோருக்கும் உரிமை கிடையாது. எவனொருவன் பாவங்களை விட்டும் விலகி, ஒரு (ஷேக்) குருவிடமிருந்து குர்ஆன்—ஹதீஸின் பிரகாரம் ஹிருதய பூர்வமாக சுத்தியடைந்து, தம் குருவின் மூலமாக ஆத்மீக சக்தி பெற்றிருப்பானோ அவன்தான் பிறரிடம் பைஅத் வாங்கத் தகுதியுள்ளவன். சென்ற காலத்தில் இவ்வித குணமுடையவர்களின் கரங்களின் மீதுதான பைஅத் செய்யப்பட்டு வந்தது. எல்லா ஸஹாபாக்களிடத்திலும் இந்த குண விசேஷங்களிருந்தன. ஆனால், ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களாலும், அவர்களுக்குப்பின் ஹஜ்ரத் ஹஸன் பஸ்ரீ (ரஹ்) அவர்களாலும் அந்த பைஅத் முறை தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது.

## பீர் அல்லது ஷைக்

ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும், அவர்களுக்குப் பிறகு ஹஜ்ரத் ஹஸன் பஸரி (ரஹ்) அவர்களுக்கும் மேலும் அவர்களைத் தொடர்ந்து பைஅத் வாங்கக்கூடிய அவர்களுடைய கலீபா (பிரதிநிதி)க் களுக்கும் பீர் என்று சொல்லப்படுகிறது. 'பீர்' என்றால், 'முதியவர்' என்ற பொருளாகும்; அறபி பாஷையில் அதற்கு 'ஷைக்' எனக் கூறப்படுகிறது.

பொதுவாக, யாரொருவர் அதிகமாக அல்லாஹ்—அவனது தூதர் (ஸல்-அம்) ஆகியோர்களின் ஏவல்—விலக்

கல்களை யனுசரித்து, அவ்வழிபாட்டிலேயே அநுபவத்தையும் அடைந்து, பிறகு தப்லீக் (மார்க்கப் பிரசாரம்) செய்த வண்ணமாக முதுமை பெற்று விடுகிறார்களோ, அவர்களுக்கு 'பீர்' என்று கூறப்படுகிறது. 'பீர்' என்பது ஒரு குறிப்பிட்ட நபரின் பெயரோ, அல்லது ஒரு மார்க்கத்தின் பெயரோ கிடையாது. யாரொருவர் மார்க்கப் பேணுதலுடன் நீண்டகாலம் 'ரியாஜத்' (ஆத்மிகப்பயிற்சி) செய்த வண்ணமாக அதிக அளவு அல்லாஹ்வுக்கு வழிபட்டவராக இருந்து, உலகப் பேராசையுள்ளவராக இல்லாமல், அல்லாஹ்வின் எல்லாவிதமான வணக்கங்களோடு சம்பந்தம் ஏற்பட்டு விடக்கூடிய அளவு வணங்கக் கூடியவர்தான் 'பீர்' ஆவார். ஆனால், காலப்போக்கிலே எவ்வாறு ஒவ்வொரு கூட்டத்திலும் உண்மையானவர்களும், போலியானவர்களும் இருப்பதுண்டோ, அதைப் போலவே இந்த தரீகத் (நடைமுறை) வழிபாட்டிலும் உண்மையானவர்களும், போலியாட்களும் ஏற்பட்டு விட்டார்கள்.

யாரொருவர் ஷரீஅத் (விதிமுறை) படி நடக்காமலும், ஸுன்னத்தைப் பின்பற்றக் கூடியவராக இல்லாமலும் இருக்கிறார்களோ, அவர், பைஅத் வாங்கத் தகுதியற்றவராவார். இது சம்பந்தமாக திருக்குர்ஆனில்,

> "விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து (சொல்லிலும், செயலிலும்) உண்மையாளர்களுடன் இருங்கள்"

*11—ஆம் பாகம்—9ஆம் அத்தியாயம்—119ஆம் ஆயத்*

என்று அல்லாஹ் எச்சரிக்கின்றான். யாரொருவர் சகல வகையிலும் உண்மையானவராகவும், ஏமாற்றுந் தன்மை இல்லாதவராகவும், அல்லாஹ்வுடனும், அவனுடைய ரஸூல் (ஸல்அம்) அவர்களுடனும் உண்மை

யாக நடந்து கொள்வாரோ அத்தகையவர்தான் 'பீர்' ஆவார். அவரைத்தான் 'பீர்' என ஏற்றுக் கொள் வதுண்டு.

"விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொண்டு, அவனிடம் செல்வதற்குரிய வழியைத் தேடிக் கொள்ளுங்கள். அவனுடைய பாதையில் (யுத்தம் செய்ய) பெருமுயற்சி எடுத்துக் கொள்ளுங் கள். அதனால் நீங்கள் வெற்றியடையலாம்"

6—ஆம் பாகம்—5-ஆம் அத்தியாயம்—35 ஆயத்

என்ற திருக்குர்ஆன் வசனமும் இங்குக் குறிப்பிடத் தக்கது. "ஈமான்" (விஸ்வாசம்) முதல் ஸ்தானத்திலும், "தக்வா" (இறையச்சம்) இரண்டாம் ஸ்தானத்திலும், வஸீலா (வழி)வைத் தேடுவது மூன்றும் ஸ்தானத்திலும் உள்ளது. வஸீலா என்பதற்குப் பொருள், முர்ஷிதை (ஞானகுரு) தேடுவது என அறிஞர்களின் அபிப்பிராயம். நான்காவது, அல்லாஹ்வின் வழியில் "ஜிஹாத்" (மார்க்க யுத்தம்) செய்வது. இதில் தன்னுடைய நப்ஸுடன் (இச்சை) எதிர்த்துப் போராடுவதே முதல் ஜிஹாத் ஆகும்.

**தரீகத்து (நடைமுறையும்) தஸவ்வுபும் (ஆத்மார்த்தீகமும்) ஸுன்னத்தின் பழைமையான முறையாகும்,**

"தரீகத்" என்பதும். 'தஸவ்வுப்' என்பதும் புதியன வல்ல. இவை பழைமையானது. நீண்டகாலமாக நடந்து வருகிறது. நபிகள் நாயகம் (ஸல்-அம்) அவர்கள் ஒரு கூட்டத்தாருடன் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது எவருமறியாத ஒரு மனிதர் வந்தார். அவருடைய உடை களோ மிக வெண்மையாக இருந்தன. அவர், நபிகள் நாயகம் (ஸல்-அம்) அவர்களின் மிக சமீபமாக, முழங்காலு டன் முழங்காலைச் சேர்த்து உட்கார்ந்து கொண்டார்.

அவர் பிரயாணியாகவும் தெரியவில்லை. ஏனெனில் பிரயாணத்திலிருந்து வந்தவரின் உடைகள் பொதுவாக அழுக்கடைந்திருக்குமே! என நாம், மிக வியப்பிலிருந்தோம். வந்தவர், நாயகம் (ஸல்-அம்) அவர்களைப் பார்த்துக் கேட்டார். "ஈமான் என்றால் என்ன?" என்று, அதற்கு "அல்லாஹ்வின் மீதும், திருத்தூதர்கள் மீதும், வானவர்கள் மீதும், கியாமத் (இறுதி) நாள் மீதும், நல்லதும் கெட்டதுமான விதிகள் அல்லாஹ்வின் புறத்தாலுள்ளது என விசுவாசங் கொள்வது" என நாயகம் (ஸல்-அம்) பதிலளித்தார்கள். இதற்குப் பிறகு "இஸ்லாம் என்றால் என்ன?" என்று கேட்டபோது, "அல்லாஹ் ஒருவன் என்றும், முஹம்மது நபி (ஸல்-அம்) அல்லாஹ்வின் திருத்தூதர் என்றும் சாட்சியம் கூறுவது: அல்லாஹ்வுடன் இணை வைக்காதிருப்பது; தொழுகையை நிலை நாட்டுவது; நோன்பு வைப்பது; ஜகாத் கொடுப்பது: வசதிப்பட்டால் 'ஹஜ்' செய்வதே இஸ்லாம்" என்று பதிலளித்தார்கள். இதற்குப்பின் "இஹ்ஸான்" என்றால் என்ன?" என்று கேட்டதற்கு, "அல்லாஹ்வை நீங்கள் பார்ப்பதுபோல் அவனை வணங்குங்கள்; மேலும், நீங்கள் அவனைப் பார்க்காவிட்டாலும் அவன் உங்களை எல்லா நிலைமையிலும் பார்த்துக்கொண்டே இருக்கிறான் (என்பதே இதன் பொருள்)" என்று நாயகம் (ஸல்-அம்) பதிலளித்ததாக ஸஹாபாக்கள் கூறியிருக்கிறார்கள்.

இஹ்ஸானைப்பற்றி திருக் குர்ஆனில் பல்வேறு இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. "நிச்சயமாக, அல்லாஹ் உடைய அருள், நன்றி செய்வோருக்கு (முஹ்ஸினீன்களுக்கு) மிக்க சமீபத்திலிருக்கிறது" என்றும், வேறோரிடத்தில், "நன்றிக்கு நன்றியேயன்றி, வேறு கூலியுண்டா?" என்றும் இதைப்போன்ற வேறு பல ஆயத்துகளும் இருக்கின்றன.

"அல்லாஹ்வை நீங்கள் பார்ப்பதுபோல் வணங்குங்கள். நீங்கள் அவனைப் பார்க்காவிடினும், அவன் உங்களை நிச்சயமாகப் பார்க்கின்றான்" என்று நபிகள் நாயகம் (ஸல் அம்) திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள். அல்லாஹ்வின் வணக்கத்தை முழுபக்தியுடனும் உள்ளச்சத்துடனும் நிறைவேற்றுவதன் பெயரே "இஹ்ஸான்" என்பதாகும். நீங்கள் அல்லாஹ்வைப் பார்த்துக்கொண்டு இருப்பது போன்ற உணர்வுடன் அவனை வணங்குங்கள். எவ்விதமாக ஒரு வேலைக்காரன், தன் எஜமானனின் முன்னிலையில் முழு கவனத்துடன் வேலை பார்க்கிறானோ, அவ்வேலையில் யாதொரு குறைபாடும் செய்வதில்லையோ, அதைப் போலவே, நீங்களும் உண்மையான எஜமானனை நேரில் பார்ப்பதைப்போல் எல்லா வணக்கங்களையும் நிறைவேற்றுங்கள். 'நாம் அல்லாஹ்வைப் பார்க்க முடியாதே. என்று நினைக்கும் பட்சத்தில், அவன் உங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கிறான் என்று கருதுங்கள் எஜமானன் எந்நேரமும் பார்த்துக் கொண்டே இருப்பதால்தான் வேலைக்காரன் அவ்வேலையைச் சிறப்பாக முடிப்பதுண்டு.

இத்தகைய இஹ்ஸானைப் பெறுவதே தஸவ்வுபின் அடிப்படையாகும். ஹஜ்ரத் நபிகள் நாயகம் (ஸல் அம்) அவர்கள் காலத்திலே யாரொருவர் ஈமானுடன் அவர்களுடைய சந்நிதானத்திலே ஆஜராகிறார்களோ, அவர்கள் இஹ்ஸானை அடைந்துவிடுவார்கள். ஹஜ்ரத் நபிகள் நாயகம் (ஸல் அம்) அவர்களுடைய ஆத்மீக சக்தி எவ்வளவு திடமாக இருந்ததென்றால், எந்த ஒரு நபர், அவர்களுடைய சந்நிதானத்திலே ஆஜராகிறாரோ, அவருடைய உள்ளம், அவர்களின் ஆத்மீகச் சக்தியால் கவரப்பட்டு அவர் எல்லாவற்றையும் மறந்தவராகி, அல்லாஹ்வின் பக்கம் சாய்ந்தவராகி விடுகிறார்.

நபிகள் நாயகம் (ஸல் அம்) அவர்கள் தன்னைச் சார்ந்தவர்களை அடிக்கடி விசாரிப்பதுண்டு. ஹஜ்ரத் ஹன்ஜலா (ரலி) அவர்கள் சில நாட்கள் (ஸல் அம்) அவர்கள் சந்நிதானத்தில் ஆஜராகவில்லை. அப்பொழுது நாயகம் (ஸல் அம்) அவர்கள் அவரைப் பற்றி விசாரித்தார்கள். அப்பொழுது ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், "நான் அவரைப் பற்றி விசாரித்து வருகிறேன்" என்று சொல்லி அவர் வீட்டுக்குச் சென்று விசாரித்த பொழுது, ஹஜ்ரத் ஹன்ஜலா (ரலி) ஒரு மூலையில் தலையைக் கவிழ்த்த வண்ணம் உட்கார்ந்திருப்பதாக அன்னாரது மனைவியார் பதிலளித்தார். ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அனுமதியுடன் வீட்டிற்குள் சென்று பார்த்தபொழுது ஹஜ்ரத் ஹன்ஜலா (ரலி) அவர்கள் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தார்கள். விசாரித்ததின் பேரில், "நான், முனுபிக் (கபட விசுவாசி) ஆகிவிட்டேன்" என்று ஹஜ்ரத் ஹன்ஜலா (ரலி) பதிலளித்தார்கள். ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) "அது எப்படி?" என்று கேட்டதற்கு, அவர், "நபிகள் நாயகம் (ஸல் அம்) அவர்களின் சந்நிதானத்திலிருக்கும் போது, உலக விவகாரங்களை எல்லாம் நான் மறந்து அல்லாஹ்வுடன் அதிகத் தொடர்புள்ளவனாக இருக்கிறேன். இதற்கு நேர்மாறாக வீட்டிலிருக்கும் பொழுது, பிள்ளைக் குட்டிகளோடு இல்லற வாழ்வில் மூழ்கிவிடுகிறேன். அந்த நிலைமை இருப்பதில்லை" என்று கூறினார்.

இதைக் கேட்ட ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களும், "என்னுடைய நிலைமையும் இப்படித்தான் இருக்கிறது" என்று கூறிக்கொண்டு, அவர்களும் அழ ஆரம்பித்துவிட்டார்கள். பிறகு ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் "இவ்வாறு அழுதுகொண்டிருப்பதில் யாதொரு பயனுமில்லை; நமது எல்லாத் துன்பங்களுக்கும் ஒரு நல்ல பரிகாரம் காண நபிகள் நாயகம் (ஸல் அம்) அவர்

களிடத்திலே செல்லலாம்'' என்று கூறினார்கள். ஹஜ்ரத் ஹன்ஜலா (ரலி) அவர்களுக்கும் இந்த யோசனை மிக நல்லதாகத் தெரிந்தது. அவ்வாறே இருவரும் நாயகம் (ஸல்-அம்) அவர்களின் சந்நிதானத்திலே பிரசன்னமாகி, தங்களது நிலைமைகளைப்பற்றி முறையிட்டார்கள். அதற்கு ஹஜ்ரத் நபிகள் நாயகம் (ஸல் -அம்) அவர்கள், ''நீங்கள் எந்நேரமும் என்முன் இருப்பதைப் போன்ற நிலையிலேயே இருப்பீர்களேயானால், வானவர்கள் உங்களோடு கைலாகு (முஸாபஹா) செய்வார்கள். ஆனால், இந்நிலைமை சிற்சில சந்தர்ப்பங்களில்தான் ஏற்படுவதுண்டு'' என்று பதிலளித்தார்கள்.

நாயகம் (ஸல்-அம்) அவர்கள் சூரியனைப்போலும் ஸஹாபாக்களின் பரிசுத்தமான ஹிருதயங்கள் கண்ணாடிகளைப்போலும் இருந்தன. நாயகம் (ஸல்-அம்) அவர்களின் சந்நிதானத்திலிருக்கும் சமயத்தில் உள்ள நிலைமைக்கும், அதனை விட்டு அப்புறமாகும் சமயத்திலுள்ள நிலைமைக்கும் மாறுதல் ஏற்பட்டு விடுவதுண்டு.

## ஸஹாபியாக்களின் ஈடுபாடுகளும் ஆத்மார்த்த சுத்தியும்

நபிகள் நாயகம் (ஸல்-அம்) அவர்கள் வசம் நான்கு காரியங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவைகள் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

> அல்லாஹ் விசுவாசிகளின் மீது மெய்யாகவே அருள் புரிந்திருக்கிறான். அவர்களுக்காக ஒரு தூதரை (அதுவும்) அவர்களிலிருந்தே எழுந்தருளச் செய்தான். அவர், அவர்களுக்கு அல்லாஹ்வுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து. அவர்களைப் பரிசுத்தமாக்கியும் வைக்கின்றார். அன்றி, அவர்களுக்கு வேதத்தையும்,

ஞானத்தையும் கற்றுக்கொடுக்கின்றார். நிச்சயமாக, அவர்கள், (நிராகரிப்போர்) இதற்குமுன் பகிரங்க மான வழிகேட்டில்தான் இருந்தனர்.

4ஆம் பாகம்—3ஆம் அத்தியாயம்—194ஆம் ஆயத்து

1. குர்ஆன் ஷரீபின் ஆயத்துகளை ஓதிக்காண்பிப் பார்கள் இவ்வாறு குர்ஆன் ஷரீபில் நான்கு ஐந்து இடங் களில் கூறப்பட்டிருக்கிறது.

2. குர்ஆன் ஷரீபை கற்பித்துக் கொடுப்பார்கள்.

3. அறிவு நுணுக்கங்களை எடுத்துக் காட்டுவார்கள்.

4. ஜனங்களின் ஹிருதயங்களிலுள்ள அழுக்கைப் போக்கி, அவைகளைச் சுத்தப்படுத்துவது, நான்காவது வேலையாக இருந்தது. அதாவது: நாயகம் (ஸல்-அம்) அவர்களின் ஆத்மிக சக்தியின் காரணமாக முஃமின்களின் ஹிருதயங்களிலுள்ள அழுக்கு விலகிவிடும்; அல்லாஹ் வைத் தவிர வேறு விஷயங்களின்பால் உள்ள அன்பு குறைந்து, சகல விதமான தீமைகளும் விலகிவிடும்.

ஹஜ்ரத் அனஸ்-(ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:—

"நாயகம் (ஸல்-அல்)அவர்கள் மதீனாவில் நுழை யும் போது, அங்குள்ள ஒவ்வொரு வஸ்துவும் பிரகாசம் உள்ளதாகக் காணப்பட்டது. அவர்கள் இருக்கும் வரை எல்லா வஸ்துக்களும் பிரகாசமாகவே காணப் பட்டன. அவர்களுடைய மறைவுக்குப் பிறகு, அவர் களை எந்த சந்தர்ப்பத்தில் அடக்கம் செய்யப் பட்டதோ, அதே கணத்திலே மதீனா முனவ்வராவிலே ஜொலித்துக்கொண்டிருந்த அந்தப் பிரகாசம் அஸ்த மித்து விட்டது. அடக்க வேலையை முடித்து, நம் கை களிலிருந்த மண்ணைத் தட்டிச் சுத்தப் படுத்துவதற்கு

முன்னமேயே எங்களுடைய ஹிருதயங்கள் இலேசான தாகத் தோன்ற ஆரம்பித்து விட்டன.

இதற்குப் பிறகு நாயகம் (ஸல்-அம்) அவர்களோடு ஒன்றித்துப் போயிருந்தவர்கள் கண்ட மாறுதல்கள் அனந்தம்.

நபிகள் நாயகம் (ஸல்-அம்) அவர்கள் ஆத்மார்த்தீக சூரியனாக இருந்தார்கள். ஸஹாபாக்கள் அவர்களிடத்திலிருந்து அதன் பிரகாசத்தை அடைந்து வந்தார்கள். இந்த அடிப்படையில் எந்த ஒரு முஸ்லிம், நாயகம் (ஸல்-அம்) அவர்களின் சன்னிதானத்தில் சில நிமிடங்களும் கூட கழித்தவர், நாயகம் (ஸல்-அம்) அவர்களின் காலத்திற்குப் பிறகு வரக்கூடிய பெரிய வலிமார்களைவிட சிறந்தவராவார், என்று சுன்னத் வல் ஜமா அத்தாரின் ஏக முடிவாகும். ஒருவருடைய ஆத்மாவும், அறிவும் பிரகாசமுள்ளதாக மாற்றப்படுவதில், நாயகம் (ஸல்-அம்) அவர்களின் ஆத்மீக சக்தியானது மிக பலம் பொருந்தியதாக இருந்தது. ஆகவேதான், ஸஹாபாக்களுக்கு அதற்கான விசேஷ பயிற்சி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட வில்லை. பரிசுத்தமான எண்ணத்துடன் பிரசன்னமாயிருப்பதே அவர்களுக்குப் போதுமானதாய் இருந்தது. "நாயகம் (ஸல்-அம்) அவர்களைவிட்டுப் பிரிந்த பிறகு அந்தப் பிரகாசம் இருக்கவில்லை," என்று ஹஜ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறியதைப் போல், ஸஹாபாக்களின் காலத்திற்குப் பிறகு காலதூரம் ஏற்பட, ஏற்பட ஆத்மீக சக்தியிலும், ஹிருதய சுத்தியிலும் குறைவு ஏற்பட்டுக்கொண்டே போய்விட்டது. சுத்தமான பாத்திரங்களைக் கழுவுவதால் எவ்வாறு சீக்கிரமாக அதிலுள்ள அழுக்குப் போய்விடுமோ அவ்வாறே ஸஹாபாக்களின் சுத்தமான ஹிருதயங்களைச் சுத்தப்படுத்த விசேஷ பயிற்சிக்கான தேவையிராது போய்விட்டது. ஆனால்,

காலப் போக்கில் ஹிருதயங்களில் அழுக்கு சேர்ந்து, அது அதிகரிக்க, அதிகரிக்க ஆத்மசுத்திக்கு அப்பியாசமும் அதிகம் தேவையாகி விட்டது.

## ஆத்மசுத்தி-ஞான வழிபாடு (தஸவ்வுப்) இஹ்ஸான்

இஹ்ஸான் என்பது ஒரு வஸ்துவல்ல. ஹிருதயத்தை சுத்தப் படுத்திக் கொள்வதுதான் இஹ்ஸான். தஸவ்வு பின் நோக்கமும் இதுதான். இந்த தஸவ்வுபின் நோக்கம் ஒரு புதிய விஷயமல்ல. இது ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) யின் ஹதீஸில் கூறப்பட்டுள்ள விஷயமேயாகும். அதுவே உண்மையுமாகும். கால மாறுபாட்டின் காரணமாக ஹிரு தயங்களில் அதிக அழுக்குபடிந்துவிட்டபடியால், அதைத் துலக்கும் அவசியம் ஏற்பட்டு விட்டது.

''பாரா தஸ்பீஹ்'', ''ஜிக்ரே ஜஹ்ரி'', ''பாஸ் அன் பாஸ்'' ''முராகிபா'' போன்ற தஸவ்வுப் சம்பந்தப்பட்ட விஷயங்கள் எந்த ஹதீஸிலும் கூறப்படவில்லையே! என்று சிலர் கேட்கிறார்கள், அவர்கள் இவ்வாறு கேட்பதே தவருகும். நாயகம் (ஸல்-அம்) அவர்களின் காலத்தில் ஜிஹாத் செய்வதற்கு வாள், ஈட்டி, அம்பு உபயோகித்து வந்ததாகக் கூறப்படுகிறது. துப்பாக்கி, பீரங்கி, ஆகாய விமானம் ஆகியவைகளைப் பற்றிக் கூறப்படவில்லை. இன்று முஸ்லிம்களுக்கு ஷரீஅத் பூர்வமான ஜிஹாத் செய்ய நேர்ந்தால், நாயகம் (ஸல்-அம்) வாளாலும், அம்பாலும், ஈட்டியாலும் தான் யுத்தம் புரிந்தார்கள்; ஆகவே வாளால் தான் ஜிஹாத் செய்ய வேண்டும் என்று கூறுவீர்களா? நீங்கள், ஒருக்காலும் இத்தகைய ஆயுதங்களால் இக்காலத்தில் யுத்தம் செய்ய முடியாது. இன்றைய தினம் நீங்கள் வாளால் மட்டும் யுத்தம் செய்வீர்களேயானால், விரோதிகள் உங்களைத் தூரத்திலிருந்தே அழித்து விடுவார்கள். விரோதிகள், பீரங்கி, குண்டு போன்றவைகளால் யுத்தம்

புரிந்தால், நாமும் அத்தகைய ஆயுதங்களைத்தான் உப யோகப்படுத்த வேண்டும். அல்லாஹு த்த ஆலாவும் அப் படித்தான் எங்களுக்கு உத்தர விட்டிருக்கிறுன்.

அவர்களை எதிர்ப்பதற்காக (ஆயுத) பலத்தையும், லாயத்தில் (திறமையான) குதிரைகளையும், உங்களுக்குச் சாத்தியமான அளவு நீங்கள்( எந்நேர மும்) சித்தப்படுத்தி வையுங்கள். இதனுல், அல்லாஹ் வுடைய விரோதியையும், உங்களுடைய விரோதியை யும் நீங்கள் பயப்படச் செய்யலாம். இவர்களன்றி (விரோதிகளில்) வேறு சிலர் இருக்கின்றனர். அவர் களை நீங்கள் அறிய மாட்டீர்கள்: அல்லாஹ்தான் அறிவான். (இதனுல், அவர்களையும் நீங்கள் திடுக்கிடச் செய்யலாம். இதற்காக) அல்லாஹ் உடையபாதையில் நீங்கள் எதைச் செலவு செய்த போதிலும் (அதன் கூலியை) உங்களுக்குப் பூரணமாகவே அளிக்கப்படும்; (அதில்) ஒரு சிறிதும் உங்களுக்குக் குறைக்கப்பட மாட்டாது.

10—ஆம் பாகம், 8—ஆம் அத்தியாயம், 60—ஆம் ஆயத்து

"உங்களால் எந்த அளவிற்கு முடியுமோ, அந்த அளவில் எதிரிகளோடு போராட ஏற்பாடு செய்யுங்கள்" என்று அல்லாஹுத்தஆலா கூறியுள்ளான். ஜிஹாதின் நோக்கமானது அல்லாஹ்வின் கலிமாவை ஓங்கச் செய்வ தாகும். எந்த வஸ்துவைக் கொண்டாவதும் சரி, எது தேவைப்படுகிறதோ, அதை உபயோகப்படுத்துங்கள். எதிரியைத் தோற்கடிக்கும் சாதனங்களைச் சேகரியுங்கள். நாயகம் (ஸல்-அம்) இருந்த காலத்தில் சிறிதளவு முயற்சி (ரியாஜத்) செய்வதனுல் நோக்கம் பூர்த்தியாகிவிடும். அதிகமான கஷ்டங்கள் படவேண்டிய அவசியமில்லாம லிருந்தது. ஆனுல், கால மாறுபாடு அதிகமாக, ஆக,

ரியாஜத்துகளும் அதிகம் தேவைப்பட்டன. ஆகவேதான், "சில்லா", "பாரா தஸ்பீஹ்", "ஜிக்ரே ஜஹ்ரி", "பாஸ் அன்பாஸ்" "முராகிபா" முதலியவை ஆத்மசுத்திக்காக வேண்டி ஏற்படுத்தப்பட்டன.

நாயகம் (ஸல்-அம்) அவர்களின் காலத்திலே குர் ஆனேஷரீபில் ஜபர், ஜேர் (கீழ் மேல் கோடுகள்) வைக்காமல் இருந்தது. ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் தம் கிலாபத் காலத்திலே குர்ஆன் ஷரீபை புத்தக ரூபத்தில் ஒன்று சேர்த்தார்கள். ஹஜ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அதைச் சரியாக முன்பின் ஒழுங்குபடுத்தினார்கள். ஆனால், அப்பொழுதும் ஜபர், ஜேர் வைக்கப்படவில்லை. ஸஹாபாக்களின் பாஷை அறபியாக இருந்தது. அவர்கள் "ஜபர், ஜேர்" இன்றியே அதை ஓதி வந்தார்கள். உர்தூ பாஷைக்காரர்கள், உர்தூவைச் சரளமாகப் படிப்பது போல, வங்காளி, பர்மாக்காரர், இந்தோனேஷியாக்காரரிடத்தில் உர்தூவைச் சரியாகப் படிக்கச் சொன்னால், அவர்களால் சரளமாகப் படிக்க முடியாது. நாம், ஜபர், ஜேர் இல்லாமல் திருத்தமாகப் படிப்பதுபோல் ஹஜ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களால் ஒன்று சேர்க்கப்பட்ட திருகுர்ஆனே ஷரீபில் ஜபர், ஜேர், பேஷ் இல்லாமலிருந்தும், ஸஹாபாக்கள் அதைத் திருத்தமாக ஓதி வந்தார்கள்.

ஆனால், சில காலத்திற்குப் பிறகே ஜபர், ஜேரின் தேவை ஏற்பட்டது. அறபி அல்லாதார்களோடு பழகி வந்த காரணத்தால், ஜனங்கள், ஜபர், ஜேர் தேவையுள்ளவர்களாக ஆகிவிட்டார்கள். ஆகவே, நாயகம் (ஸல்-அம்) அவர்களின் காலத்தில் இல்லாத ஜபர், ஜேர்களை இப்பொழுதும் குர்ஆன் ஷரீபில் வைக்கக் கூடாது என்று கூறுவது பொருளற்றதாகும். அக் காலத்திலுள்ளவர்கள் ஜபர், ஜேர் இல்லாமல்தான் ஓதி வந்தார்கள். ஆனால், இன்று மக்கா, மதீனா வாசிகளுக்கும் ஜபர், ஜேர் தேவைப்

படுகிறது. அவைகளின்றி குர்ஆன் ஷரீப் ஓத முடியாது. எவ்விதமாக நமக்கு ஸர்பு, நஹ்வு (இலக்கணம்) தேவையாக இருக்கிறதோ, அறபியர்களுக்கும் அது தேவையாக இருக்கிறது. கால மாறுபாட்டினுல் நிலைமைகளும் மாறுபடுகின்றன. ஆனுல், எந்த நிலைமைகள் குறிக்கோளை மாற்றக்கூடியதாக இல்லையோ, அவைகளை ஸுன்னத் என்றுதான் கூறப்படும். உதாரணமாக, ஒருவர் ரொட்டி செய்பவரை நியமித்தார் என்ருல், அதற்குத் தேவையான அடுப்பு, விறகு முதலியவைகளைச் சேகரிப்பதும் அவசியம் என்றுதானே அர்த்தம்? விறகு கிடைக்காவிட்டால் கரி, கரி இல்லாவிட்டால் வராட்டி உபயோகப்படுத்தப்படும். ஆக, ரொட்டி செய்வதற்கு உபகரணங்கள் என்னென்ன தேவைப்படுமோ, அதை அவசியம் நாடவேண்டியே இருக்கிறது.

சுருக்கமாகச் சொன்னுல், நாயகம் (ஸல்-அம்) அவர்களின் காலத்தில், இஹ்ஸான் அடைய ரியாஜத் செய்யும் தேவை இல்லாமல் இருந்தது. ஆனுல், இன்று எங்களுடைய முர்ஷித்மார்கள் இவ்விதமாக ஜிக்ரு செய்யுங்கள் என்று காண்பித்துள்ளார்கள். இதை யாராகிலும் பித்அத் என்று கூறினுல், அது முற்றிலும் தவருனதாகும்.

## ஜிக்ரின் கண்டிப்பு

அல்லாஹுத ஆலா, குர்ஆன் ஷரீபில், ஜிக்ரு சம்பந்தமாகப் பல இடங்களில் வற்புறுத்தியுள்ளான்.

> இத்தகையோர், (தங்கள்) நிலையிலும், இருப்பிலும், படுக்கையிலும், அல்லாஹ்வையே நினைத்து, வானங்களையும், பூமியையும் அவன் சிருஷ்டித்திருப்பதைச் சிந்தித்து, "எங்கள் இறைவனே! நீ இவற்றை வீணுக்காகச் சிருஷ்டித்து விடவில்லை. நீ மிகத்

தூயவன்; (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களை நீ இரட்சிப்பாயாக!"

(4-ஆம் பாகம் 3-ஆம் அத்தியாயம் 191-ஆம் ஆயத்து)

மேற்கண்ட ஆயத்தில், நின்றவாறே, உட்கார்ந்த வாறேதான் ஜிக்ர் செய்யவேண்டும் என்ற எந்த நிபந்தனையும் கிடையாது. இதைப் போலவே, அல்லாஹ், ஸுப்ஹானல்லாஹ் லாஇலாஹா இல்லல்லாஹ் என்றவைகளும் உரக்கச் சப்தத்துடன் ஜபிப்பதும், அல்லது மெதுவாக ஓதுவதும், இரு வகைகளும் அல்லாஹ்வின் உத்தரவிற்குட்பட்டவைகளே.

வேறோரிடத்தில் குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறது.

"விஸ்வாசிகளே! அல்லாஹ்வை ஸ்தோத்திரம் செய்யுங்கள்; (அதுவும்) அதிகமாக ஸ்தோத்திரம் செய்யுங்கள்."

(22-ஆம் பாகம் 33-ஆம் அத்தியாயம் 41-ஆம் ஆயத்து)

மற்றோரிடத்தில் கூறப்பட்டிருக்கிறது:—

"நீங்கள், என்னை தியானித்துக் கொண்டே இருங்கள்; நானும் உங்களை நினைத்து (அருள்புரிந்து) வருவேன். நீங்கள் நன்றிகெட்டவர்களாகி விடாமல், எனக்கு நன்றி செலுத்தி வாருங்கள்."

(2-ம் பாகம் 2-ம் அத்தியாயம் 152-வது ஆயத்து)

இந்த ஆயத்துகளில் பொதுப்படையாக ஜிக்ரைப் பற்றித்தான் கூறப்பட்டிருக்கிறதே தவிர, அதை எப்படிச் செய்வது என்ற நிபந்தனை கிடையாது. ஆகவே, ஸிர்ரீ ஜிக்ரு (மவுன தியானம்) மூச்சுடனும், ஜிக்ரு கபீ (இரகசிய தியானம்) ரூஹ் உடனும் செய்யுங்கள் என்று நமது அனுபவமுள்ள பெரியோர்கள் கூறியுள்ளார்கள். இவ்வித ஜிக்ருகள் செய்வது பித்அத் கிடையாது. உதாரணமாக

எதிரியைப் பலஹீனப் படுத்துவதற்கென "ஜிஹாத்" செய்ய உத்தரவிடப்பட்டிருந்தது. அந்த ஜிஹாத், வாளால் செய்தாலும் சரி, பீரங்கிகளால் செய்தாலும் சரி; எவ்விதத்திலும் எதிரியைத் தோற்கடிக்க வேண்டும்.

குர்ஆன் ஷரீப் ஓத உத்தரவிடப்பட்டிருக்கிறது என்றால், அதில் ஜபர், ஜேர் வைப்பதும், நல்ல முறையில் அச்சடிப்பதும் எல்லாம் அதைச் சார்ந்ததேயாகும். அதைப் போலவே, ஹஜ்ஜு செய்ய உத்திரவிடப்பட்டிருக்கிறது என்றால், முற்காலத்தில் ஒட்டகைகள்மீது பிரயாணம் செய்தார்கள்; இன்று ஆகாய விமானம், பஸ், லாரி போன்ற இதர வாகனங்கள் மூலமும் பிரயாணம் செய்ய நேருகிறது. இவைகளை யெல்லாம் யாராகிலும் ஒரு முட்டாள், "பித்அத்" என்று கூறி, "நான் இந்தியாவிலிருந்தே ஒட்டகத்தில் மட்டும் பிரயாணம் செய்வேன்" என்றால், நீங்களும் செய்ய முடியுமா? இதைப்போலவே ஜித்தாவிற்குச் சென்றபின், லாரிகளில் செல்லவேண்டியதாக இருக்கிறது என்றால், இதன் நோக்கம் பைத்துல்லாஹ்விற்குப் போகவேண்டும் என்பதற்காகத்தான். இந்த நோக்கம் எந்தெந்த விதத்தில் பூர்த்தியாகுமோ, அந்தந்த விதத்தைக் கையாண்டு செய்தாக வேண்டும். காலத்தின் மாறுபாட்டால், சாதனங்களில் வித்தியாசம் ஏற்பட்டதே தவிர, நோக்கத்தில் வித்தியாசம் ஏற்படவில்லை.

ஆகவே, பெரியோர்களே! தஸவ்வுப்-ஸுலூக்கில் உள்ள விஷயங்கள் பித்அத் ஆகும் என்று சொல்வது தவறு. அவைகள் அல்லாஹ்வினால் உத்தரவிடப்பட்டவைகள். அவைகளை நடைமுறையில் கொண்டு வருவது அவசியமாகும், தஸவ்வுபின் குறிக்கோள், "இஹ்ஸான்" ஆகும். இந்த இஹ்ஸானை அடைவதற்குள்ள ஷரீஅத்திற்கு முரண்படாத எல்லாச் சாதனங்களையும் மேற்கொள்வது, அவசியு

மாகும். ஆனால் ஆண்டவனை அடைவதற்கு மேளம், தாளம், ஆடல்—பாடல்கள் தேவையாக இருக்கிறது என்று யாரேனும் சொன்னால், இது ஷரீஅத்திற்கு முரணானதே. நாயகம் (ஸல்அம்) அவர்களும், ஸஹாபாக்களும் இவைகளைத் தடுத்திருக்கிறார்கள். தடுக்கப்பட்டவைகள் 'ஸுன்னத்' ஆகாது.

## பைஅத்தின் பலன்கள்

பைஅத்தின் அவசியம் தற்சமயம் தேவைக்குரியதாக இல்லை, என்று சிலருக்குச் சந்தேகம் இருக்கிறது. இது தவறான சந்தேகம். நாயகம் (ஸல் அம்) அவர்கள், பைஅத் செய்திருக்கிறார்கள். குர் ஆன் ஷரீபிலும், ஹதீஸிலும் அதைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஆங்கிலேயரை எதிர்த்து ஜிஹாத் செய்த ஹஜ்ரத் ஸையத் ஷஹீத் ரஹமத்துல்லாஹி அலைஹி அவர்கள், தமது 'ஸிராத்துல் முஸ்தகீம்' என்னும் நூலில், பைஅத்துடைய சில நன்மைகளை எடுத்துக் காட்டுகிறார்கள். அதாவது, யாராகிலும் ஒருவர் அல்லாஹ்வின் நல்லடியாரின் கைமீது பைஅத் செய்து கொண்டால், அந் நல்லடியாரின் * காரணமாக, அல்லாஹ்வின் ரஹ்மத் அவரை இரு வகையில் பாதுகாக்கிறது, முதலாவது வகை: அவருடைய கற்பு பாதுகாக்கப் படுகிறது. அவருடைய ஷைக், உயர்ந்த ஆத்மீக அந்தஸ்துள்ளவராக இருக்கும் பட்சத்தில், 'உம்முடைய இன்ன முரீது, இன்ன கெடுதியில் சிக்கி இருக்கின்றார்; அவரைக் காப்பாற்றவும்' என்று அவருக்கு எச்சரிக்கை செய்யப்படுகிறது. அப்பொழுது ஷைக், அவரைத் தகுந்த முறையோடு அக்கெடுதியை விட்டுக் காப்பாற்றுவார். சில சமயங்களில் அல்லாஹ்தஆலாவே அந்த முரீதை கெடுதியை விட்டுக் காப்பாற்றி விடுகிறான். சில சமயங்களில், வானவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது. சில சமயங்களில், வேறு விதங்களி

லும் பாதுகாக்கப்படுகிறது. உதாரணமாக, ஷைக் உடைய உருவத்தில் வானவர்கள் அவரைக் காப்பாற்றுகின்றனர்.

ஹஜ்ரத் யூஸுப் (அலை) அவர்களை, ஹஜ்ரத் ஜுலைகா (அலை) ஏழு அறைகளுக்குள் பூட்டிவைத்து, அவரைத் தீய நோக்கத்தில் ஈடுபட வற்புறுத்தியதற்கு, "நான், என் எஜமானனுக்கு மாறுபட்டு நடக்க மாட்டேன்; அவனுடைய உபகாரங்கள் என்மீது அதிகமாக இருக்கின்றன. அவனுடைய மனைவியின்மீது நான், கை வைப்பதா? நான் அநியாயக்காரனாக ஆகமாட்டேன்! அல்லாஹ் என்னைக் காப்பாற்றுவானாக" என்று கூறியபோது, ஹஜ்ரத் ஜுலைகா, ஹஜ்ரத் யூஸுப் (அலை) அவர்கள் தீயசெயலில் ஈடுபடவும், நெருங்கவும் கூடிய அளவிற்கு, அதிகமாக வற்புறுத்தவும். கெஞ்சவும், பின் தொடரவும் ஆரம்பித்து விட்டார். இதனைப்பற்றித் திருக் குர்ஆனில் கூறப்படுவதாவது:-

"அவள், அவரைக் காதலிப்பதில் உறுதி கொண்டு விட்டாள்; அவர், தன் இறைவனுடைய எச்சரிக்கையைக் கண்டிராவிடில் அவர், அவளைக் காதலித்தே இருப்பார். கெடுதல்களிலிருந்தும், மானக் கேடான செயல்களிலிருந்தும் அவரைத் திருப்பி விடுவதற்காக, நாம், அவருக்கு இவ்வாறு எச்சரிக்கை செய்தோம்.

(12—ஆம் பாகம் — 12—ஆம் அத்தியாயம் — 24ஆம் ஆயத்து)

அப்பொழுது அல்லாஹுத்த ஆலா, அவர்களை அத் தீமையைவிட்டுப் பாதுகாக்க, ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்களை நியமித்துவிட்டான். அவர்கள், ஹஜ்ரத் யஅகூப் (அலை) அவர்களின் ரூபத்தில் வந்து முன்னால் நின்று கொண்டு, வாயில் விரலை வைத்தவாறு, "ஜாக்கிரதை! இதில் ஈடுபடாதே!" என்று ஜாடை காட்டிக் கொண்டிருந் தார்கள். இச்சம்பவத்தைப் பற்றி ஹஜ்ரத் யஅகூப்(அலை)

அவர்களுக்கு ஒன்றும் .தெரியாது. அல்லாஹுதஆலா, ஹஜ்ரத் யூசுப் (அலை) அவர்களைக் காப்பாற்றிக் கொண்டான்.

'பரிபூரணமானவரின் கையில் பைஅத் செய்து கொண்டவர், ஏதேனும் வழிகேட்டில் ஈடுபடும்போது, அல்லாஹ்வின் புறத்திலிருந்து ஆத்மிக முறையில், அவரைப் பாதுகாக்கப்படுகின்றது. அநேகமாக இப்படி ஏற்படுவதும் உண்டு' என்றும் ஹஜ்ரத் ஸையத் ஷஹீத் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்,

பைஅத்தால் அநேக நன்மைகள் இருக்கின்றன. குர்ஆன் ஷரீபில்:

"விஸ்வாசிகளே! நீங்கள், அல்லாஹ்வுக்குப் பயந்து, உண்மையாளர்களுடன் இருங்கள்"

(11—ஆம் பாகம்—5—ஆம் அத்தியாயம்—119—ஆம் ஆயத்து)

உதாரணமாக, யாரேனும் ஒருவர் ஒரு கட்சியில் சேர்ந்துவிட்டால், அக்கட்சியின் எல்லாப் பெரியோர்களுடனும் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டு விடுகிறது. அப்பெரியோர்கள் அக்கட்சியைச் சேர்ந்தவரைத் தம் கவனத்தில் வைக்கிறார்கள் என்றால், மறுமைக்காகப் பாடுபடும் அல்லாஹ்வின் உண்மையான அடியார்களில் அந்தக் கவனிப்பு இருக்காதா? அவர்களோடு உள்ள உறவும், சம்பந்தமும் மிக உயர்ந்ததாகும். அல்லாஹ்வின் ஒரு நல்லடியாரின் கைமீது நீங்கள் பைஅத் செய்துகொண்டால், ஜமாத்தின் எல்லாப் பெரியோர்களுடனும் அவர்கள் மறைந்திருந்தாலும் சரி, உலகிலிருந்தாலும் சரி; சம்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது, மேலும், அவர்கள் துவா செய்கிறார்கள். தங்களின் கவனத்தால் உதவி செய்கிறார்கள்.

## ஷரீ அத்தும்—தரீகத்தும்

சகோதரர்களே! பைஅத்தும் பித்அத் அல்ல; தரீகத்தும் பித்அத் அல்ல. மேலும், தரீகத் ஷரீ அத்தை விட்டுப் பிரிந்ததும் அல்ல. தரீகத் என்பது ஷரீஅத்திற்குப் பணியாற்றக் கூடிய—அதைப் பூரணமாக்கி வைக்கக் கூடிய தாகும், ஹஜ்ரத் ஷைக் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்), ஹஜ்ரத் காஜா பஹாவுத்தீன் (ரஹ்), ஹஜ்ரத் காஜா முயினுத்தீன் சிஷ்தி (ரஹ்) ஹஜ்ரத் ஷேக் ஷிஹாபுத்தீன் சுஹர்வர்தி (ரஹ்) ஆகிய இப்பெரியார்கள் அல்லாஹ்வின் பொருத்தத்தையும், சந்தோஷத்தையும் அடைவதற்காக சிலமுறைகளைத் துவக்கி வைத்தார்கள். இந்த முறைகளில் கொஞ்சங்கூட ஷரீ அத்துக்கு முரணானவைகள் கிடையாது. மறுமையை அடைவதும், அல்லாஹ்வின் நெருங்குதலுமே இம்முறைகளின் நோக்கமாகும்.

## போலி பீர்கள்!

ஒவ்வொரு கூட்டத்திலும் நல்லவர், கெட்டவர் இருப்பதைப்போல், இக்கூட்டத்திலும் சிலர் சேர்ந்திருக்கிறார்கள் இவர்களின் காரணமாகப் பல தீமைகள் ஏற்படுகின்றன. மார்க்கத்தை மாய வலையாக்கி, அதன்மூலம் உலகத்தை அடையக்கூடியவர்கள் எல்லாக் காலங்களிலும், எல்லாக் கூட்டங்களிலும் இருந்திருக்கிறார்கள். ஒரு சிலரின் தீமைகளால், மார்க்கம் முழுவதும் கெட்டுப்போவது கிடையாது. எனவே, பைஅத் ஆகும்போது, நன்றாகப் பரிசீலித்து, யோசித்து ஷைகை தேர்ந்தெடுக்க வேண்டும்.

> "மனிதனுடைய வேடத்தில் பல ஷைத்தான்கள் இருக்கின்றன. ஆகவே, எல்லோரிடத்திலும் கையைக் கொடுத்துவிடக்கூடாது; பைஅத் செய்துவிடக் கூடாது."

என்று மௌலானா ரூமி அவர்கள், பாரசீக மொழியில் கவி பாடியுள்ளார்கள்.

ஷைத்தான், மனிதனுடைய வேடத்திலும் சில சமயங்களில் வருவதுண்டு. நீங்கள் சிந்திக்க வேண்டும். உங்கள் வழக்கு கோர்ட்டில் இருக்கிறது என்றால், கண்டவரை வக்கீலாக வைப்பது கிடையாது. நீங்கள் நோயுற்று விட்டால், கண்ட டாக்டரிடமும், கண்ட வைத்தியரிடமும் சிகிச்சை செய்து கொள்ளப்போவதில்லை. வக்கீல்களில் யார் சிறந்தவர்கள்? டாக்டர்களில் யார் திறமைசாலிகள்? என்று சிந்திக்கிறீர்கள். உலக விஷயத்தில் இவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கிறோம் என்றால், அல்லாஹ்வின் பொருத்தத்தையும், மறுமையையும் நாடக்கூடிய விஷயத்தில், கவனக்குறைவாக இருந்து, கண்டவரின் கையில் எப்படி பைஅத் செய்துகொள்வது? அவர் நல்லவராக இருந்தாலும் சரி, கெட்டவராக இருந்தாலும் சரி, தொழுகையாளியாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, பெண்களுக்குத் திரையில்லாமல் கையோடு கை சேர்த்து பைஅத் கொடுத்தாலும் சரி, என்றெல்லாம் கவனியாது, எல்லோரிடத்திலும் பைஅத் எப்படி செய்து கொள்ளமுடியும்?

## பெண்களிடத்தில் பைஅத் வாங்கும் முறை

நாயகம் (ஸல்-அம்) அவர்கள், ஆண்களிடத்தில் கையின்மீது கைவைத்து பைஅத் வாங்குவது வழக்கமாக இருந்தது. கூட்டம் பெரிதாக இருக்கும் பட்சத்தில், துணியின் ஒரு முனையைத் தாம் பிடித்து, மறுமுனையை எல்லோரையும் பிடிக்கச்செய்து, பைஅத் வாங்குவார்கள். ஆனால், நாயகம் (ஸல்-அம்) பெண்களிடத்தில் கையின் மீது கையை வைத்து, பைஅத் வாங்கியது கிடையாது.

"அல்லாஹ்வின் மீது ஆணையாக, நாயகம் (ஸல் அம்) அவர்களின் கை, அந்நியப் பெண்களின் கையை ஒருபோதும் தொட்டது கிடையாது"

என்று ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், ரிவாயத் செய்வதாக, புகாரி ஷரீபில் பல இடங்களில் வந்திருக்கிறது. பெண்களிடத்தில் பைஅத் செய்யும் போது, திரையிட்டு வெளியிலிருந்து பைஅத் செய்வார்கள். அல்லது வாயால் அல்லது துணியைப் பிடிக்கச் செய்வதால் பைஅத் செய்வார்கள்.

நாயகம் (ஸல்-அம்) அவர்களைவிட அதிகமாக உள்ளச்சப்பாடு (தக்வா), பயபக்தியுள்ளவர்கள் யாரும் இருக்க முடியாது. ஆனால், நாயகம் (ஸல்-அம்) அவர்கள் எந்த அந்நியப் பெண்ணையும் கண் எதிரே வைப்பதும் கிடையாது; கையோடு கை தொட்டு பைஅத் செய்ததும் கிடையாது. ஆனால், தற்காலத்தில் சில வழிகெட்ட ஷைத்தான்கள், பெண்களை முன்னால் அழைக்கிறார்கள்; "திரையை எடுத்து விடுங்கள் உங்களுடைய முகங்களை இப்பொழுது பார்க்காவிட்டால், மஹஷர் மைதானத்தில் உங்களை எப்படிக் கண்டுபிடிப்பது? நீங்கள் என்னுடைய மகள்களைப் போல்-பேத்திகளைப்போல்" என்று கூறுகிறார்கள். இவைகள் எல்லாம் ஷைத்தானின் திருவிளையாடல்கள்.

"நாயகம் (ஸல்-அம்) அவர்கள், உலக மக்களின் ஒப்பற்றத் தலைவர். எல்லாப் பெண்களும் அவருடைய மக்களைப் போலவே. நாயகம் (ஸல்-அம்) அவர்களின் மனைவிமார்கள், எல்லா மூஃமீனானவர்களுக்கும் தாய்மார்களாவார்கள்," என்று கூறப்பட்டிருக்கிறது. அஃதாவது: நாயகம் (ஸல்-அம்) அவர்களின் மனைவிமார்கள், எங்கள் எல்லோருக்கும் தாய்களைப்போல் என்றால், நாம் அவர்

களுக்குப் பிள்ளைகளின் ஸ்தானத்திலிருக்கிறோம்: அப்படி யிருந்துங்கூட, நாயகம் (ஸல்-அம்) அவர்கள் முன்னால், அந்நியப் பெண்கள் திரையின்றி வருவது கிடையாது. கையோடு கை சேர்ப்பதில்லை. ஆனால், தற்காலத்தில் பர்தாவை அகற்றக் கூடியவர்கள், பெண்களைக்கொண்டு தமது உடலைப் பிடித்துவிடச் செய்து கொள்கிறவர்கள், தனிமையில் சந்திப்பவர்கள், ஒன்றுகூடக் கூடியவர் களாகிய—தவறான வேலைகளில் ஈடுபடுபவர்களாகிய போலி பீர்கள் உண்டாகிவிட்டனர்.

இப்படிச் செய்வதெல்லாம் தவறானவை. மார்க்கத்தில் கூடாதவை. ஹராமானவை. இப்படி எல்லாம், செய்யக் கூடியவர், மஹான் அல்ல. பீர் அல்ல. வழி தவறிய வைஷத் தான் ஆவர். இப்படிப்பட்டவர்களை விட்டுத் தப்பித் திருக்க வேண்டும். அவர்கள் கையில் கை கொடுத்து பை அத் செய்து கொள்ளக்கூடாது. அல்லாஹ்வின் உத்தர விற்கு மாறாக, மற்ற யாரையும் பின்பற்றக் கூடாது என்று நாயகம் (ஸல்-அம்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஒரு தடவை நாயகம் (ஸல்-அம்) அவர்கள், ஒருவரை ஒரு யுத்தத்திற்குத் தலைவராக ஆக்கினார்கள். மற்றவர் களைத் தலைவரின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு கூறினார்கள். எல்லோரும் வழியில் சென்று கொண்டிருந் தார்கள். ஓர் இடத்தை அடைந்ததும், ஒருவர் அந்தத் தலைவரைப் பரிகசித்தார். தலைவருக்குக் கோபம் வந்து விட்டது. உடனே அவர், விறகுகளைச் சேகரித்து அதில் நெருப்பு வைக்கும்படி எல்லோருக்கும் உத்தரவிட்டார், பிறகு அந்த நெருப்பில் குதிக்கும்படிக் கூறினார். "நாயகம் (ஸல்-அம்) அவர்கள், தலைவரின் உத்தரவிற்குக்கட்டுப்பட்டு நடக்கும் படிக் கூறியுள்ளார்கள்; ஆகவே, நீங்கள், நான் சொல்லும்படி கேளுங்கள்" என்றார். இதைக்கேட்ட சிலர், "ஆம், ஆம், நாயகம் (ஸல்-அம்) தலைவருக்குக் கீழ்ப்படியு

மாறு கூறியதுதான்" என்று நெருப்பில் குதிக்கச் தயாரா யினர். இன்னும் சிலர் கூறினுர்கள், "நாம் நெருப்பை விட்டுத் தப்பித்துக்கொள்ளத்தான் நாயகம் (ஸல்-அம்) அவர்களைப் பின்பற்றி இருக்கிறோம். நீங்கள் எங்களை எப்படி நெருப்பில் போட முடியும்?" என்று நெருப்பில் குதிக்கத் தயங்கினதோடு, மற்றவர்களையும் தடுத்தார்கள். இவ் விஷயத்தில் தர்க்கம் நடந்து கொண்டிருந்தது. அதற்குள்ளாக நெருப்பும் அணைந்து விட்டது. தலைவரின் கோபமும் தணிந்துவிட்டது. இத்துடன் பிரச்சினையும் தீர்ந்துவிட்டது. இவர்கள் எல்லோரும், திரும்பி நாயகம் (ஸல்-அம்) அவர்களின் சந்நிதானத்தில் ஆஜரானபோது நடந்த சம்பவத்தைக் கூறினுர்கள். நாயகம் (ஸல்-அம்) அவர்கள், மிகவும் கோபித்தார்கள். தலைவரையும், அந்த நெருப்பில் குதிக்க முற்பட்டவர்களையும் கண்டித்தார்கள்.

ஆகவே, ஷரீஅத்துக்கு மாறுபட்ட விஷயங்களில் யாரையும் பின்பற்றக் கூடாது என்று இச்சம்பவத்தின் மூலம் தெரிய வருகிறது. ஒரு முர்ஷித், சிலையை வணங்கும் படி, ஸஜ்தா செய்யும்படிக் கூறினுல், ஒரு பொழுதும் அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது. முர்ஷிதும் இவ்வாறு கூறவும் கூடாது. எந்த முர்ஷிதாகிலும் இவ்வாறு கூறினுல் அவன் முர்ஷித் அல்ல; ஷைத்தான் ஆவான். முர்ஷித், ஷரீ அத்திற்கு மாறு செய்தால், அவரை அறவே பின்பற்றக் கூடாது. பைஅத் என்பது ஷரீஅத் சம்பந்தப் பட்ட ஒரு விஷயமாகும். ஸுலூக் என்பது நாயகம் (ஸல்-அம்) அவர் களைப் பின்பற்றுவதும், அல்லாஹ்வின் பொருத்தத்தை அடைவதுமேயாகும். நாயகம் (ஸல்-அம்) அவர்களைப் பின் பற்றுவதில்தான் சிறப்பு இருக்கிறது. அவர்களை நேசிப் பதிலும், அவர்கள் இட்ட கட்டளைகளுக்குப் பணிந்து நடப்பதிலும்தான் ஈடேற்றம் இருக்கிறது. இதில்தான் பின்பற்றுதலின் சிறப்பும், வெற்றியும் இருக்கிறது.

## இஷ்கே நபியின் பொருள்

"நான், எதுவரையில் உங்களின் தாய், தகப்பன், சந்ததிகள், உலகம் பூராவிலுள்ளவர்களைக் காட்டிலும் உங்களுக்கு அதிகப் பிரியமுள்ளவனாக ஆகமாட்டேனோ, அதுவரையிலும், நீங்கள் பரிபூரண ஈமானுள்ளவராக ஆகமாட்டீர்கள்" என நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நாயகம் (ஸல்-அம்) அவர்களிடம் அதிக அளவு அன்பு வைக்கவேண்டும். தங்கள் குடும்பத்தார். சகல உலகத்தாரைக் காட்டிலும் அதிகமான அன்பு வைப்பது அவசியமாகும். ஆனால், நாம் அறியாமையால், "நாயகம் (ஸல்-அம்) அவர்கள்மீது அன்பு வைத்திருக்கிறோம்" எனக் கூக்குரலிடுகிறோம். ஆனால், அவர்கள் காட்டிய வழி முறைகளை விட்டுவிடுகிறோம். அவர்களுடைய ரூபத்தையும் கோலத்தையும் வெறுக்கிறோம். அவர்களுடைய விரோதிகளின் ரூபத்தையும், கோலத்தையும் ஆதரிக்கிறோம். எதிரிகளுடைய நாகரீகத்தையும், கலாசாரத்தையும் நம்முடையதாக்கிக் கொள்கிறோம். தாடிகளை வெட்டுகிறோம். சிரைக்கிறோம். கிராப்பு வைக்கிறோம். இம்மாதிரியான வேலைகளில் ஈடுபடுவது, மிகப் பெரிய தவறாகும். இதனால் அல்லாஹ்வின் கிருபை விலகி, அவனுடைய கோபம் அதிகரிக்கிறது.

சகோதரர்களே! "அல்லாஹ்வின் பொருத்தத்தையும் சந்தோஷத்தையும் விரும்புகிறீர்களானால் நாயகம் (ஸல்-அம்) அவர்களைப் பின்பற்றுங்கள். அவர்களை நேசியுங்கள்" என்று அல்லாஹ்தஆலா கூறியுள்ளான். தாடிகளை வளர்த்து, மீசைகளைக் குறைக்கும்படியாக நாயகம் (ஸல்-அம்) அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். முஷ்ரிகீன்களின் கோலம், குணப்பாடுகளுக்கு மாற்றமாக தாடிகளை வளரச் செய்யுங்கள். மீசைகளை வெட்டி விடுங்கள்.

இன்று நாம், அல்லாஹ்வின் விரோதிகளின் கோலத்தை மேற்கொள்கிறோம். அல்லாஹ்வின் கோபம் நம்மீது இறங்காமலிருக்க, அக் கோலங்களை விட்டு நாம் விலக வேண்டும். நாயகம் (ஸல்-அம்) அவர்களின் கோலத்தையும் குணங்களையும் மேற்கொள்ளுங்கள். சதா அல்லாஹ்வின் தியானத்தில் இருக்க வேண்டும். அவனுடைய தியானத்திலிருந்து ஒருபொழுதும கவனக் குறைவாக இருக்கக் கூடாது.

## அருமையான வயதின் மதிப்பும், சிறந்த ஈடுபாடும்

சகோதரர்களே! நமக்குக் கிடைத்திருக்கும் அருமையான வயதைத் தனிப் பெருஞ் செல்வமாகக் கருதுங்கள், எப்பொழுதும் அல்லாஹ்வின் தியானம் செய்து கொண்டிருங்கள். முடிந்தவரை அவனை மறந்திருக்கக் கூடாது. இந்த நேரம் அறியதொரு செல்வமாகும். எனவே, ஹிருதயத்தைச் சுத்தப்படுத்த வேண்டும்.

''ஒவ்வொரு வஸ்துவையும் தேய்த்துச் சுத்தப்படுத்தக் கூடிய சில பொருள்கள் இருக்கின்றன. ஆனல், ஹிருதயத்தைச் சுத்தப்படுத்தக் கூடியது அல்லாஹ்வின் தியானமாகும்'' என்றும், ''அல்லாஹ்வின் தியானம் அவனுடைய வேதனையை விட்டு எந்த அளவிற்குக் காப்பாற்றுகிறதோ, அந்த அளவிற்கு வேறு எந்த வஸ்துவும் காப்பாற்றுவது கிடையாது'' என்றும் நபிகள் நாயகம் (ஸல்-அம்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்வின் கோபத்தை விட்டும், அவனுடைய வேதனையை விட்டும் தப்பித்துக்கொள்ள அல்லாஹ்வின் தியானம் (ஜிக்ரு) ஒரு நல்ல வழியாகும். ஒருதடவை நாயகம் (ஸல்-அம்) அவர்கள், ஒரு சபையில் உட்கார்ந்து கொண்டு, தியானத்தின் சிறப்புகளைக் கூறிக்கொண்டிருந்

தார்கள். மேலும், ''ஹிருதயத்தைப் பக்குவப்படுத்தவேண்டும்; அது அல்லாஹ்வின் தியானத்தால்தான் முடியும்'' என்றும் கூறினார்கள், அப்பொழுது, அச்சபையில் ஒருவர் ''நாயகமே! அல்லாஹ், அல்லாஹ் என்று தியானம் செய்வது, அல்லாஹ்வின் வழியில் ஜிஹாத் செய்வதைவிட சிறந்ததோ? அல்லாஹ்வின் வழியிலே தன்னுடைய சிரசைத் துண்டித்துக் கொள்பவன் சிறந்தவனா? அல்லது அல்லாஹ்வின் தியானம் செய்யக்கூடியவன் சிறந்தவனா? என்று வினவியதற்கு, ''அல்லாஹ்வின் பாதையில் ஒருவன் புறப்பட்டு, உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் ரத்தக் காடாகி, வெட்டப்பட்டு விட்டாலும், எந்த அளவிற்கு அல்லாஹ்வின் தியானம் செய்யக்கூடியவன் அவனுடைய பொருத்தத்தையும், சந்தோஷத்தையும் அடைகிறானோ, அந்த அளவிற்கு அடைய முடியாது!'' என்று நாயகம் (ஸல்-அம்) அவர்கள் பதிலளித்தார்கள். ஏனென்றால், ஜிஹாத் செய்யக்கூடியவரும், எதுவரையில் அல்லாஹ்வின் தியானம் செய்யமாட்டாரோ, அவர் அல்லாஹ்விற்கு உகந்தவராக ஆகமுடியாது. ஜிஹாத் செய்வதிலும், அல்லாஹ் உத்தரவிட்டிருப்பதாவது.

> ''விசுவாசிகளே! நீங்கள் (யுத்தத்தின்போது எதிரியின்) கூட்டத்தைச் சந்தித்தால் (கலக்கமுறாது) உறுதியாக (எதிர்த்து) நின்று, அல்லாஹ்வின் திரு நாமத்தை நீங்கள் அதிகமாக (உரக்க) சப்தமிட்டுக் கூறுங்கள். (அதனால்) நீங்கள் வெற்றியடைவீர்கள்.''
>
> (10-ஆம் பாகம் 8-ஆம் அத்தியாயம் 45-ஆம் ஆயத்)

ஆகவே, அல்லாஹ்வின் தியானம் ஜிஹாதின் வேராகும். ''என்னுடைய தியானத்திற்காக தொழுகையை நிலை நாட்டுங்கள்'' என்று ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. அல்லாஹ்வின் தியா

னமே முக்கிய குறிக்கோளாகும். அல்லாஹ்விடத்தில் அதற்குப் பெரிய மதிப்பும், சிறப்பும் இருக்கிறது. "தியானம் செய்யக் கூடியவருக்கும், செய்யாதவருக்கும் உதாரணமாவது: உயிருள்ளவருக்கும், மரித்தவர்களுக்குமுள்ளது போலாகும். தியானம் செய்பவன் ஜீவனுள்ளவனாகவும், தியானம் செய்யாதவன் ஜீவனற்றவனைப் போலவுமாகிறான்; நீங்கள் அவனை உயிருள்ளவனாக நினைத்தாலும் சரியே" என்று நாயகம் (ஸல்-அம்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்வின் தியானத்திற்குப் பெரிய மதிப்பு இருக்கிறது. நாயகம் (ஸல்-அம்) தியானத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். அல்லாஹ்வின் தியானத்தில் செல வழியும் ஒவ்வொரு விநாடியும், மிக விலை உயர்ந்ததாக இருக்கும். தியானம், நாவால் இருந்தாலும் சரி; ஹிருதயத்தால் இருந்தாலும் சரி; ஆத்மாவால் இருந்தாலும் சரி; மூச்சால் இருந்தாலும் சரியே! அல்லாஹ்வின் கிருபை இறங்குவதற்கு அவை காரணமாகின்றன. "எவனொருவன் தனிமையிலே மனத்திற்குள் என்னை நினைப்பானோ, அவனை நானும் என் மனத்தில் நினைக்கிறேன். எவனொருவன் என்னைச் சபையில் நினைக்கிறானோ, நான், அவனை அதைவிட நல்ல சபையில் நினைக்கிறேன்; என் அடியான் என்னை நினைக்கும்போது, நான் அவன் கூடவே இருக்கிறேன். அவனைக் கவனிக்கிறேன். எவன் என்னுடைய நெருங்குதலை நாடுகிறானோ, நான், அவன் சமீபத்தில் நெருங்குகிறேன். எவன், ஒரு ஜாண் அளவு என்னை நோக்கி வந்தால், நான், அவனளவில் ஒரு கை அளவு முன் செல்கிறேன். ஒரு கை அளவு என் பக்கம் வந்தால், நான், ஒரு கெஜமளவு அவன் பக்கம் விரைகிறேன்" என்று அல்லாஹ் தஆலா கூறுவதாக, நாயகம் (ஸல்-அம்) அவர்கள் கூறியுள்ளார்கள். தியானம் செய்யக்கூடியவர்கள் மீது அல்லாஹ்வின் கிருபையும் அதிகமாக ஏற்படுகிறது.

சகோதரர்களே!

எந்த அளவு வயது கிடைத்துள்ளதோ, அந்த அளவும் அது மதிக்கத் தக்கதேயாகும். இவ்வுலகத்தை விட்டுப் பிரிந்த பிறகு எவ்வளவு தியானம் செய்தாலும் பிரயோ ஜனம் தராது.

என்னுடைய அருமைச் சகோதரர்களே! இந்த ஓய்வு நேரத்தை மதியுங்கள். எந்நேரமும் அல்லாஹ்வின் தியானம் செய்யுங்கள். இரவும், பகலும், உட்காரும் போதும், நடக்கும் போதும், உலாவும் போதும், எந் நேரமும் அவனை மறக்காதீர்கள். தியானத்திற்குக் குறித்த நேரம் கிடையாது. தொழுகைக்கோ குறித்த நேரங்கள் இருக்கின்றன. சில நேரங்களில் தொழுவது தடுக்கப்பட்டிருக்கிறது. சூரியோதய நேரத்திலும், அஸ்த மிக்கும் நேரத்திலும், உச்ச நேரத்திலும் தடை செய்யப் பட்டிருக்கிறது. அதைப் போலவே, ஒலு இல்லாமலும் தொழுவது கூடாது. ஆனால், அல்லாஹ்வின் தியானத்திற்கு நேரம் குறிக்கப்படவில்லை. எந்த நேரத்திலும் தடுக்கப் படவில்லை. ஒலுவுடன் இருந்தாலும் சரி, ஒலு இல்லாமல் இருந்தாலும் சரி, எல்லா நிலைமையிலும் தியானம் செய் வது கூடும். குளிப்பது வாஜிபாக இருந்தாலும், தியானம் செய்வது தடுக்கப்படவில்லை. எழுந்திருக்கும் போதும், உட்காரும் போதும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தியானம் செய்யும்படி நாயகம் (ஸல்-அம்) அவர்கள் போதித்திருக் கிறார்கள். ஸஹாபாக்கள் வியாபாரம் செய்து கொண்டிருந் தார்கள்; விவசாயம் செய்துகொண்டிருந்தார்கள்; ஆனால், அவர்கள் எந்த நேரத்திலும் தியானத்தை விட்டு மறதி யாக இருக்கவில்லை.

திருகுர்ஆனில்:—

"அதில் பலர் இருக்கின்றார்கள், (அவர்கள் எத் தகையோர் என்றால்) அவர்களுடைய வர்த்தகக்

கொள்வினை— கொடுப்பினை முதலியவை, அவர்கள் அல்லாஹ்வினுடைய திருநாமத்தை ஸ்தோத்திரம் செய்வதிலிருந்தும், தொழுகையை உறுதியாக அனுஷ்டிப்பதிலிருந்தும், ஜகாத் கொடுப்பதிலிருந்தும் அவர்களைத் திருப்பி விடாது.''

(18-ஆம் பாகம்—24-ஆம் அத்தியாயம்—-37ஆம் ஆயத்)

என்று காண்கிறோம். அவர்கள் வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். கொடுக்கல், வாங்கலும் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், அவைகள் அல்லாஹ்வின் தியானத்தை விட்டு அவர்களைத் தடுக்கவில்லை. இவ்வாறே தான் நாமும் செய்யவேண்டும். எல்லா வேலைகளும் செய்யுங்கள்; ஆனால், அல்லாஹ்வின் தியானமும் இதே மாதிரி பழக்கம் ஏற்படும் வரை நடந்து கொண்டே இருக்கட்டும். பழக்கம் ஏற்பட்டுவிட்டால், தூங்கும்போதும் விழித்திருக்கும் போதும், வியாதியிலும், மூர்ச்சை அடைந்திருக்கும்போதுகூட தியானம் இருந்துகொண்டே இருக்கும். ''நாயகமே! எனக்கு அதிக பலன் தரக்கூடிய விஷயத்தைக் காண்பியுங்கள்'' என்று ஒருவர் கேட்டதற்கு, ''நீர், அல்லாஹ்வின் தியானத்தின் பழக்கத்தை மேற்கொள்ளும். அதனால், இறக்கும் தருணத்தில் அந்த தியானம் உமது நாவில் இருந்து கொண்டிருக்கும்'' என்று நாயகம் (ஸல்—அம்) அவர்கள் பதிலளித்தார்கள். ''எவருடைய கடைசியான வார்த்தை லாஇலாஹா இல்லல்லாஹ்'' வாக இருக்குமோ, அவன் கண்டிப்பாக சுவர்க்கத்தில் நுழைவான்'' என்று நாயகம் (ஸல்-அம்) அவர்கள் கூறியுள்ளார்கள். இதற்காக முயற்சி செய்யுங்கள்.

இங்கு பிரசன்னமாக இருக்கக்கூடிய நம் அனைவருக்கும் இறக்கும்போது ஈமானுடன் இறக்கவும், மறுமையில் நாயகம் (ஸல்-அம்) அவர்களின் ஷபாஅத்தின் பாக்கியம்

கிட்டவும் முயற்சியுங்கள். துவா செய்யுங்கள். ஓ! எங்களை போஷிக்கும் இறைவனே! எங்களுடைய இருலோக தேவைகளையும் பூர்த்தி செய்து உனக்கு உண்மையாக கீழ்ப்படியும் நல்லோர்களாக ஆக்குவாயாக. ஆமீன்.

## அனுஷ்டானங்களும்—வழிமுறைகளும்

பர்லு, வாஜிபு, சுன்னத் தொழுகைகளைத் தவிர அதிகப்படியாக நபில்—உபரி வணக்கங்கள், நாவினால் செய்யப்படும் அவ்ராது, வஜாயிப் முதலியவைகளையும் நியமமாகச் செய்து வருவது இருதயத்தைத் தூய்மை யாக்கக் கூடியதாகும்.

### வணக்கங்கள்

**தஹஜ்ஜுத்:-** இஷாவுக்குப் பிறகு இரவின் கடைசி பாகம் வரை வசதிப்படி இரண்டு முதல் 12 ரக்கஅத்துகள் தொழுவதாகும். திருக்குர்ஆன் மனனம் உள்ளவர் கள் நீளமாக ஓதித் தொழுவது சிறப்பு. நபிலான தொழுகைகளில் இதுவே மகத்துவம் மிக்கது.

**இஷ்ராக் :-** பஜ்ருத் தொழுகைக்குப் பிறகு சூரியன் உதய மாகி 3அல்லது 4கெஜம் உயர்ந்த பின் (20நிமிடத்துக் குப் பின்) தொழுவது. குறைந்தது இரண்டு, கூடுதல் ஆறு ரக்கஅத்.

**லுஹா:-** சூரியன் நன்கு உயர்ந்த பின் ஜவால் நேரம் வருவதற்கு முன் வரை தொழக் கூடியது. இதற்கு ஸலாத்துல் அவ்வாபீன் என்றும் சொல்லப்படுகிறது. குறைந்தது நான்கு; அதிகம் எட்டு ரக்கஅத், தஹஜ்ஜுத் நபிலுக்குப் பிறகு இதுவே மிகவும் சிறப்புடையது.

**ளைபஉஜ்ஜவால்**:- கதிரவன் உச்சியை விட்டு சாய்ந்தபின் தொழக்கூடிய நான்கு ரக்க அத்.

**அஸர் நபில்**: அஸரின் பர்ளுக்கு முன்னர் நான்கு ரக்க அத்.

**மக்ரிப் நபில்** :- குறைந்தது ஆறு. கூடியது இருபது ரக்க அத். அவ்வாபீன் தொழுகை என்று பொது மக்கள் இதனைக் குறிப்பிடுகின்றனர்.

**இஷாநபில்** :- பர்ளுக்கு முன்பு தொழும் நான்கு ரக்கஅத்.

**தஸ்பீஹ் நபில்**:- ஜும்ஆ தினத்தன்று தொழுவது சிறப்பு. இயலாவிடில் மாதம் ஒரு முறை, அல்லது வருட மொரு முறை, அதுவும் இயலாதெனில்ஆயுளில் ஒரு முறையேனும் தொழுது விட வேண்டும்.

## நபிலான நோன்புகள்

**அய்யாமுல்பீல்** :- மாதந்தோறும் பிறை 13, 14, 15 தினங்களில் நோற்பது,

**ஆறு நோன்பு** :- ஷவ்வால் பிறை இரண்டிலிருந்து ஆறு நோன்புகள் நோற்பது,

**துல்ஹஜ்ஜு நோன்பு**: - பிறை ஒன்றிலிருந்து ஒன்பது நாட்கள் நோற்பது. இயலாதெனில் அரபா தினமாகிய ஒன்பதாம் நாளில் ஒரு நோன்பேனும் நோற்க வேண்டும்.

**ஆஷூரா நோன்பு**:- முஹர்ரம் பிறை ஒன்பது, பத்து தினங்களில் நோற்பது.

நபிலான தொழுகைகள் பெரும் பயனளிப்பது போன்று இந்த நோன்புகளும் பயன் தரக் கூடியன வாகும்.

# அவ்ராது—வளாயிப்

1. திலாவத்துல் குர்ஆன் :- குர்ஆன் வுரீப் தினசரி ஓதி வர வேண்டும், குறைந்த அளவு நாற்பது நாட்களுக்கு ஒரு முறை முழுக்குர்ஆனையும் ஓதி முடிப்பது அவசியம்.

2. பஜ்ருடைய சுன்னத்துக்கும் பர்லுக்கு மிடைப் பட்ட நேரத்தில் அல்ஹம்து சூராவை 41 முறை ஓதிக் கொள்வது நலம்.

பஜ்ரு, மக்ரிபு இரு நேரத் தொழுகைகளுக்குப் பிறகு கீழ் காணும் தஸ்பீஹுகளை ஓதி வர வேண்டும். 1. சுப் ஹானல்லாஹ் 100 முறை 2. அல்லஹம்துலில் லாஹ் 100 முறை 3. லாயிலாஹ இல்லல்லாஹ் 100 முறை 4. அல்லாஹு அக்பர் 100 முறை 5. அஸ்தஃபி ருல்லா ஹல்லதீ லாயிலாஹ இல்லாஹுவல் சையிதிஞ ஹய்யுல் கையூம் வஅதூபு இலஹி 100 முறை 6. அல் லாஹும்ம ஸல்லி அலா சையிதிஞ முஹம்மதின் வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி வபாரிக் வஸல்லிம் கமா துஹிப்பு வதர்லா அதகமா துஹிப்பு வதர்லா என்ற சலவாத் 100 முறை. இத்துடன் ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ சுப்ஹானல்லாஹில் அளீம் 100 முறை. யா ஹய்யு யா கையூம் லாயிலாஹ இல்லாஅன்த அஸ்அறுக அன்துஹ்யிய கல்பீ பிநூரி மஅரிபதிக அபதன் யா அல்லாஹ் 41 முறை ஓதிக் கொள்வது நலம்.

ஒய்வு இருந்தால் தலாயிலுல் கைராத் தினமும் ஒரு மன்ஜில் ஓதி வரலாம். இஷாத் தொழுகைக்குப் பின் முன் பின் ஸலாவாத்து பதினொரு முறை ஓதி "யாஹய்யுயாகய் யூம் பிரஹ்மதிக அஸ்தகீத்" 101 முறை ஓதவும்.

ஒவ்வொரு நேரத் தொழுகைக்குப் பின்னும் சுப் ஹானல்லாஹ் 33. அல்ஹம்து லில்லாஹ் 33. அல்லாஹு

அக்பர் 34 முறைகள், லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு லஹுல் முல்க வலஹுல் ஹம்துயுஹ்யி வயுமீத் வஹுவ ஹய்யுன் லாயமூத் பியதிஹில் கைர் வஹுவ அலா குல்லி ஷையின் கதீர் ஒருமுறை ஓதிக் கொள்ள வேண்டும்

ஷைகு அவர்கள் கற்றுத் தந்த கல்பு, நாவு சம்பந்தப் பட்ட திக்ருகளை முறைப்படி செய்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். கூறப்பட்ட எல்லா அவ்ராதும் அவசியம் அல்லவெனினும் காலை மாலை தஸ்பீஹ் மிகவும் கண்டிப்புடன் செய்து வர வேண்டும்.

## ஜியாவுல் குலூபிலிருந்து கண்டெடுத்த அமுத மொழிகள்

மெய்ஞான நெறி விழையும் சாலிக்கீன்கள் சுன்னத் ஜமாஅத்தின் கொள்கைகளை பரிபூரணமாய் ஏற்று நடக்க வேண்டும். இன்றியமையாத மார்க்க சட்ட திட்டங்களை கற்றுணர வேண்டும். பின்னர் பேராசை, மேலெண்ணம், பொய், சினம், கோள், புறம் பேசல், பொறுமை, ஈயாமை, தற்பெருமை, புகழாசை, வஞ்சகம், ஆணவம் முதலிய இழிகுணங்களை விட்டும் தூய்மை பெற வேண்டும். பொறுமை, நன்றி, மனநிறைவு, நன்னம்பிக்கை, கல்வி, பரஞ்சாட்டுதல், பொருந்திக் கொள்ளுதல், ஏற்றுக் கொள்ளல், ஒப்புவித்தல் ஆகியநற்பண்புகளை தனதாக்கிக் கொள்ள வேண்டும். ஷரீஅத்தை, நபிபெருமான் (ஸல்) அவர்களின் சுன்னத்துகளை பேணி ஒழுக வேண்டும்.

பாவம் நிகழ்ந்துவிடின் நற்செயல் புரிவதன் மூலம் உடனடியாக பரிகாரம் தேடவேண்டும். ஐங்காலத் தொழுகையை இமாம் ஜமாஅத்துடன் நிறை வேற்ற

வேண்டும். அல்லாஹ்வின் திக்ரை விட்டும் சிறிதும் மறந்திருத்தல் கூடாது. திக்ரின் இன்பத்துக்காக ஷுக்ரு செய்ய வேண்டும். கஷ்பு கராமாத்துக்களை ஆசித்தல் கூடாது. தனது அந்தரங்க நிலையை, மெய்ஞான நுட்பங்களை. பிறரிடம் கூறுதல் ஆகாது. உலக செல்வங்களின் ஆசையை நெஞ்சை விட்டகற்ற வேண்டும். ஷரீஅத்துக்கு மாற்றம் செய்யும் பக்கீர்கள், தர்வேஷ்களின் கூட்டுறவை விட்டும் நீங்க வேண்டும். அவசியத்துக்கேற்ப பொது மக்களிடம் நன்முறையில் பழக வேண்டும். அனைவரினும் தன்னைத் தாழ்ந்தவனாகக் கருத வேண்டும். தர்க்க வாதங்களை தவிர்த்தல் வேண்டும். மிருதுவான முறையில் பேசுதல் வேண்டும். தனிமை, மௌனம் இவைகளைவிரும்ப வேண்டும், வீண் எண்ணங்களை விரட்டியடித்தல் வேண்டும். காலத்தை கண்காணிப்பில் வைத்தல் வேண்டும். ஒவ்வொரு மூச்சையும் பயனுடன் செலவிட வேண்டும்.

எதுவரினும் அல்லாஹ்வின் நாட்டமென்றெண்ணி அமைதி பெற வேண்டும். நேசம், பகைமை, மகிழ்வு, வருத்தம் யாவும் அல்லாஹ்வுக்காகவே இருக்க வேண்டும். சன்மார்க்க நெறிமுறைகளால் மற்றவர்களுக்குப் பயனளித்துக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு செயலிலும் இக்லாஸ் என்ற கலப்பற்ற எண்ணத் தூய்மை இருத்தல் வேண்டும்,

சோம்பல் ஏற்படுமளவில் மிதமிஞ்சி உண்ணுதலும் வணக்கத்தில் பலவீனம் ஏற்படுமளவில் குறைத்து உண்ணுதலும் கூடாது. உண்பதிலும் பருகுதலிலும் நடுநிலையை மேற்கொள்ள வேண்டும் ஹலாலான- அனுமதிக்கப்பட்ட வழியில் பொருளீட்ட வேண்டும். அல்லாஹ்விடத்தன்றி எவரிடமும் அச்சமோ ஆதரவோ கொள்ளுதல் கூடாது. அல்லாஹ்வின் தேட்டத்தில் அமைதியிழந்தவராயும். ஆர்வமிக்கவராயும் இருத்தல் வேண்டும். அருட்பாக்

கியங்களுக்கு நன்றி செலுத்தியவாறு வாழ்தல் வேண்டும். ஏழைமை, வறுமை, பசி தாகம் ஆகியவற்ருல் மனம் தளருதல் கூடாது. பொறுமையை மேற்கொள்ள வேண்டும்.

தம்மவர்களுடன் அன்புடன் உறவாட வேண்டும். அவர்களின் குற்றங் குறைகளை மன்னித்தல் வேண்டும். தம் குற்றங்களுக்காக அவர்கள் கூறும் சமாதான வார்த்தைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். பிறர் குறைகளை மறைத்து தன் குற்றங்களை நோட்ட மிட வேண்டும்.

விருந்தினர்களை உபசரித்தல் வேண்டும். வழிப் போக்கர்களை— முசாபிர்களை ஆதரித்தல் வேண்டும். ஏழைகள், ஆலிம்கள், சாலிஹீன்கள் ஆகியோர் நட்புறவை விரும்ப வேண்டும். தனது நலனை விட பிறர் நலனை பெரிதாகக் கருத வேண்டும். பசி தாகம் விரும்பத் தக்கதாகி விட வேண்டும். மிதமான சிரிப்பும், அதிகமான அழுகையும் இயல்பாகி விட வேண்டும்.

அல்லாஹ்வின் தண்டனை பற்றிய அச்சம், தண்டிப் பதில் அவனது நிர்த்தாட்சண்யம் பற்றிய நடுக்கம் ஏற்பட வேண்டும்.

தனது மரணத்தைப் பற்றிய சிந்தனை இடையருது இருத்தல் வேண்டும். தன் செயலைப்பற்றிய விசாரணையை தினமும் தானே செய்து வரவேண்டும். நல்ல அமல்களுக்காக பாவ மன்னிப்பு கோர வேண்டும்.

மெய் மொழிதல், ஹலாலானதை உண்ணல் வழக்கமாகி விடவேண்டும். ஷரீஅத்துக்குப் புறம்பான சபைகளுக்குச் செல்லுதல் கூடாது. பித்அத்தான, மூடத்தனமாக சடங்குகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நாணம், நன்னடத்தை, நல்லிணக்கம், கண்ணியம், பொறுமை, அளவுடன் பேசுதல், சஞ்சலம் கொள்ளாமை,

ஆகிய அழகிய பண்புகளே மேற்கொள்ளுதல் வேண்டும். இத்தகைய சிறந்த குணங்கள் தன்னிடம் வந்தமை எண்ணி பெருமை கொள்ளல் ஆகாது.

கண்ணியம் மிக்க வலிமார்கள், ஷைகுகள், அடங்கத் தலங்களுக்குச் சென்று ஜியாரத் செய்ய வேண்டும். அவர்களின் ரூஹுகளுக்கு நன்மைகளே அன்பளிப்பு செய்ய வேண்டும். இதன் மூலம் தானும் பரக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவகாசமிருப்பின் அவர்களின் கபுரருகில் அமர்ந்து அவர்களது ரூஹின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அவர்களது உருவைத் தன் ஷைகின் உருவில் வைத்து நோட்டமிட வேண்டும். அவ்வப்போது முஸ்லிம்களின் பொதுவான கப்ருஸ்தானுக்குச் சென்று தனது மரணத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும்- பாதிஹா முதலியன ஓதி தவாபை அங்கு அடங்கியுள்ளோரின் ஆத்மாக்களுக்கு ஹதியா செய்ய வேண்டும். வழிகாட்டும் ஷெய்கின் கட்டளையை பூரணமாய் ஏற்று செயல்பட வேண்டும்.

இறுதி மூச்சுவரை தீனில் நிலைத்திருப்பதற்காக எப்பொழுதும் துஆச் செய்துகொண்டிருக்க வேண்டும்.

# பரிசுத்த ஷஜரா—வசீலாப் பாமாலை

அல்லாஹ் உனக்கே பெருமை யாவும்
அண்ணல் முஹம்மதர் மீதுஉன்
நல்ல சலவாத் தும்ச லாமும்
நாளும் பொழிந்தருள் றப்பனு

உந்தன் நேசர் அவுலி யாக்கள்
ஓங்கும் புகழ்நபி தோழர்கள்
அன்பி யாக்கள் பொருட்டி னுல்உன்
அன்பைத் தந்தருள் றப்பனு.

அகத்தின் நோய்க்கரும் மருந்து கூறிடும்
அறிஞ ராம்குலாம் முஹம்மது
ஹகீம் பொருட்டினுல் நோய னைத்தையும்
அகற்றி வாழ்வருள் றப்பனு.

அகந்தெ ளிந்திட திக்ரெ னும்உயர்
அமுதம் தந்தகா ஜாபஷீர்
அஹ்ம தர்பொருட் டாலே தீமைகள்
அற்ற வாழ்வருள் றப்பனு

கதிய ளித்திடும் வாழ்வு இதுவெனக்
காட்டி டும்ஹுசைன் அஹ்மது
மதனி பொருட்டால் மாசி லாதநன்
மதியைத் தந்தருள் றப்பனு.

அரிய கலிமாப் பொருள்து லக்கிடும்
ஆரி பாம்ரஷீத் அஹ்மதர்
பொருட்டி னுலே எங்கள் வாழ்வை
புனித மாக்கிடு றப்பனு.

குதுபுல் ஆலம் இம்தா துல்லா
குணம்சி றந்தோர் பொருட்டினால்
இதயம் முழுதும் ஞான ஒளியில்
இலங்கி டச்செய் றப்பனா.

நூர்மு ஹம்மது வலிபொ ருட்டால்
நப்ஸின் ஆசைகள் நீக்கியே
சீர்து லங்கும் தூய வாழ்வில்
திகழச் செய்வாய் றப்பனா.

சீல ராம்அப் துர்ற ஹீம்எம்
ஷெய்கு நாயகர் பொருட்டினால்
கால முழுதும் உந்தன் திக்ரில்
கழிய அருள்வாய் றப்பனா.

அன்பு சிறந்த அப்துல் பாரி
அருந்த வத்தோர் பொரு ' டினால்
இன்பம் யாவும் திக்ரில் காணும்
ஏற்றம் அருள்வாய் றப்பனா.

சிறந்த ஞானி அப்துல் ஹாதி
சீர்பொ ருட்டால் நெஞ்சினில்
உறைந்த இருளை ஓட்டி ஞான
ஒளியை ஏற்று றப்பனா.

அலுதுத் தீன்ஷா அரிய ஞானி
அவர்பொ ருட்டால் எம்அமல்
நலிவி லாத இஃலா சுடனே
நடக்க அருள்வாய் றப்பனா.

அல்லாஹ் அல்லாஹ் எனமு ழங்கும்
அமுத நாவைத் தந்தருள்
நல்லோர் புகழும் ஷாஹ்மு ஹம்மது
நாதர் பொருட்டால் றப்பனா.

ஷாஹ்மு ஹம்மதீ ஞான நாயகர்
சால்பி னுலே எங்களின்
தேக மெல்லாம் உந்தன் அன்பில்
சிலிர்த்தி டச்செய் றப்பனு.

முஹிப்பில் லாவென் றுளிர்ந்த ஞானி
முகத்தி னுக்காய் நாளும்உன்
புகழ்நி னைந்து கனிந்து நெஞ்சம்
பொலியச் செய்வாய் றப்பனு.

அகந்தி றந்த ஞான நாதர்
அபூஸ யீதின் பொருட்டினுல்
மிகுந்த அன்பால் உன்னில் மூழ்கும்
மனம ருள்வாய் றப்பனு.

ஷாஹ்நி ஜாமுத் தீன்என் றேதும்
சற்கு ணத்தார் பொருட்டினுல்
மேகம் குடையிடும் நபிபி ரான்வழி
முறைந டத்திடு றப்பனு.

ஷாஹ்ஜலாலுத் தீனும் எங்கள்
சாந்த சீலர் பொருட்டினுல்
ஆக மங்கள் போற்றும் நபிகோன்
அன்பில் நுழைத்திடு றப்பனு.

குதுபு நாதர் அப்துல் குத்தூஸ்
கருணை யாளர் பொருட்டினுல்
இதயம் உந்தன் அன்பில் உருகி
இதம்பெ றச்செய் றப்பனு.

ஷெய்கு முஹம்மத் வலிபொ ருட்டால்
சாரும் வறுமை சஞ்சலம்
மெய்வ ருத்தும் பிணிகள் யாவும்
மாற்றி யருள்வாய் றப்பனு.

தவம்சி றந்த ஷெய்கு அஹ்மது
தம்பொ ருட்டால் தூயவர்
உவந்து மகிழும் நபிகள் நாதர்
உவப்பை அருள்வாய் றப்பனு.

அல்லும் பகலும் உந்தன் நினைவால்
அகங்க னிந்திட அருளுவாய்
நல்லோர் அப்துல் ஹக்கு ஞான
நாதர் பொருட்டால் றப்பனு.

ஷாஹ்ஜ லாலுத் தீன்க பீர்நற்
சால்பு மிக்கோர் பொருட்டினுல்
வாகை சேர்நபி நாதர் வழியில்
வளமு றச்செய் றப்பனு.

உந்தன் இஷ்க்கில் எங்கள் உள்ளம்
உருக அருள்வாய் நல்வழி
தந்த மேலோர் ஷம்சுத் தீனின்
சீர்பொ ருட்டால் றப்பனு.

பார்வை யாலே குபிரைத் தீய்க்கும்
பாங்கி னர் அலாவுத்தீன்
சீர்பொ ருட்டால் உன்ஷு ஹூதில்
திளைத்தி டச்செய் றப்பனு!

ஷக்கர் கன்ஜ்ஜென் றினிக்கும் பேரார்
ஷாஹ்பரீதித் தீனுக்காய்
ஹக்கை ஹக்கென் றறியும் ஞானம்
அருளிக் காப்பாய் றப்பனு!

குதுபுல் ஆலம் எனமி ளிர்ந்த
குதுபுத் தீன்சீர் பொருட்டினுல்
விதியை நல்ல விதிய தாக்கி
வெற்றி வாழ்வருள் றப்பனு

வலிகள் கோமான் அஜ்மீர் காஜா
முயினுத் தீன்சீர் பொருட்டினுல்
மலியும் இன்ப மஅரி பாவின்
மலர்ச்சி யருள்வாய் றப்பனு!

எங்கள் நெஞ்சம் உந்தன் திக்ரில்
இணையில் இன்பம் எய்திட
திங்கள் வதன உதுமான் பொருட்டு
திருவ ருள்செய் றப்பனு.

ஜிந்த னீவாழ் ஹாஜி ஸய்யித்
ஷரீப்அ வர்தம் பொருட்டினுல்
பந்தீ பாசம் நீங்க உந்தன்
பற்றை யருள்வாய் றப்பனு

மெய்யை மெய்யென் றுணர்ந்த மேலோர்
மஸ்தூத் சிஷ்த்தி பொருட்டினுல்
செய்யும் அமல்கள் உன்றி லாவின்
தகுதி பெற அருள் றப்பனு.

அபூ யூசுப் நாதர் பொருட்டால்
அகமும் புறமும் சீர்பெற
நபிகள் கோமான் ஷரகில் நாளும்
நடக்க அருள்வாய் றப்பனு.

மேவும் கீர்த்தி பூமு ஹம்மத்
மலர்மு கத்தார் பொருட்டால்
நாவும் நெஞ்சும் திக்ரில் இணைந்து
நலம்பெ றச் செய் றப்பனு.

குபிர ழிந்து தீன்வ ளர்ந்து
குவல யம்பெரு வாழ்வுற
அபூ அஹ்மத் அப்தால் பொருட்டால்
அன்பு கூர்ந்தருள் றப்பனு

எங்கள் நாட்டம் தேட்டம் யாவும்
ஏகன் உன்மேல் நிலேத்திட
பொங்கும் புகழ்சேர் அபூ இஸ்ஹாக்
பொருட்டி ஞல் அருள் றப்பனு

மம்ஷாத் அலவி என்ற ஞான
மணியர் திலகம் பொருட்டினுல்
இம்மை மறுமைப் பேற னைத்தும்
இனிது தந்தருள் றப்பனு

மறைதெ ளிந்தோர் அபூஹு பைரா
மாட்சி யாளர் பொருட்டினுல்
நிறையும் உந்தன் அன்பில் அழியும்
நிறைவைத் தந்தருள் றப்பனு.

அண்ணல் ஹுதைபா மர்அ ஷியாம்
அகந்தெ ளிந் தோர் பொருட்டினுல்
கண் ணும் கல்பும் உன்ஜ மாலேக்
காண அருள்வாய் றப்பனு

அரசு துறந்த ஞான வேந்தர்
அத்ஹம் புதல்வர் இபுராகீம்
பொ ருட்டி ஞலே இஹ்சான் என்றும்
பெருநி லேயருள் றப்பனு.

இயாலின் மகனுர் புலேலு ஞான
ஏந்த லாரின் பொருட்டினுல்
நியம மான அமலால் உந்தன்
நேசம் பெற அருள் றப்பனு.

அப்துல் வாகிது பர்து நாயகர்
அன்பர் பொருட்டால் உன் ஹபீப்
நபிகள் நாதரை நனவில் கண்டிட
நல்ல ருள்புரி றப்பனு

அஸ்பி யாவென் றுயர்ந்த சீலர்
ஹஸனுல் பசரி பொருட்டினுல்
நசையி லாநன் மறையின் மெய்ப்பொருள்
நன்கு ணர்த் திடு றப்பனு.

அஹ்ம தெங்கோன் அன்பு மருகர்
அலி எம் பெருமான் பொருட்டினுல்
புகழ் சேர் உந்தன் திருரி லாவாம்
பொருத்தம் அருள்வாய் றப்பனு

அருளின் நாயகம் நபிகள் நாயகம்
அன்பு நாயகம் முஹம்மதர்
திருமுகத்தினுக் காக உன் சீர்
திருலி காவருள் றப்பனு

எங்கள் பாவம் எண்ணி லாதவை
எனினும் நின்னருள் பெரியதாம்
பொங்கும் அவ்வருள் றஹ்மத் தால் பிழை
பொறுத்துக் காத்தருள் றப்பனு

இறைஞ்சி டும்யாம் பாவி கள்தாம்
இலாஹு நீயோ அல்கபூர்
வரம்பி லாவுன் அருளால் பிர்தவ்ஸ்
வாழ்வ ருள்வாய் றப்பனு

முரண்ப டும் செயல் விட்டு நின்மறை
முறையைப் பேணியாம் வாழ்ந்திட
திருமு ஹம்மதர் தீன் செ ழித்திட
திருவ ருள்புரி றப்பனு

வருத்தும் நோயற நற்சு கம்தரு
வாழ்வும் ஹலாலெனும் செல்வமும்
கருத்தி ணங்குநன் மக்க ளோடருள்
கனியும் வாழ்வருள் றப்பனு.

ஜின்கள் ஷைத்தான் தீங்குடன் கொடும்
ஸிஹ்ரு மெமையணு காமல் உன்
அன்புடன் அருள் பொங்கும் வாழ்வினை
அளித்துக் காத்தருள் றப்பனு.

திக்ரு செய்யவும் நாங்கள் அதிகமாய்
தொழுதுனைப் புகழ்ந்தேத்தவும்
ஷுக்ரு செய்யவும் நீண்ட ஆயுளைத்
தந்தருள்புரி றப்பனு

அன்னை தந்தையர் இல்மு தந்தவர்
அன்பு மனைவியர் மக்கள் இம்
மண்ணில் வாழ்முசு லிம்கள் யாவர்க்கும்
மஃபிரத்தருள் றப்பனு

நபிகள் நாதரின் நற்ஷபா அத்தால்
நரகை விட்டெமைக் காத்தருள்
சுவன வாழ்வினில் உன்ஹபீப்திரு
சமுகம் சேர்த்திடு றப்பனு

மஃபூதும் நீ மத்லூபும் நீ
மக்சூதும் நீ இணையறும்
மஃஷூகும் நீ நெஞ்சமார்ந்த
மஹ்பூபும் நீ றப்பனு

மஹ்பூப் உந்தன் அன்பையல்லால்
மற்றனைத்தும் நீங்கிட
ம அரி பாவின் சுடரால் நெஞ்சம்
மலரச் செய்வாய் றப்பனு.

அன்பு முஹம்மதர் அஹ்லபைத்தினர்
அருமை சஹாபிகள் மீதுஉன்
இன்ப சலவாத்தும்சலாமும்
என்றும் பொழிந்தருள் றப்பனு

புகழும் பெருமையும் ஆட்சி வலிமையும்
பொழியும் கருணையும் உடையவுன்
புகழிசைத்திடச் செய்தவுனைதினம்
புகழ உதவிசெய் றப்பனு

## குறிப்பு

ஹஜ்ரத் காஜா (ரஹ்) அவர்களின் கலீபாக்களில் (1) ஆரணி கமாலுத்தீன் ஹஜ்ரத் (2) திருச்சி டவுன் காஜி சையத் அப்துல் கனி ஹஜ்ரத் ஆகியோரிடம் பைஅத் பெற்றவர்கள் இந்த ஷஜராவின் மூன்ருவது செய்யுளுக்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடும் செய்யுள்களில் தங்களுக்குரியதை படித்துக் கொள்வார்களாக.

(1) காமி லான ஷெய்கு ஆலிம்
கமாலுத் தீன்பொ ருட்டினல்
தீமை நீங்க நெஞ்சில் ஞான
தீபம் ஏற்று றப்பனு

(2) •அப்தி யத்தால் உன்னை யணுகும்
அகமி யத்தைக் கூறிடும்
அப்துல் கனிஎம் ஷெய்கு பொருட்டால்
அரவ ணைத்த ருள் றப்பனு

ஹக்கில் உம்மத் மௌலானா அஷ்ரப் அலி தானவி (றஹ்) அவர்களின் கலீபாவான கீரனூர் மௌலானா மௌலவி முஹம்மது ஸயீத் (றஹ்) அவர்களிடம் பை அத் பெற்றவர்கள் இந்த ஷஜராவின் 3, 4, 5, 6, செய்யுட்களுக்குப் பகரமாக கீழ் குறிப்பிடும் இரண்டு செய்யுட்களை மட்டும் வாசித்து 7வது செய்யுளிலிருந்து தொடர்ந்து கொள்வார்களாக.

மறை தெளிந்தவர் வாழ்த்தும் எம்குரு
முஹம்மது ஸயீத் பொருட்டினல்
கறைகள் நீங்கிய வாழ்வு தந்தெமைக்
காத்த ருள்புரி றப்பனு
ஞான நூல்களோர் ஆயிரம் தந்த
ஞானி யாம் அஷ ரப்அலி
தான வீயவர் பொருட்டி னல் மனத்
தெளிவைத் தந்தருள் றப்பனு

# பிழை திருத்தம்

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 12 வரி 11 | உமிழ்நீர் | உமிழ்நீர் |
| 〃 | பழக்கத்தால் | பரக்கத்தால் |
| 14 வரி 3 | சாஜா காஹிப் | காஜா சாகிப் |
| 33 வரி 5 | கதீஜா (ரஹ்) | கதீஜா (ரலி) |
| 38 வரி 26 | பசுக்களை பிரியருடன் | பிரியமுடன் |
| 77 வரி 4 | மஃரிப் நயில் | நபில் |
| 78 வரி 13 | சையிதினு என்ற வார்த்தையை நீக்கிப்படிக்க வேண்டும். | |
| 78 வரி 18 | வபிஹம்தீஹீ | வபிஹம்திஹி |
| 78 வரி 20 | அஸ் அறுக | அஸ் அலுக |

250
7B
2-144